பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

மே 2022



நேர்காணல் பக்கம் 17

**மலேசியாவில் வாழ்ந்து வரும் பாவலர் தமிழறிஞர் சிமா.இளங்கோ அவர்களுடன்...**

**கவிப்புயல்**

**பாத்திமா ஸஹீரா நிஸ்ஃபர்**

அறிமுகம்

பக்கம் 79

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – மே 2022

605

ஆசிரியர் / வெளியிடுபவர் :

**அமின் மொஹமெட்**

இணையாசிரியர் :

**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**

நிர்வாக ஆசிரியர் :

**சஃபி மொஹமெட்**

ஆசிரியர் குழு :

**ஹிப்ஸுர் ரஹ்மான்**

**கவிஞர் பாலமுனை பாறூக்**

**கவிஞர் நெல்லை உலகம்மாள்**

**பாவலர்மணி இராம வேல்முருகன்**

**கவிஞர் தென்றல் கவி**

**வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்**

**கவிஞர் பொன்மணிதாசன்**

**கவிஞர் அ. முத்துசாமி**

**கவிஞர் ஈழபாரதி**

ஆலோசகர்கள் :

**பாட்டரசர் கி. பாரதிதாசன்**

**கவிதாயினி சக்தி ஜோதி**

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

உழைப்பின் பெறுமதி அறிந்தவர்களுக்கு அது உயர் வெகுமதியைப் பெற்றுத்தரும். உலகமெங்கும் உள்ள உழைப்பாளிகள்(ளை) கொண்டாடும் தினமானது உன்னத உழைப்பிற்கு கிடைக்கும் மாபெரும் வெற்றியே! உண்மையில் உலகம் இயங்குவது உழைப்பாளிகளின் கைகளில் தான் தங்கியுள்ளதென்றால் அது மிகையில்லை. என்னதான் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் சாதனை படைத்துக் கொண்டிருந்தாலும் அதன் உருவாக்கத்தின் பின்னால் இருப்பதும் பல உழைப்பாளிகளின் கடின உழைப்புதான். ஆகவே உழைப்பின் மகத்துவத்தை மனதில் இருத்திக் கொண்டாடுவோம். உலகம் உய்ய இன்னும் கடினமாக உழைப்போம்.

அத்துடன் மாண்புடைய நோன்பை நோற்று முடித்து, இப்புனித காலத்தில் ஏழைகளின் பசியை பணக்காரரும் உணரச் செய்து, பல்வேறு நற்காரியங்கள் மூலம் நன்மைகளை அதிகமதிகம் செய்ய வைத்த நோன்புக்கு நன்றி கூறி விடையளித்து, நோன்புப் பெருநாளைக் கொண்டாடத் தயாராகக் காத்திருக்கும் அன்பு நெஞ்சங்களுக்கு இதயங்கனிந்த ‘ஈதுல் பித்ர்’ நல்வாழ்த்துகள்! உழைப்பாளிகள் அனைவருக்கும் நல்வாழ்த்துகள்!

நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)



# வருத்தப்பட்டு பணம் சம்பாதித்தவரே...
# எங்களிடம் வாருங்கள்



கல்விக் கடைகளின்
வயிற்றை நிரப்ப
கல்விக் கடனுக்கு அலைகிறார்கள்
மாணவர்கள்

வசதியானவர்கள்
வாரிக்கொடுத்துவிட்டு
வந்துவிடுகிறார்கள்
வசதியற்றோர் வாடித் தவிக்கிறார்கள்

எளிமையினால் ஒருவனுக்குக்
கல்வி இல்லையே என
ஒருவரும் நாணவில்லை

பல்வேறு வகையான
பட்டங்களை விற்பனை செய்யும்
தனியார் பல்கலைக் கடைகளின்
கல்லாக்களின் முன்
அமர்ந்திருக்கிறாள்
சரஸ்வதி

எந்த ஊமையின் நாக்கிலும்
எழுத்தாணி கொண்டு எழுதவில்லை
'கல்வித் தந்தைகள்'

வியாபாரத்தில் வெற்றி பெற்று
பல கடைகளைத் திறப்பவர்கள்
கல்வித் தந்தையாகிறார்கள்

அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கே
சிறந்த கடைகளில் சரக்கு வாங்கும்
"கட் ஆப்" வரம் கிடைகிறது

ஏராளமான கடைகளுள்
எந்தக் கடையைத்
தேர்ந்தேடுப்பது என்பதற்கே
எவ்வளவோ
படிக்கவேண்டியிருக்கிறது
பெற்றோரும் மாணவர்களும்

கடைகள் ஏராளமாகிக்
கடும்போட்டி ஏற்பட்டுவிட்டதால்
விசாலமாய் வீசப்படுகிறது
விளம்பர வலை

சிக்கித் தவிக்கும் மாணவர்கள்
தேற முடியாமல்
தேம்பி அழுகிறார்கள்
பாடங்கள் புரியாமல்
பரிதவிக்கிறார்கள்

தமிழகத்தின் இலவசங்களால்
முதலில் பாதிக்கப்பட்டது
கல்வியும் வேளாண்மையும்தான்

அரசியல்வாதிகளின் அமோக
வளர்ச்சிக்குக்
கல்விக் கடைகளே
கணிசமான பங்கு வகிக்கின்றன

எல்லா இலவசங்களின் நோக்கமும்
வாக்கு வங்கியே ஒழிய
கல்வியோ, வளர்ச்சியோ அல்ல

வளாகத் தேர்வென்னும் வசீகரம்
கால்பங்குப் பேருக்கு
வேலை வாய்ப்பைத் தந்துவிட்டு
முக்கால்பங்குப் பேரை
மூலையில் வீசுகிறது

கரன்சிகளால் நிரம்பி வழிகிறது
கல்விக் கடைகள்
"அரியர்"களால் நிரம்பிவழிகின்றனர்
மாணவர்கள்

**- பாவலர் வையவன்**

# இதுதான் வாழ்க்கை



வெட்டப்பட்ட மரம் வேர்களுடன்
செல்லரித்து நின்றது

ஒரு காலத்தில் குளிர்ந்த நிழல் ஈந்தது
நிறைய பழங்களுடன் காய்களுடன்
குலுங்கிச் சிரித்தது

எப்போதும் அதனடியில்
பெரிய ரசிகர்கள் கூட்டம் நிரம்பி இருக்கும்..

இப்போதோ மொட்டை மரம் அது
பறவைகளோ மனிதர்களோ
கிட்டே வருவதில்லை

அதன் பலனையும் நினைத்துப்
பார்ப்பதும் இல்லை

வான் மேகம் மழை பொழிய உதவியது
நிலத்துடன் பிணைந்த இணைப்பு
உயிர்ப்புடன்
தற்போதோ உயிரற்றப் பிடிப்பு
வேதனைப்பட்டது மரம்...

இருக்கும் வரைதான் சுற்றி வருவார்கள்
கண்ணே பொன்னே என்று
இல்லையென்றால் யார் நீ என்பது போல்தான்
இதுதான் உலகம்

உணரக்கற்றுக் கொள்ளுங்கள்
தேவைகள் இல்லையெனில்
சீண்டிப்பார்க்கக் கூட
ஆள் இராது....
இதுதான் வாழ்க்கை...

ஆனாலும் மரம் தன்கிளை
எங்கேனும் வளரலாம் தன்னைப்போலவே
பலன் தரலாம்
என்று எண்ணிக்கொண்டு
அமைதிகாத்தது

வேறென்ன செய்யும்
அது ?..பாவம்...



- தென்றல் கவி

# அப்பா-அம்மா

தோள் கொடுக்கும்
தோழமை இவர்
கனவுகள் தோற்காது
நனவாக்கும் நட்பாளர் (அப்பா)

கருவறை வைத்து
காக்கும் தெய்வம்
உருவெடுத்து வந்தால்
தருவென நிழலாகும் (அம்மா)

கண்டிக்கும் ஆசானாய்
வழிக் காட்டுவார்
தன் அனுபவத்தின்
அறிவை ஊட்டுவார் (அப்பா)

அன்பைக் காட்டி
அமுதை ஊட்டுவார்
பண்பைச் சொல்லி
பக்குவமாய் வளர்ப்பார் (அம்மா)

மகவுகளின் கண்களில்
மகிழ்ச்சிப் பூக்கள்
வாடாமல் இருக்க
வாடி நிற்பார் (அப்பா)

தன்னை வருத்தி
மகவுகளை பேணுவார்
மனதில் நிதமும்
இறைவனிடம் வேண்டுவார் (அம்மா)

நலமின்றி போக
நாளும் துடிப்பார்
நலம் பெறவே
தன்நலம் கெடுவார் (அப்பா)

பசியடக்கி இருப்பார்
பசி போக்குவார்
நசியாது காக்கும்
நம் உயிரவள் (அம்மா)

அறிவுடை தந்தையாய்
அரவணைத்து நிற்பார்
மறிக்கும் தடைகளை
உடைத்திடும் சக்தியாவர் (அப்பா)

அறவுரை சொல்லும்
ஔவையாய் இருப்பார்
திறமதை வளர்க்கும்
தோழியாய் இருப்பார் (அம்மா)

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

## *திருமூலர் புராணத்தின் ஒற்றைவரி*

*இயக்குனர் டி ஆர் உடனான
முன்னொரு சாவகாச சந்திப்பில்
அவரிடம் நான், உங்க பாடல்களில்
எனக்குன்னு அதீதமாக பிடித்த
பட்டியல்னு இருக்கு... அதில்,
தண்ணீரிலே மீனழுதால் பாட்டும்
ஒண்ணுன்னு சொல்லிவிட்டு,
கவிஞர். கண்ணதாசன் எழுதிய
பிரபலபாடல்கள் சிலவற்றுக்கு
பின்னணி காரணம் இதுவென்று
அவர் சொல்லியதாக பத்திரிக்கைகளில்
படித்திருக்கிறேன். அதுபோல்
உங்க இந்த பாட்டு எந்த சூழலில்
எழுதினீர்கள் என்று கேட்டுவிட்டு
அவரை நோக்கினேன்..*

*அவர் சொன்னது..
நான் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த
வயதில் திருமூலர் மொழியுரை
வீட்டில் பெரியவங்க வாசிக்க
கேட்டிருக்கிறேன். அவற்றில் பல
என் மனதில் வார்த்தைகளாய்
கூடுகட்டிக்கொண்டதும் உண்டு. அதில்
ஒரு வார்த்தைதான் தண்ணீரிலே
மீனழுதால்..*

*மைதிலி என் காதலி கதைக்களம்
உருவாகிக்கொண்டிருந்த காலத்தில்
நான் ரொம்ப பிஸியாக இருந்தேன்.
ஒருசமயம் சென்னை ஏவிஎம்
ஸ்டூடியோவிலிருந்து காரில் வீட்டுக்கு
திரும்பிக்கொண்டிருந்தபோது.. பெரும்
மழை ஒன்று பிடித்துக்கொண்டது..
அப்போது கதாநாயகியை நினைத்து
கதாநாயகன் வாடும் பாடல்
வரிகளை எழுத கற்பனையில்
தேடிக்கொண்டிருந்த எனக்கு..
திருமூலர் புராணத்தின் ஒற்றைவரி
மனதில் தொற்றிக்கொண்டது... அவர்
வரிபிடித்து என்வழியில் நான் எதுகை
மொழிபிடித்து முடித்ததுதான் இந்த
பாடல்னு அவர் சொல்லி முடித்தார்.*

**கஜ்னி அய்யூப்**

# எத்தனை அழகு

சிரிக்கும் போது சிதறும் அழகு
சிந்தனை வந்தால் முகமும் அழகு
விழிகள் பேச மொழியும் அழகு
வியக்க வைக்கும் விந்தை அழகு

நடையில் பயிலும் நாட்டியம் அழகு
நவிலும் சொற்கள் மொழியின் அழகு
கலையில் மிளிரும் கற்சிலை அழகு
கண்கள் ரசிக்கும் காட்சியும் அழகு

கோபம் வரவே கோதை அழகு
கோயில் சிற்பம் கோடி அழகு
படிக்கக் கவரும் பண்பின் அழகு
பறித்த ரோசா தலைக்கு அழகு

கவிதை கேட்கச் சொற்கள் அழகு
குரலில் குயிலும் கூவும் அழகு
அலையும் வந்து அடிக்க அழகு
அன்பை விதைக்க அவளும் அழகு

குழந்தை சிரிக்க குடும்பம் அழகு
குணமும் பண்பும் குன்றின் அழகு
நண்பர் மகிழ நட்பு அழகு
நன்மை செய்ய நன்றி அழகு

உறவின் நெகிழ்ச்சி உண்மை அழகு
உள்ளம் மகிழ ஊரும் அழகு
கள்ளம் இல்லா உள்ளம் அழகு
கபடு வாரா மனமும் அழகு

நிலவின் ஒளியில் இரவும் அழகு
நித்திரை காண உறக்கம் அழகு
பறந்து திரியும் பறவை அழகு
பச்சைக் கிளியின் பேச்சில் அழகு

ஓடிவரும் நதியின் அழகு
ஓடம் ஏற நீரும் அழகு
விளைச்சல் பெருக வயலும் அழகு
விவசாயி சிரிக்கப் பிறவி அழகு!

**வா.சண்முகம்.**
கும்பகோணம்.



# செல்லமே

அலைகடலே பொழிலழகே
அணிமலரே மானே - உனை
அணைத்திடவா நானே - மனம்
அறிந்திடவா தேனே - உடன்
அழகுநிலா இரவுதனில்
அசைபிரிக்கின் றேனே - அணைத்(து)
அருகுறங்கு வேனே ....

தணலெரியும் உடலருந்தத்
தகுந்தயிடம் எங்கே - உடன்
தழுவுகிறேன் அங்கே - இடை
தளர்திவிடாய் பங்கே - அட
தளதளப்பும் மினுமினுப்பும்
தனித்திருக்கும் சங்கே - சுவை
தருகிறபெண் நுங்கே ....

வளருகிற மனச்சுமையை
வழியவிடு பெண்ணே - எனை
வறுத்தெடுக்கும் கண்ணே - பனி
வனக்குளிரின் முன்னே - மதி
வரும்பொழுதில் விளக்கணைத்து
வதைத்திடவா மின்னே - அது
வளருமடி முன்னே ....

தனிமையெனில் கசக்குதடி
தனிமயிலே வாடி - உளம்
தனில்கனவும் கோடி - அதைத்
தவிற்பதுவா மூடி - அட
தசைச்சிலையுன் மணியசைய
தவழுமடி வாடி - சுகம்
தருவதில்நான் கேடி ....

.

– ஏடி வரதராசன்

# துப்பு

**செல்லமுத்து பெரியசாமி**

இது ஒரு அறுபத்தஞ்சு வருசத்துக்கு மொதல்ல நடந்தது. அப்பவெல்லாம் போலீசு கடமையே கண்ணா இருந்த காலம். அன்றைய கோயமுத்தூர் ஜில்லா அன்றைய திருச்சி ஜில்லாவைச் சந்திக்கும் எல்லையில ஒரு சிறு கிராமம். அந்தக் கிராமத்துல ரெண்டுமூனு நாளா குசு குசுன்னு ஒரே பேச்சு.

அந்த ஊருக் கவுண்டரு தோட்டத்துச் சாலைலயே வீட்டுச் சனத்தோட தங்கிக்கிட்டு விவசாய வேலைகளக் கவனிச்சுக்கிட்டு இருந்தாரு. காலைல கெழக்கு வெளுக்கவே எந்திரிச்சு மாட்டுக்கெல்லாம் தீவனம் போட்டுட்டுப் பாலக் கறந்து கொண்டாந்து திண்ணமேல வெச்சுட்டுக் காப்பி குடிக்கறதுக்காகக் காத்துக்கிடிருந்தாரு.

கெணத்துக்குப் பக்கத்திலயே சீமையோடு போட்ட சாலை. அதுக்கு முன்னால பெரிய களம். அந்த வருசம் மழ மாரி நல்லாப் பேஞ்சு நல்ல செழிப்பா இருந்துது! அது தைமாசம்கறதால களத்துல பொறிச்சுப் போட்ட தட்டக் காயி, பாசிப்பயித்தங்காயின்னு காய் கசம்புக நெறயக் கெடந்துது. களத்தோட ஒரு மூலைல எள்ளுச்செடியப் புடுங்கி ஒரு பெரிய குந்தானாப் போட்டு வெச்சிருந்தாங்க.

களத்துல கெடந்த அந்தக் கயித்துக் கட்டலுல அவரு கெழக்குமின்னா உக்காந்திருந்தாரு. அவரு கொஞ்சம் படிச்சுமிருந்தாரு! வெளிவட்டாரத்துல நெறையப் பழக்க வழக்கமுண்டு! கவர்மென்டு அதிகாரிக யாரு வந்தாலும் நேரா அவரு வீட்டுக்குத்தே வருவாங்க. வர்றவங்கள நல்லா உபசரிப்பது அவரது வழக்கம்.

அவங்க தோட்டத்தோட கெழக்கு ஓரமா வண்டிப் பாதை ஒன்னு உண்டு. அது நேராக் களத்து வரைக்கும் வரும். அதுலபாத்தா திடீருன்னு குதிரை வண்டி ஒன்னு வந்துது. (அப்பல்லாம் குதிரை வண்டிதான்! காரெல்லாம் அதிகமாப் புழக்கத்தில இல்லை) அதிலிருந்து எஸ்ஸையும் ஒரு போலீசும் எறங்குனாங்க. அவங்களப் பாத்து, "சார் வாங்க! வாங்க! என்னங்க சார் இந்த நேரத்துல?" அப்டீன்னு கேட்டுக்கிட்டே இன்னொரு கட்டல எடுத்துப் போட்டு, "உக்காருங்க சார்!" அப்டீன்னாரு. அவங்களும் உக்காந்தாங்க! இவுங்க பேசற சத்தம் கேட்டு கவுண்டரோட சின்னமக தூக்கக் கலக்கத்தோட எழுந்து வந்தது. அதக் கூப்புட்டு தன் பக்கதுல உக்கார வெச்சுக்கிட்டாரு எஸ்ஸை! அது, சின்னக் கொழந்தையா இருந்தாலும் எல்லார் கிட்டயும் தயக்கமில்லாமப் பெரிய மனுஷி மாதிரி பேசும். கொஞ்சம் வாயாடின்னே வெச்சுக்கங்களே!

அதுக்கு ஒரு அஞ்சு அல்லது ஆறு வயசு இருக்கலாம். ஏன்னா அந்த வருசந்தே ஒன்னாம் வகுப்புல சேத்தி இருந்தாங்க. அப்பவெல்லாம் பர்த் சர்டிபிக்கேட் எல்லாம் கேக்க மாட்டாங்க. கையத் தலைமேல கொணாந்து மறுபக்கக் காதத் தொட்டுட்டாப் பள்ளிக் கொடத்தில சேத்திக்குவாங்க.

"என்னங்ககவுண்டரே!எவ்வளவோ

விசாரிச்சும் அந்த காளீப்பனோட தலை கெடக்குற எடம் மட்டும் இன்னும் கெடைக்கவே இல்லீங்களே! பாடி கெடந்த ஏரியா எல்லாம் சல்லடை போட்டுச் சலிச்சுப் பாத்துட்டோம். ஆனா தல கெடச்ச பாடில்ல! எனக்கு ராத்திரியெல்லாம் அதே நெனப்புத்தான். அதான் நேரமே கெளம்பி வந்துட்டேன்." அப்டீன்னாரு அந்த எளம் வயசு இன்ஸ்பெக்ட்ரு. அது ஒரு கொலக்கேசு. செத்துப்போன காளீயப்பனோட ஊரு திருச்சி ஜில்லாவச் சேந்தது. ஆனா அவன் தோட்டம் ரெண்டு ஜில்லாவும் சந்திக்கற எல்லையில இருந்துச்சு. அந்தக்கொல நடந்து மூணு நாலு நாளாவது இருக்கும். முண்டம் கெடச்சிருச்சுப் போலீசுக்கு. அது கெடந்த எடம் கோயமுத்தூரு ஜில்லா! ஆனா தல மட்டும் கெடைக்கவே இல்ல! போலீசு தீவிரமாத் தேடிக்கிட்டிருந்தது.

கவுண்டரு சொன்னாரு "ஆமாங்க ஒரு துப்புமே தெரியமாண்டைங்குதுங்க சார்!" அப்டீன்னு. உடனே, "எனக்குத் தெரியுமே!"ன்னு பட்டுன்னு சொல்லுச்சு அந்தக் கொழந்தை!

"நீ கம்முனு இரு சாமி! உனக்கென்ன தெரியும்!" அப்டீன்னு கொழந்தயப் பாத்து அதட்டுனாரு கவுண்டரு, "அதுக்கென்ன தெரியும்ங்க சார்! அது சின்னக் கொழந்த!" அப்டீன்னாரு இன்ஸ்பெக்டரப் பாத்து! ஆனா, இன்ஸ்பெக்டருக்கு என்னவோ கொஞ்சம் லேசாப் பொறிதட்டுச்சு!

கொஞ்சம் உற்சாகமான இன்ஸ்பெக்டர், "உனக்கென்ன தெரியுமோ நீ சொல்லுடா கண்ணு!!" அப்டீன்னு அந்தக் கொழந்தையக் கேட்டாரு. அதுக்கு அந்தப் பாப்பா, "அது வந்து, அந்தக் காளீப்பன வெட்டி அந்தப் பெறா மடை இருக்குதுல்ல! அங்கிருக்கிற கல்லுக் குட்டக்குள்ள அவந்தலையப் போட்ருக்காங்களாமா!" அப்டீன்னு சொல்லுச்சு!

"உனக்கு எப்படிப் பாப்பா தெரியும்னு?" இன்ஸ்பெக்ட்டர் கேட்ட கேள்விக்கு அந்தப் பாப்பா சொன்ன பதிலக் கேட்டு இன்ஸ்பெக்ட்ரு மட்டுமில்ல காப்பி கொண்டாந்த கவுண்டரு சம்சாரம் உட்பட அங்கிருந்த எல்லாருமே அப்டியே ஆடிப் போயிட்டாங்க! அப்பிடி அந்தப் பாப்பா என்னதான் சொல்லுச்சு? "நேத்து எங்கய்யனும் எங்க அப்பாரையனும் குசுகுசுன்னு பேசிக்கிட்டிருந்தத நாங் கேட்டெ!" அப்டீங்கறதுதான் அந்தப் பதில். (அப்பாவை ஐயன் என்றழைப்பதும் தாத்தாவை அப்பாரையன் என்றழைப்பதும் கொங்கு வழக்கு)

அந்த பதிலக் கேட்டுத் துள்ளி எழுந்த எஸ்ஸை, "கவுண்டரே…! இவ்வளவு தூரம் பழகீட்டு எல்லா விவரமும் தெரிஞ்சிருந்தும் எனக்குச் சொல்லாம மறைச்சுட்டீங்களே!" அப்டீன்னாரு! "

குதிரவண்டிக்காரனப் பாத்து "டேய் கருப்பனா பூட்றா வண்டிய!" ன்னு உத்தரவு போட்டாரு."காப்பி குடிச்சிட்டுப் போலாம்னு" கவுண்டர் சொன்னதக் கொஞ்சங் கூடக் காதுலயே வெச்சுக்கல அந்த இன்ஸ்பெக்டர்.

துப்புத் தெரிஞ்சாலும் போலீசுக்குச் சொல்லப் பயப்படுவாங்க அந்தக் காலத்தில! சாட்சியாப் போட்டுத் தொலைச் சுட்டாங்கன்னா போக்குவரத்து வசதி யில்லாத அந்தக் காலத்துல பொழப்ப உட்டுட்டு ஆரு தாராபுரத்துக்கு நடக்கறது? ■

# துளிப்பா

ஆகாயத்தில் பறந்தபடி
ஆழியில் முக்குளிக்கிறது
பறவையின் நிழல் ....!!!

- ச. இராஜ்குமார்

# முதுமைத் தாய்மை

சுருக்கங்கள் உடலெங்கும்தான்... சுருங்கிடாத பாசங்கள்
நெருங்கிட இடமங்கு அவள் நெஞ்சத்தில் தினம் உண்டு
அன்பான விசாரிப்புகள் அலைபோலத் தொடராகும்
கண்கண்ட போதினிலே கனிவாகும் அவள் சிரிப்பு...

புண்ணான வேதனையும் புன்னகையால் மறைக்கின்ற
எந்நாளும் அவளருகில் இருந்திட நினைக்கின்ற
வள்ளல் அன்பாலே வரும்படி அழைக்கின்ற
தொல்லை எமக்கென்றால் தோல்வியே சுமக்கின்ற...

உண்ணும் போதெல்லாம் உன்னையென்னை நினைக்கின்ற
உயர்ந்த  பேருள்ளம் வேறுண்டோ? இவ்வுலகினிலே
தத்தம் வாழ்வினிலே தாராளம் சுயநலங்கள்...
நித்தம் நமக்கெனவே நேசத்தைப் பொழியுமுயிர்..

எத்தனைக் காலமும் இறங்கிடாதப் பாசமதை..
நித்தமும் காத்தெம்மை நெஞ்சுக்குள் சுமந்திருப்பாள்..
நட்ட நடுநிசியில் நடுநடுங்கும் பனிக்குளிரில்..
ஒற்றைப் போர்வையோடு உட்கார்ந்து விழித்திருப்பாள்.

**புவனேஸ்வரி சண்,** இலங்கை.

தனித்த காடு
பரவும் குயிலிசையைத்
தலையாட்டிக் கேட்கிறது ஓணான்

ஏற்றிய விளக்கின் நுனியில்
தீடீரெனத் தென்படுகிறது
பிடியிழந்த தங்கக் கத்தி

உச்சியை அடைந்ததும்
என்னதான் நினைத்திருக்கும்
மலை முதுகில் பயணித்த தடம்

நீராடியது போதும் நிலாவே!
சீக்கிரமாய்க் கரையேறு
இடிகிறது இருட்டுச்சுவர்

அந்தச் சவப்பெட்டியின் மடியில்
பிணத்திற்கு முன்பே தயாராய்
மரத்தின் உயிர்

**வெ. அஜித்குமார்**

# நம்பிக்கை

விழி வழி மௌனமொழி பேசி
உதடுகளில் புன்சிரிப்பை காட்டி
என் இதய அறையில் புகுந்திட
அனுமதி கேட்டவளின் விழி வீசிய
வலையினுள்ளே சிக்குண்ட என்னை
தன் இதய அறையில் சிறை வைத்தாள்
நீதான் காலமெல்லாம் என்னவன்
நான் தான் உன்னவள் என்று
நம்பிக்கைத் தந்தாள்!

**தமிழமின்**

# ஆண் போற்று

**புவனா கருணாகரன்**
நியூஜெர்சி, யூ எஸ் ஏ

ஆண் குழந்தை பிறந்துவிட்டால் கொண்டாடுவது எதனால்? எண்ணிப் பார்த்தால் அதற்கு ஒரே விடை தான். அவன் பொருள் ஈட்டுபவன். பொருள் என்பது பணம்.

சங்க இலக்கியங்களில் தலைவன் வீட்டை விட்டு போருக்கோ அல்லது பொருள் ஈட்டவோ போனான் என வாசித்துள்ளோம். ஆண் பொருள் ஈட்டுவதும், பெண் வீட்டில் அடுப்படி வேலைகள் செய்வதும் பழங்காலத்தி லிருந்தே நடந்து வரும் ஒரு பழக்கம்.

“ஜாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை». «எனக்கென்ன சிங்கக்குட்டி மாதிரி ஒரு ஆண் பிள்ள பெற்று வைத்திருக்கேன்” இப்படியெல்லாம் சொல்லக் கேட்டிருக்கோம். இப்படி சொல்வதன் பொருள் என்ன? இந்தக் கொண்டாட்டங்கள், வரிகள் பின்னால் இருக்கும் சுமைகள் என்ன? நாம் எண்ணிப் பார்ப்பதேயில்லை.

பெண்ணை ஆண் அடிமை செய்தான் என்பது உண்மை. வரலாறு இதைக் கூறும். இன்றுமே பல வழிகளில் பெண்ணடிமைக் கொடுமைகள் நடக்கத் தான் செய்கிறது. ஆனாலும்

ஆண் அடிமை அன்றாட வாழ்க்கை யில் நடப்பதில்லையா? நம்மைச் சுற்றி யுள்ள, நமக்கு தெரிந்த, நாம் அன்பு செய்யும் ஆண்கள் பற்றி சற்றே சிந்திப் போம். வாருங்கள்

தகப்பன் இல்லாத வீடுகளில் தன் தாயையும், தாய்த்தந்தை இருக்க முடியாமல் பெற்றெடுத்ததமக்கைகளையும் காப்பாற்ற வேண்டியப் பொறுப்பு ஒரு சிறு ஆண்பிள்ளையின் மேல் போட்டு விடுகிறதே இந்தச் சமுதாயம்.

நாம் தேநீர் அருந்தும் இடங்களி லும், ரயில், பேருந்து நிலையங்களிலும், வாகனங்கள் திருத்தம் செய்யும் பட்டறை களிலும், விடுதிகளிலும், உணவகங் களிலும், தொழிற் சாலைகளிலும், சின்ன வயது ஆண்பிள்ளைகள் வேலைசெய் வதைப் பார்க்கிறோம் தானே. அவர்கள் படும் இன்னல்களை என்றேனும் உணர்ந் திருக்கிறோமா? இவர்கள் குடும்பச்சூழல் என்ன என்று கேட்டிருக்கி றோமா?

இவர்கள் பள்ளியில் இருக்க வேண்டிய சிறு குழந்தைகள். மற்ற குழந்தைகள்போலநண்பர்களுடன்சேர்ந்து விளையாடி, பிடித்த தின்பண்டங்கள் உண்டு, நல்ல துணிமணிகள் அணிந்து, தொலைக்காட்சியில் கார்ட்டூன்கள் பார்த்து, வளரும் பருவத்தில் குடும்ப பாரத்தை தலையில் சுமந்து ஒரு இரண்டு ரூபாய் சம்பாதிக்க எத்தனை பேரிடமோ வசவும் அடியும் வாங்கும் நிலையில் உள்ளார்கள்.

ஏனெனில் இந்தச் சமுதாயம் தகப்பன் இறந்துவிட்டால் ஒரு ஆண் குழந்தையின் தலைமேல் குடும்ப பாரத்தை அப்படியே இறக்கிவிடுகிறது. இனி ‘‘நீ தான்பா உன் தாயையும், அக்கா தங்கையும் பார்த்துக்கணும்,

காப்பாத்தணும். அவர்களுக்கு ஆதரவாக இருக்கணும்'' என்று. ''நீ வேலை செய்து தான் உன் தங்கை திருமணத்தை நன்றாக நடத்தணும்''

இதுஒருபுறம்.தாய்த்தந்தைஇருக்கும் வீடுகளில், ஆண் குழந்தைகள், பள்ளியிலோ கல்லூரியிலோ படிக்கும் போது, ''இவ்வளவு கஷ்டப்பட்டு உன்னை படிக்க வைப்பதே, நீ படிச்சு பெரிய வேலைக்கு போய் எங்களை காப்பாத்துவன்னு தான்பா'' என ஒரு சுமையை ஏற்றி அவர்கள் தலை மேல் வைக்கிறோம். ''நீ தலை தூக்கினாத் தான்பா அப்பா ஓய்வெடுக்க முடியும். நல்ல சாப்பாடு நாம சாப்பிட முடியும்'' இப்படி இன்னொரு பக்கம்.

இதன் அழுத்தம் அந்தப் பிள்ளை உள்ளத்தை என்னச் செய்யும் என யோசிப்பதில்லை நாம்.

சரி வளர்ந்து, படித்து, ஆளாகி தன் தாய்த் தந்தை தமக்கைக்கு செய்ய வேண்டியக் கடமைகள் செய்து தான் ஒரு திருமணம் செய்தால் என்னாகிறான் ஆண். படித்து வந்தாலும் பலப் பெண் கள் வேலைக்குப் போய் பொருள் ஈட்டுவதில்லை. எல்லா பணம் ஈட்டும் பாரத்தையும் ஆண் மேல் போட்டுவிட்டு அடுப்படியில் இருந்துவிடுகிறார்கள்.

ஆனாலும் அவர்களுக்கு ஆசை மட்டும் விடாது. வரும் வருமானத்தைவைத்து குடும்பம் செய்யும் பக்குவம் இருக்காது. பெரிய வீடு கட்ட வேண்டும். வாகனம் வாங்க வேண்டும். பயன்படுத்துகிறோமோ இல்லையோ ஆனால் கடையில் விற்கும் எல்லாப் பாத்திரப் பண்டங்கள், பொருட் கள், வீட்டு இயந்திரங்கள் எப்படியோ தமக்கும் வேண்டும், நகைகள் வேண்டும், ஆடம்பரம் வேண்டும். ஈதனைத்திற்கும் ஆண் ஓவர்டைம் செய்ய வேண்டும்.

அந்த ஒரு ஆணின் தலையில் அனைத்து குடும்பச் சுமைகளையும் போட்டுவிட்டு அவனுக்கு பணிவிடை செய்வதைக்கூட குறைக் கூறிக்கொண்டு உடலை வளர்க்கும் பெண்கள் பலர் உண்டு.

அவன் தினமும் இரவில் தூங்கியும் தூங்காமலும், காலையில் உண்டும் உண்ணாமலும் சாலை நெருக்கடியில் அலுவல் சென்று, கண்டவரிடம் பேச்சு வாங்கி, வேலை பளுவில் அனுபவிக்கும் வேதனைகளை எத்தனைப் பெண்கள் புரிகிறார்கள். ஆண்கள் பெரும்பாலும் பணம் காய்க்கும் மரங்கள் ஆகின்றனர் பல வீடுகளில்.

பணம் ஈட்டுவது போதாதென்று ஓய்வு எடுக்கலாம் என வீடு வந்தால், வீட்டில் எது உடைந்தாலும் சரி செய்யும் ரிப்பேர் மேன் ஆண்.பைப் ரிப்பேர் செய்யும் பிளம்பர் ஆண். வெளியில் போகவேண்டும் என்றால் வாகனம் ஓட்டும் ஓட்டுனர் ஆண். எது வாங்கி வரவேண்டுமானாலும் எடுபுடி ஆண்.

தன் பிள்ளைகளை பள்ளி, கல்லூரி களில் சேர்க்க ஆண். உடல் நிலை சரியில்லையா மருத்துவரிடம் கூட்டிச் செல்ல ஆண். பிள்ளைகளை பள்ளி அழைத்துச் செல்ல, கூட்டி வர ஆண். எல்லா வீடுகளிலும் இப்படி இல்லை. பல வீடுகளில் இப்படி உண்டு.

போதாதற்கு பெற்றவரை ஆண் பார்க்க வேண்டும் என்ற சமுதாயக் கட்டாயம், உடன் பிறந்த சகோதரிப் பிள்ளைகளுக்கு தாய் மாமன் என்றப் பட்டத்துடன் கூடும் இன்னும் சுமை.

தலைமகன் என்றால் தாய்க்கு கொள்ளி, இளைய மகன் என்றால் தந்தைக்கு கொள்ளி, ஒரே மகன் என்றால் தாய்த் தந்தையென இருவருக்கும் கொள்ளி... அந்தக் கொள்ளியுடனே வரும் இன்னும் கொஞ்சம் கடமையெனும் வலி.

ஒரு தகப்பன் தனக்கென எதுவும் வாங்கிக் கொள்ள மாட்டான்

கடைக்குப் போய் பிள்ளைகள் மனைவிக்கு தாராளமாக துணிமணிகள் எடுக்கும் அவன், தனக்கனெ ஒரு வேட்டித்துண்டு வாங்கக் கூட யோசிப்பான்.

பிஞ்சுப் போன செருப்பைத் தான் போட்டுக் கொண்டாலும் தன் பிள்ளைக்கு டிசைனர் ஷீ வாங்கிக் கொடுப்பான்.

தான் உணவகம் சென்று உண்டால் செலவாகும், அந்தப் பணத்தில் பிள்ளைகளுக்கு தின்பண்டம் வாங்கிக் கொண்டு தான் பட்டிணியொடு பழையச் சோற்றுக்கு வீடு வருவான்.

தனக்கு உடல் நலம் சரியில்லை யென்றால் மருத்துவரிடம் போகத் தயங்கும் அவன் மனைவி, பிள்ளைக்கு ஒன்றென்றால் கடன் வாங்கியாவது சிகிச்சை பார்ப்பான்.

அந்த ஆண் எனும் உயிர் தன்னலமற்றது என்று நாம் என்றாவது உணர்கிறோமா? அது இருக்கும் போது அதைச் சுற்றி உள்ளவர் யாரும் அதன் மகத்துவத்தை போற்றுகிறோமா?

ஏன் அதைச் செய்யவில்லை. ஏன் இதை வாங்கிவரவில்லை. ஏன் ஏன் ஏன் எனக் கேட்டுக் கேட்டு நச்சரிக்கிறோம்.

ஒரு ஆண் தனக்கான கனவுகளை பூர்த்தி செய்துக் கொள்வதில்லை. எத்தனையோ ஆண்கள் கவிஞன், ஓவியன், எழுத்தாளன், பாடலாசிரியன், நடிகன், திரைப்பட இயக்குனர், விளையாட்டு வீரன், பாடகன், இசை மேதை இப்படி கலைகளில் வல்லவராக இருந்தும் பொருள் ஈட்டும் பொருட்டு தங்களுக்கு ஒவ்வாதப் பணிகளில் ஈடுபடுகின்றனர். தனக்கு உயிரான கலைகளில் ஈடுபட இயலாது ஏமாற்றத்துடன் வாழ்ந்து மடிகின்றனர்.

பின் ஏன் ஆண்களுக்கு சிறு வயதில் மாரடைப்பு வராது? பின் ஏன் ஆண்களுக்கு உடல் நிலை குன்றாது? பின் ஏன் ஆண்களுக்கு ரத்த அழுத்தம் ஏறாது?

நம் ஆண்கள் “ஆண் பிள்ள நீ அழக்கூடாது” ந்னு அழக்கூட சுதந்திரம் இல்லாமல் வளர்ந்தவர்கள். அவர்கள் உணர்வுகளைப் பகிர்வதில் பெண்கள் போல அல்ல. தங்கள் அனைத்து வலிகளை யும், பாரங்களையும் உள்ளுக் குள்ளே புதைத்துக் கொண்டு வெளிக்காட்டாமல் குடும்பத்தை பாதுகாக்கும் தெய்வங்கள். எல்லா ஆண்களும் சுய நலமற்றவர் அல்ல. அந்த வர்க்கத்திலும் கடமை மறந்து, குடும்பத்தை அழிக்கும் பலரும் உளர். நான் சொல்வது பெரும்பாலான குடும்ப பாரத்தை சுமக்கும் தன்னலமற்ற ஆண்களை. தருதலைகளைக் கழித்து தந்தைகளை போற்று என்று

எனவே.. நம் தாத்தா, தந்தை, அண்ணன், தம்பி,, கணவன், காதலன், மகன், நண்பன், மாமா, சித்தப்பா, பெரியப்பா, உடன் வேலை செய்யும் ஆண்கள் என எந்த ஆணிடமும் அவர்கள், உணர்வு உணர்ந்து, அவர்கள் செயல் புரிந்து கருணையோடு நடக்க வேண்டியது நம் கடமை.

ஏனெனில்,

“ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ?
மாநிலத்தீர் - வேண்டாம்”

“நமக்கும் அது வழியே;
நாம் போம் அளவும்
எமக்கு என் என்று இட்டு
உண்டு இரும்”

என்பது ஔவையார் கூற்று.
ஆகையால் நாம் இருக்கும் வரை
உண்டியிட்டு, உணர்வுகள் புரிந்து
வாழ்வோமே.

# ஏதோ புரிந்தும் புரியாமல் புரிகிறது....

மூக்கைத் துளைக்கும்
மருந்து நெடியும்
நொடிக்கு நொடி வரும்
இருமலும் - அடுத்த இருமலில்
உடைந்து விடுமோ
என திடுக்கிடச்
செய்யும் ஆட்டங்காணும்
பென்ஞ்சும் என்னை ஏதோ
செய்கிறது...

நத்தைகளின் நகர்வலமாய்
ஒவ்வொரு நோயாளியாக
மெதுவாக ஊர்கிறது
நோயாளர் வரிசை...

அவஸ்தைகளின் அதியுச்சமாய்
பெருவிரல் ஏறி மிதித்துப்
'பக்குவமாக' பொடிநடை
செல்லும் பெருசுகள்...

சுவற்றில் தொங்கும்
ஆண்குறி பெண்குறியின்
அத்தனை விரிவான
விளக்கப் படம்...

கூட்டத்தில் வைத்து
என் மகன் ஏதும் சந்தேகம்
கேட்டுத் தொலைத்துவிடக்
கூடாது ஆண்டவா - ஆழ்மனப்
பிரார்த்தனை...

ஆஸ்பத்திரியில் இணைந்த
அன்று வழங்கப்பட்ட
முதலாடையை ஞாபகார்த்தமாக
இன்று அணிந்து
வந்திருப்பார்கள் போலும் - இறுக்க
ஆடைகளுடன் ஓடித் திரிவதாலோ
என்னவோ இறுகிய முகமும்
சொற்களுமாய் தாதிகள்...

காலுறை தாண்டிப் பிதுங்கும்
கெண்டைக் கால் சதையை
இதற்கு முன் உதைப்பந்தாட்ட
வீரனொருவனிடம்
ரசித்த ஞாபகம்...

ஆண்பாலோ பெண்பாலோ
ஆண்காலோ பெண்காலோ
இறுகிய சதைகள் ஏதோ
கிளர்ச்சியைத்
தரவே செய்கின்றன....

நேரங்கடத்தவே ஏதுமில்லை -
ரசிப்பதற்கு
எதுவும் தோதுமில்லை...

எண்பது தாண்டிய வயதிருக்கும் -
என்பும் தோலும்
தாண்டி எதுவுமிருப்பதாய்த்
தெரியவில்லை...

வினாடிக்குப் பத்து
எனும் வீதத்தில் நடுங்கும்
கையில் வேட்டியை
இறுகப் பற்றிக் கொண்டு
ஒரு முதியவர் வந்தமர்கிறார்....

உழைத்துக் களைத்த
தேகம் - அடிச்சொட்டு வரை
சாறு பிழிந்து சக்கையான
மனிதர் என்று புரிகிறது...

பதிவுக்கு வந்த தாதியின்
கேள்விகளுக்குத் தட்டுத்தடுமாறி
ஏதோ சொல்வது தெரிகிறது...

'ஐயா.... என்ன நோய்?
எங்கே வலிக்கிறது?'

முழங்காலைக் காண்பிக்கிறார்....

அவ்விடத்தில் மெலிதாய்
அழுத்தியதும்
'ஆ...' வென முனகியதில்
வெடுக்கென
பிடுங்கிக் கொண்டாள்...

'கூட யாராவது
வந்திருக்காங்களா ஐயா...?'

முன்னைய கேள்வியை விட
இக்கேள்வி சற்று அதிகமாகவே
வலித்திருக்க வேண்டும்....

இக்கேள்விக்கு அவர்
பதிலளிக்கவில்லை...
கண்களின் வெறித்த
பார்வை ஏதோ சொல்லியது....

என் மடியில் பதுங்கிக்
கிடந்தவனை ஏறிட்டுப்
பார்த்துச் சிரிக்கிறார்...

ஏதோ புரிந்தும்
புரியாமல் புரிகிறது....

**- கீதா மோகன்**
(நெல்லை - தமிழ்நாடு)

## ஹைக்கூ

வானில் மின்னும் நட்சத்திரங்கள்
மண்ணில் கண்சிமிட்டின
மின்மினிப்பூச்சிகள்.

கவிஞர்
பொன்விலங்கு பூ.சுப்ரமணியன்



# நேற்று இல்லாத மாற்றம்

அதிகாலை விழிக்கிறான்!
தினந்தோறும் குளிக்கிறான்!!
தலைவாரிக் கொள்கிறான்!
தனியாகவே செல்கிறான்!!

அன்னத்தை வெறுக்கிறான்!
ஆகாயம் பறக்கிறான்!!
அசடுத்தான் வழிகிறான்!
வெட்கத்தில் நெளிகிறான்!!

கண்மூடி சிரிக்கிறான்!
கண்ணாடி ரசிக்கிறான்!!
மழையிலே நனைகிறான்!
கவிதைகள் புனைகிறான்!!

பைத்தியமாய் திரிகிறான்!
புதிதாக தெரிகின்றான்!!
தேவதை வரவிலே
காதலில் விழுகிறான்!!

காவிய உறவிலே
தன்னையே தொழுகிறான்!!
நேற்று இல்லாத
மாற்றங்கள் அடைகிறான்!!

**லீ. லியாகத்அலி**

# படிப்போம் இயற்கைப் பள்ளியிலே!

## முனைவர் ஓசூர் மணிமேகலை

இயற்கை யனைத்தும் பாடமன்றோ?
இதமாய் மனத்தில் பதித்திடுவோம்!
உயர்ந்த மலையின் சிகரங்கள்
உயர்வாய் வாழ உணர்த்திடுமே!
புயலும் தென்றல் காற்றுணர்த்தும்
புவியில் வாழ்வின் பாதைகளை!
முயற்சி தன்னை உணர்த்திடுமே
முளைக்கும் விதைகள் வீறாக!

மலர்கள் கண்டு முகம்மலர்வோம்!
மனத்தில் மகிழ்வை நிறைப்போமே!
புலரும் காலைக் கதிரவன்தான்
புதுநம் பிக்கை தருவானே!
நலமே தருமே மரங்கள்தாம்
நன்றாய் உதவ வழிகாட்டும்!
நிலமும் பயிரும் உரைத்திடுமே
நித்தம் உழைத்தால் வளமென்றே!

பணியும் நாணல் போலிருந்தால்
பகையாம் புயலை வென்றிடுவோம்!
அணியாய் விளங்கும் நிலவுரைக்கும்
அனைத்துக் குறையும் நிறையாகும்!
கனிகள் இனிமை கற்பிக்கும்!
கடலால் கற்போம் தொடர்முயற்சி!
பனிபோல் கரையும் துன்பங்கள்!
படிப்போம் இயற்கைப் பள்ளியிலே !





# இருவர் ஒற்றுமை

எனக்கும் உன்மேல் - விருப்பம் - இங்
குனக்கும் என்மேல் விருப்பம் - அத்தான்

{எனக்கும் உன்மேல்...}

எனக்கு நீதுணை அன்றோ - இங்
குனக்கு நான்துணை அன்றோ - அத்தான்

{எனக்கும் உன்மேல்...}

இனிக்கும் என்செயல் உனக்கும் - இங்
கெனக்கும் உன் செயல் இனிக்கும்
தனித்தல் உனக்கும் எனக்கும் - நொடி
நினைப்பின் வருத்தம் மனத்தில் - அத்தான்

{எனக்கும் உன்மேல்...}

விழி தனிலுன தழகே - என்
அழ கிலுனது விழியே
தொழுத பிறகுன் தழுவல் - நான்
தழுவிப் பிறகுன் தொழுதல் - அத்தான்

{எனக்கும் உன்மேல்...}

நீ உடல்! உயிர் நானே - நாம்
நிறை மணமலர் தேனே
ஓய்விலை நமதன்பும் - இங்கு
ஒழியவிலை பேரின்பம் - அத்தான்

{எனக்கும் உன்மேல்...}

**- பாரதிதாசன்**



பிறந்த நாளின் போது
மனைவி மகள்களோடு

# மலேசியாவில் வாழ்ந்து வரும் பாவலர் தமிழறிஞர் சிமா.இளங்கோ அவர்களுடன்...



புதுச்சேரியில் மலேசிய இலக்கிய வாதிகள் - நாவலாசிரியர் பிரபஞ்சனோடு!--

1987 ஆம் ஆண்டு மலேசிய பாரதிதாசன் குழுவினர் நடத்திய நூற்றாண்டு விழாவில் சிறப்பிக்கப் பட்டபோது!



மலேசியாவில் வாழ்ந்து வரும் 80 அகவை கண்ட முதுபெரும் பாவலர் தமிழறிஞர் சிமா.இளங்கோ ஐயா. மலேசிய அரசின் கவிதைநூல் போட்டியில் பரிசு பெற்றவர். மரபு புதிது இரண்டிலும் வல்லவர். இப்போதும் முகநூலில் துடிப்பாக இயங்கி வருகிறார்.

அவரிடம் நம் தமிழ்நெஞ்சம் இதழுக்காக நேர்காணல் கண்டோம். வாருங்கள் என்னோடு...

வெற்றிப்பேரொளி

உங்கள் இளமை, பெற்றோர், படிப்பு பற்றிச் சொல்லுங்கள் ஐயா.

எனது இளமை காலம்? ஏழ்மையின் தாலாட்டில் வறுமையின் தொட்டிலில் உறவுகளின் உதாசீன பாராட்டுகளில் உருவானது!



ஜோகூர் அரசு ஆட்சிகுழு உறுப்பினர் டத்தோ அசோகன் அவர்கள் தமிழறிஞரின் நூலை அரசு நூலகத்திற்கு பெற்றுக் கொண்ட இனியத் தருணம்.

காரணம், நான் ஏழாவதாக பிறந்து தவழும் ஓராண்டு பிராயத்திலேயே அம்மா மாரியாயியை விதவையாக்கி அப்பன் சின்னப்பனை சிவலோகம் அனுப்பிய வெள்ளிக் கிழமை பிறந்த விளங்காதவன் நான்!

பள்ளிக்கு கோவணத்தோடு... அதைமறைக்க அண்ணனின் பெரிய சட்டையை போட்டுக் கொண்டு பள்ளி மாணவ தோழர்கள் கிண்டலடிக்க, ஆசிரிய தெய்வங்களின் அனுசரணையோடு ஆறாம் வகுப்பை தாண்டி, ஆசிரியர் பயிற்சிக்கான ஏழாம் வகுப்புக்கு பணவசதி இல்லாமல் தொடர முடியாத துரதிஷ்டசாலியெல்லாம் எந்த சாதியோ, அந்த சாதி நான்,

ஆங்கிலமும் மலாய் மொழியும் தனியார் பள்ளியில் படித்துக் கொண்டது. அப்பனை 1942 ல் இழந்து அம்மாவை 1987 ல் பறிகொடுத்தவன்!

பெற்றோர்க்கு ஏழாவது பிள்ளையாக பிறந்திருக்கின்றீர்கள். அது குறித்து....

என் உடன் பிறப்புகள் 5 அண்ணன்கள்! ஒரே பெண் ஆறாவது அக்காவாக ஏழாவதாக நான் அறுவரின் எச்சில்பால் குடித்து செல்வ மில்லா செல்ல பிள்ளையாக தாயின் மார்பில் 5 வயதுவரை பால் குடித்து வளர்ந்தவன்!

பள்ளி படிப்பு முடித்து 13 வது வயதிலேயே அம்மாவுடன் தோட்டக் காட்டு வேலைக்குப் போனவன்!

இலக்கிய ஆர்வம், கவிதை எழுதும் உந்துதல் எப்படி எழுந்தது உங்களுக்குள்?

1956 - 57 களில் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஏடுகளும் முத்தாரம் போன்ற எழுத்துகளின் பாய்ச்சல்களும் தான் என் இலக்கிய ஆர்வத்தின் முகத்துவாரம்!

நான் நிறைய நாள் வார மாத ஏடுகளையும், குறிப்பாக 57 களின் திமுக முரசொலி மன்றம் காஞ்சி தென்றல் திராவிடன் இன்னும் சில ஏடுகள்!

கவிதைகளில் சுரதா கண்ணதாசன் பொன்னிவளவன் முடியரசன் வாணிதாசன் போன்ற கழக கவிஞர்களின் கவிதை வீச்சுகளே என் கவியார்வ மூலத்திற்க் நதிமூலமாகும்!

உங்கள் இலக்கியப் பயணத்தில் விரல் பிடித்து அழைத்துச் சென்ற முன்னோடிகள்... என்று யாரையும் சொல்ல முடியுமா?

என் இலக்கிய எழில்வனப் பயணத் தின் அருவ ஆர்வமாய் உந்து சக்தியாய் எழுதுகோல் ஏந்த உணர்வலைகளை ஏற்படுத்தியதே பராசக்தி அல்ல! அந்த படவசன கர்த்தா கலைஞர் கருணாநிதியே ஆவார்!

நீங்கள் மலேசிய அரசின் கவிதை நூல் போட்டியில் பரிசு பெற்ற அந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங் களேன்...?



மலேசிய எழுத்தாளர் மாநிலசங்க பேராளர்களோடு திருச்சி மாநகர் வரவேற்பின் போது நூற்களை முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதரிடம் வழங்கியத் தருணம்.

நான் மலேசிய பாரதிதாசன் குழுவும் - மலேசிய பாவலர் மன்றமும் இணைந்து நடத்திய உலகநிலை காவியப் போட்டியில் முதல் பரிசாக ம.வெ. 2000.00 கிடைக்பெற்றேன்!

நண்பர்களின் கணிப்பின்படி 3வது பரிசே எனக்கு நிச்சயம் என்றார்கள் போட்டி அறிவிக்க கூடிய. கல்லூரியே அமைச்சர் பெருமக்களாலும் நாட்டின் முக்கிய இலக்கிய சாம்ராட்டுகளாலும், கல்லூரி மாணவ செல்வங்களாலும் நிரம்பி வழிந்தது!

குறிப்பிட்ட அறிவிப்பு நேரம் வந்ததோ இல்லையோ? எனக்கு ஒருவித சொல்ல தெரியாத படபடப்பு! குளிரூட்டி செய்யப் பட்ட மண்டபமே எனக்கு வெட்டவெளி வெயில் காடாக வியர்த்து கொண்டியது!

நண்பர்கள் நிர்ணயத்து சொன்ன 3 வது பரிசுக்கான வெற்றியாளரை அப்பொழுது அறிவிப்பாளர் சொன்ன போது நான் நண்பர்களோடு நின்று கொண்டிருந்தவன் தொப்பென்று இருக்கையில் குந்தினேன்!

ஆம் மூன்றாம் பரிசு எனக்கு இல்லை!

நண்பர் தைரியம் சொன்னார்! சிமா நிச்சயம் இரண்டாம் பரிசிற்கு வாய்ப்பிருக்கிறது தைரியமாக இருங்கள் என்றார்! பாவி இந்த அறிப்பாளருக்கு என்ன நோக்காடு வந்தது! படுபாவி இப்படி இழுக்கிறானே? மனம் சபித்தது!

கொதிநீர்மேல் உட்கார்ந்தவன் போல் அந்த இரண்டாம் பரிசுக்கான வெற்றியாளர் பெயரும் வந்தது! அந்த அதிஷ்டசாலியும் நான் இல்லை!

நண்பர்களிடம் ஒய்வறைக்கு போய்

தஞ்சாவூர் பல்கலைகழகத்திற்கு அன்றைய துணைவேந்தரிடம் நூற்களை வழங்கியத் தருணம்.





சென்னையில் அண்ணன் மூவேந்தர் முத்து அவர்களின் வீட்டில் விருந்தினராக தங்கிய தருணம்!

வருவதாக என் கார் இருக்கும் இடம் தேடி சென்றேன்! ஆமாம் வீட்டுக்கு கிளம்பத்தான்!—

அப்பொழுது மண்டபத்தின் ஒலி பெருக்கி வெளியேயும் கேட்டது!

முதல் பரிசு 'மருதி'காவிய நூலுக்கு என்று சொல்லி எழுதியவர் பெயரை சொல்லி முடிப்பதற்குள் என் நண்பர் மலேசிய நாடாளு மன்ற மேலவை உறுப்பினர் டத்தோ சி.கிருஷ்ணன் அவர்கள் பரபரக்க ஓடிவந்து என்னை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டார்!

மரபுக் கவிதையில் கொடியேற்றும் அதேநேரத்தில் புதுக்கவிதைப் படைப்பிலும் முன்னணியில் இருக்கிறீர்கள். அந்தப் புதுக்கவிதைத் தொடர் பற்றி விளக்குங்கள்.... ?

மரபுக் கவிதையில் வெற்றி கொடி நாட்டிய நான் -

புதுக்கவிதை துறையில் ஈடுபாடு கொள்ள மூலாதாரமாக முன்னின்றதே

கவிபேரரசு வைரமுத்து பிறந்த நாளின் போது 'கவிஞர் விருதும்' 2000.00 மலேசிய வெள்ளியும் தந்து பாராட்டி கௌரவித்த தருணம்!-



கவிஞர் மேத்தாவின் நூற்களும்..கவி பேரரசுவின் நூற்களும்... கவிக்கோ அப்துல் ரஹ்மானின் நூற்களும்தான் என்றால் மிகையாகாது!

மரபு மாளிகைவாசியாய் இருந்தாலும் மண்குடிசை பொற்கொடியாள் 'புதுக்கவிதைப் பொற்கொடியாளின் புன்னகைப்பூ பூப்பில் புத்தி சுருண்டு போயிவிட்டது! அதன் காதலாலேயே,,,

1. பாதைகள் பயணங்களுக்காக அல்ல!'
2. 'முற்றுப் புள்ளிகள் முடிவுகள் அல்ல!'
3. நெருப் பாற்றுப் படகுகள்!'
4. 'வில்லம்பும் சொல்லம்பும்!'
5. அடியப்பா அடி அரிகிருஷ்ண சுவாமிகள்!' 12 அவதாரங்களாக புதுக் கவிதைதொடர் காவியமாக புனையப்பட்டது!

என ஐந்து புதுக்கவிதை பிள்ளைகளையும் பெற்றுபெருமைகொண்டசித்தப்பனாகவும்

1. 'இளங்கோ கவிதைகள்!'
2. 'போர்ட்டிக்சன் மகாமாரியம்மன் புகழாஞ்சலிப் பூக்கள்!'
3. 'மருதி' காவியம்!'
4. 'கொலைகாரி!'
5. குறுங்காவியம்!
6. 'கவியரங்கில் கவிமணி!'

என்ற மரியாதைக்குரிய மரபு கவிதைகளின் அப்பனாகவும்!--

'ஒரு தாய் (சாபம்) பெறுகிறாள்!' என்ற சிறுகதை தொகுப்பு நூலையும்!'

'இன்று முதல்!' என்ற நாவலையும்!

'கண்ணதாசன் கவிதைகள்' சொல்லும் சுவையும்!' என்ற. இலக்கிய கட்டுரை நூலையும்!'

எழுதிய மேக வேகத்தில்... 'யாழின் மௌனமொழிகள்'! என்ற மரபு தணல் கவிதைகள் தாங்கிய ஏவு கணையாய் மரபின் தொகுப்பு நூல் (210 பக்கங்கள்)

4.4.(1943) எனது பிறந்தநாள் திங்களில் அமைச்சர் தாண்ஸ்ரீ விக்னேஸ்வரன் தலைமையில் வெளியீடு காண விருக்கும் இலக்கிய விண்கலமாகும்!

இந்த சிறிய அளவே எனது இலக்கிய பயணத்தில் நான் பெற்ற பேறு!

தமிழ்நாட்டிற்கு வெளியில் இருந்த படி இலக்கியம் செய்யும் அனுபவம் எப்படி?

தமிழ்நாட்டிற்கு வெளியில் இருந்தாலும்...

1958 ஆம் ஆண்டு தொடங்கி தமிழக இலக்கிய சூரியர்களின் இணைந்த தவத்தால் குந்தியைபோல் சில எழுச்சிகர்ணன்களை என்னால் ஈன்றெடுக்க முடிந்து!

மலேசிய சிங்கப்பூர் இலக்கிய அமைப்புகள், இலக்கியவாதிகளுடன் உங்கள் தொடர்பைக் குறித்து தெரிந்து கொள்ள ஆவல்... ?

1980 களில் சிங்கப்பூர் எழுத்தானர் சங்கத்தின் அந்நாள் தலைவர் கவிஞர் அமலதாசன் கவிஞர் தங்கராசு போன்ற நண்பர்களும் அதன்பின் தலைவராக வந்த கவிஞர் நா.ஆண்டியப்பன் அவர்களும் எனது சிங்கை மண்ணுக்கு சீர்பாதை அமைத்தவர்கள்!

இப்பொழுது அந்த உறவுகள் எனது வயதின் காரணமாக சற்று மந்தப்பட்டே இருக்கிறது!

எனினும் இலக்கிய பாச நேசம் பனிக்குகையாகத்தான் குளிர்ந்திருக்கிறது!

தமிழ்நாட்டில் உள்ள இலக்கிய வாதிகள் கவிஞர்களுடனான உறவை எப்படிப் பேணி வருகின்றீர்கள்?

தமிழ்நாட்டின் கவிமேகங்களின் கனிந்த உறவும், நாவலாசிரியர்களின்



புதுவையில் உலக பாவலர் தமிழன்னை தமிழ்ப் பேரவை ‘சங்கப்புலவர்’ விருது வழங்கி பாராட்டிய தருணம்!

மலேசிய ஸ்ரீ தர்மா சாஸ்தரா சேவை மையம் வழங்கிய ‘எழுத்துலகச் சிப்பி’ விருது பெற்ற தருணம்!



மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கப் பேராளர்கள் கலைஞரின் அழைப்பின் பேரில் மூதறிஞரை கோட்டையில் சந்தித்த தருணம்!



நாணயநட்பும் அன்றுபோல் இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. காரணம்நான்கரூர்தொக்குப்பட்டிக்காரன் திருச்சி என் மாமியார் தலவாசம்! அப்புறம் என் தொடர்பு இன்னும் பூந்தென்றல் காற்றாகவே தொட்டுத் துலாவுகிறது!

**புதிதாக படைப்பு, நூல்வெளியீடு திட்டம் ஏதும் உள்ளதா?**

அடுத்தத் திங்களில் எனது மரபுகவிதை தொகுப்பு நூல் வெளியீடு காண இருக்கிறது!

**பிரான்சிலிருந்து ஐம்பது ஆண்டு களாக வெளிவந்து கொண்டிருக்கும் “தமிழ்நெஞ்சம்” இதழ், அதன் ஆசிரியர் கவிஞர் அமின் .. பற்றிய உங்கள் கருத்து....?**

எனது மரியாதைக்குரிய “தமிழ்நெஞ்சம்” இதழாசான் கவிஞர் தமிழ்தகை பலநூறு சூரிய காந்தி பூக்கள் தரிசிக்கும் இலக்கியச் சூரியனாக... ஐயா அமின் என்கிற தமிழ் ஆல ஆல விருட்சம் என்பேன் நான்! அன்னார் வானமழை மிஞ்சும் வள்ளல் பெருந்தகை! என்முகம் பார்க்காமலேயே உதவிய உத்தமர்!

எனது “யாழின் மௌனமொழி” கவிதை தொகுப்பின் அட்டைபட அலங்கரிப்பேஅன்னாரின்கைவண்ணமே!

கவிஞர் கண்ணதாசன் முருகன் அவர்களின் இணைப்பே ஐயா அமின் அவர்கள் என்னுள் பிணைப்பு! ■



மலேசிய ஜோகூர் மாநில எழுத்தாளர் இலக்கிய மன்றம் ‘இளங்கோவடிகள்’ விருது தந்துச் சிறப்பித்தத் தருணம்!



பிறந்தநாளின் போது பேரன் பேத்திக ளோடு மகன் முருகதாசன் மருமகன் சத்திய சீலனோடும் மகிழ்ந்திருந்தத் தருணம்!



உலக பண்பாட்டு பேராளர் மாநாட்டில் ‘ மானமிகு பேராசிரியர் கா.அன்பழகனாரிடம் ‘இளங்கோ கவிதைக’ நூலை அன்புடன் கொடுத்த தருணம்!அருகில் நெ.மா.எழுத்தாளர் சங்க செயலாளர் திரு.கா.மாரியப்பன்



ஊக்கப்பதிவுக் கட்டுரை

# ஆசையே அலை போலே



*Dr ஜலீலா முஸம்மில் (ஏறாவூர்),*
அவசர சிகிச்சைப் பிரிவு,
போதனா வைத்தியசாலை,
மட்டக்களப்பு.

"ஆசையே அலை போலே
நாமெலாம் அதன் மேலே
ஓடம் போல ஓடையிலே
ஆடிடுவோமே வாழ்நாளிலே..."

இது கவிஞர் கண்ணதாசன் அவர்களின் அழகிய பாடல் வரிகள்.

உலகத்தில் பிறந்த அனைவரும் ஒரு இலக்கை, ஆசையை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கிறோம். அதை அடைய முனைப்படுகிறோம். ஆசையை நோக்கிய வழியில் நிறைய தடங்கல்கள் வந்தாலும் அதையெல்லாம் எதிர்கொண்டு வெற்றி பெற்றவர்கள் நிறையப்பேர் உள்ளனர். அந்த ஆசை மிகச்சிறிய ஆசையாகவோ அல்லது பேராசையாகவோ இருக்கலாம். ஆனால் உனக்குத் தேவையானதை, நீ நினைப்பதை அடைவதற்கு என்ன செய்தாய்? எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டாய்? வெற்றி பெறுவது ஒருபுறம் இருக்கட்டும். இலக்கை நோக்கி எவ்வளவு தூரம் பயணித்தாய்? அதில் உனக்கு என்னென்ன சந்தோஷங்கள் கிட்டியது? மனமுவந்து உன் இலக்கை எவ்வளவு தூரம் கொண்டு சென்றாய்? உன் உள்ளக் கிடக்கைகளை அடைய என்னவெல்லாம் பயிற்சி செய்தாய்?அந்த முயற்சியில் ஆறுதல் அடைந்தாயா? இல்லை இன்னும் இன்னும் வெற்றியை நோக்கி வீறுநடை போட்டாயா? தீர்வைப் பெற்றாயா? உனது தேடலின் நாட்கள் நலமாக அமைந்ததா? இப்படிக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.உங்களின் ஆசைகளைப் பிரித்து ஆராய்ந்தீர்களா? யாருக்கும் பிரேரித்தீகளா? செவ்வனே திட்டமிட்டீர்களா? திட்டமிடல் நிகழ்வுகளை நாம் கற்றுக் கொள்வதும் இல்லை, இவ்வாறான கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்வதும் இல்லை.ஆசைகளே நம்மை வடிவமைக்கின்றன. ஆசைகளே பலமுறை நம் அடையாளமாகின்றன. ஆசைகளே நம்மை ஊக்குவிக்கின்றன. ஆசைகளே நம்மை முந்திக் கொள்கின்றன.அவையே உந்தித் தள்ளுகின்றன. ஆசைகளே நம்மை உயர்த்துகின்றன. ஆசைகளே நம்மை வீழ்த்தவும் செய்கின்றன. ஆசைகளே நம் தேவைகளை நிர்ணயிக்கின்றன. அதனின் நம் தேவைகளே ஆசையாகின்றன...

"ஆசை ஆசையாய் இருக்கிறதே நினைத்தது நடந்திடவே".....

உங்களுக்குள் உங்கள் ஆசைகள் எப்படி உருவாகின?

ஆசைகள் உங்களுக்குள் மின்னுகின்றனவா? அல்லது மறைந்து ஆழத்தில் உறைந்து கிடக்கின்றனவா?

முன்வைத்த காலைப் பின் வைக்காமல் எடுத்த விஷயத்தில் வெற்றி பெற்று எள்ளி நகையாடிவர்கள் வெட்கித் தலைகுனிய வீரப்பெண்ணாய் மிளிர்ந்திருக்கிறீர்களா? இன்னும் நீங்கள் நிறைய சாதிக்க வேண்டுமெனச் சங்கற்பங்களை நடுங்கள். இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆவல், முயற்சி, தொடங்கிய பணி தொடரட்டும். தொடர்ந்து கொண்டே இருக்கட்டும். வெற்றி மாலைகளை நோக்கி உங்களின் தேடல்கள் ஓடிக் கொண்டிருக்கட்டும். அனைவரையும் வாழ வைக்கட்டும்.அதிலேயே கவனங்கள் ஒன்று சேரட்டும்.

நமது ஆசைகள் முயற்சி எனும் ஏணியில் முன்னேறி வெற்றி பெறவேண்டும். படிப்படியாகத்தான் இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும்.அப்படிச் சென்றால்தான் உங்களுடைய இலக்கு நிறைவேறும். முழுமையான திட்டமிடலோடு விடா முயற்சியையும் கூட்டுச் சேருங்கள். அதற்கான தீரத்தோடு, வீரத்தோடு நடை போடுங்கள்.போகும் பாதைகளில் கஷ்டங்களும் முட்டுக்கட்டைகளும் முன்னே வரலாம். உங்களுக்குத் தடை போடலாம். முட்டுக்கட்டைகள், தடங்கல்கள் வரா விட்டால் அதுவாழ்க்கையே இல்லை.நீங்கள் வெற்றித் தடங்களை வைக்கவே அவை. தடைகள் இல்லாவிட்டால் நமது எதிர்ப் போராட்டத்தில் சுவாரசியம் இருக்காது. தடைகளே எம்மைப்புடம் போடுகின்றன. தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

வெற்றியை நோக்கித் தாகத்தோடு செல்ல ஏதுவாய் அமைகின்றன. முட்டுக் கட்டைகள் இல்லாவிட்டால் ஒரே சீரான வேகத்திலே வாழ்க்கை செல்லும்போது சோம்பேறித்தனம் குடிகொள்ளும் வாய்ப்பே அதிகம் உள்ளது. சரியான திசையில் உங்களுக்கென்ற பாதுகாப்பு வட்டத்தில் பயணங்களை நிதானமாகச் செய்யுங்கள். உங்கள் தோட்டத்தில் நிறையவே ரோஜாக்கள் மலரும்.

மனம் என்பது சிறு குழந்தையைப் போல எதைக் கண்டாலும் ஆசைப்படும். அதைக் கட்டுப்படுத்தத் தெரிந்தவனே மனிதன் ஆகின்றான்.ஆனால் உங்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய ஆசை உங்களின் இலக்காகத்தான் இருக்க வேண்டும். மனிதனுக்கு ஆசைகள் எப்போதும் ஒன்றன் பின் ஒன்றாக உருவாகிக் கொண்டேதான் இருக்கும். ஆசைகள் மறைவதில்லை ,ஆனால் மாறுகின்றன. ஒரு ஆசையை இன்னொரு ஆசையின் மூலம் வெல்ல முடியும் என்பதே ஆசையைச் சீரமைப்பதன் முதல் படிப்பினை. இதைத் தெரிந்து கொண்டால்தான் அவசியமில்லாத ஆசையைக் கை விடவும் அவசியமான ஆசையைத் தொடரவும் அது தூண்டும் இலக்கை அடையவும் முடியும்.

"எதற்கும் துணிந்தவன்
பயப்படுவதில்லை...
துணிந்திடு, துணிந்திடு,
தூணாய்த் துணிந்திடு!
தட்டிடு,தட்டிடு,
தூசாய்த் தட்டிடு..
துரோகிகளின் தடைகளை!
ஏந்திடு, ஏந்திடு...
இறையோனிடம்
கையேந்திடு!
எண்ணங்கள் நிறைவேறும்!
ஏக்கங்கள் நிச்சயமாய்த் தீரும்!
கவலைகள் உன்னை விட்டும்
விரண்டு ஓடிடும் ஓடிடும்!
உயர்வாய் உச்சத்தில்,
உன் இலக்கை அடைவாய்
மிகச்சிறப்பாய்!
வாழ்வாங்கு வாழ்வாய்,
வாசனையுள்ள மலராய்!
சின்னச் சின்ன ஆசைகளும்,
சிறுகச் சிறுக மலரும்!
பாரிய இலக்குகளும்,
பாரினில் ஜெயிக்கும்!"

ஆசையில்லாமல் வாழ யாருமே புத்தன் அல்ல. அதேவேளை இலக்கில்லாத வீணான ஆசைகளைக் கட்டுபடுத்தியும் நாம் வாழ வேண்டும். ஆசை என்பது தமக்கெது தேவையோ அதனைக் கொண்டு வருதற்கான உணர்வாகும். ஒவ்வொருவருக்கும் தேவைகள் மாறு பட்டாலும் ஏதாவது தேவைகள் கண்டிப் பாக இருந்து கொண்டே இருப்பதனால் ஆசையும் அழிவில்லாது இருந்து கொண்டே இருக்கிறது.

ஒரு விஷயம் தேவை என்று எண்ணும் எண்ணமே ஆசைக்கு வித்தாகும் என உளவியல் மற்றும் சமூகவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். ஆசைகளை பொதுவாக மூன்று வகையாக அறிஞர்கள் வகைப்படுத்தியுள்ளனர். அதாவது உடல் சார்ந்த மனம், சார்ந்த ,அறிவு சார்ந்த ஆசைகள் என்பனவே அவை. ஆசை இல்லாமல் உலகில் வேறெதுவும் இல்லை. இயங்குவதில்லை.

உங்களது மிகப் பெரிய ஆசை யானது உங்கள் விருப்பத் துறையைக் தேர்ந்தெடுத்தலும் பயணித்தலுமே. அதை அடைய நீங்கள் எடுக்கும் முயற்சிகளே. ஆசைகள் நிறைவேறும் தருணத்தில், நிறைவேற்றும் தருணத்தில் வரும் சந்தோசம் இருக்கிறதே, அது காலத்திற்கும் அழியாத ஒன்றாய் உங்கள் வாழ்வில் ஒளி வீசும்.நீங்கள் சந்தித்த ஆபத்துக்களும் இடையூறுகளும் நொறுங்கி உங்களை நெருங்க முடியாத தூரத்தில் அவை இருக்கும்.அந்த நேரத்தில் நீங்கள் அடையும் பெருமிதமோ தனி. பேருவகையின் சஞ்சார வெளியில் நீங்கள் மிதந்து கொண்டிருப்பீர்கள்.

"முடவனுக்குக் கல் தடையாகும்
முயல்பவனுக்கு அதுவே படியாகும்
பயந்தவனுக்கு துயரம் துக்கமாகும்
துணிந்தவனுக்கு அதுவே ஞானம் ஆகும்"

ஆசைகளை நிறைவேற்றப் பயணிக் கையில் பல அனுபவங்களும் பல ஆற்றாமைகளும் எம்மை வந்தடையும்.

# வார்த்தை ...

எழுதிக் கொண்டிருந்த
கவிதையில்
முன்னும் பின்னுமாக
வழி மறித்தபடி
நகர்ந்து கொண்டிருக்கிறது
எழுதிய வார்த்தையொன்று.

...என்ன?
என நான் வினவியபோது
அதை தக்க இடம்மாற்றி
அமர்த்தும்படி முறையிடுகிறது.
பரிசீலிப்பதாய்ச் சொல்லி விட்டு
அடுத்தவரிக்கு நகரலானேன்.

கவிதை
முடிவுறும் தருணத்தில்...
கொடுத்த வாக்கைக் காப்பாற்ற
வேண்டி
அந்த வார்த்தையைத்
தேடத் தொடங்குகிறேன்.

அது விரும்பியவரியில்
மிகவும்
நெருக்கமான வார்த்தையுடன்
அமர்ந்து கொண்டு
என்னை விடவும்
ஒரு நல்ல வாசகனாய்
என் கவிதையை வெகுவாய்
ரசித்துக் கொண்டிருக்கிறது
அந்த வார்த்தை...!

**பாரியன்பன் நாகராஜன்**
குடியாத்தம் - 632602

அவை எல்லாவற்றையும் உமது நோக் கத்தை அடைவதற்கான பரிசுகள் என எண்ணிக் கொள்ளுங்கள். சலித்து விடாதீர்கள்.சரிந்துவிடாதீர்கள்.சிறப்பான சரிதத்திற்கான தூண்டுகோல்களாக உமக்கு வரும் தங்குதடைகளை நினைத்துக் கொள்ளுங்கள். சரித்திரம் படைக்கச் சகத்தினை மாற்றத் துணிவாய் ஒரு முடிவெடுங்கள்.மட்டற்ற மகிழ்ச்சியைக் கைப்பற்ற, பெருமிதங்கள் கைசேர, சாந்தி சமாதானம் உள்ளத்தில் பெருக உங்கள் ஆசை எனும் இலக்கை அடைய வீறுநடை போடுங்கள்.

ஆசைப்படு... ஆசையை அடைய ஓடு. ஆசை அவசியம் .அது மிக அவசியம். அது ஒரு அதிசயம். ஆசைகளைத் தெரிந்து கொள்வதும் அதனைச் சீரமைப்பதும் அவசியமான பழக்கம் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். உலகிலே மனித குலத்தில் செல்வமும் இன்பமும் சேர்வதன் மூலமே ஆசைதான் என்று கூறப்படுகிறது. ஆகவே ஆசைப்படுவதில் தவறு இல்லை என்பதை உணர வேண்டும். அதனைச் சரியாகப் புரிந்து செயல்படுத்துவதே நூற்றுக்கு நூறைப் பெறும் வழி.

மூச்சு விட்டுக் கொண்டிருப்பவன் எல்லாம் மனிதன் இல்லை. அந்த மூச்சு இருக்கும் வரை முயற்சி செய்து கொண்டிருப்பவனே மனிதன். ஆசைகளை அடைய ஆன காரியங்களில் கண்ணாயிருப்பவனே மனிதன். கண்ணா டியாய்ப் பிரதிபலிப்பவனே மனிதன்.

சோர்வு அடையும் நேரம் களைத்து விடாதீர்கள்.ஓய்ந்து விடாதீர்கள். உங்களுக் கான தேர்வு, தீர்வு கிடைக்கும் வரைக்கும் அயராது உழையுங்கள்.ஆர்வத் துடன் பாடுபடுங்கள். முடியாது என்பது உங்களது சிந்தனையின் பிழை.மனச் சோர்வின் அடையாளமே அது.ஆதலால் சிந்தனையை மாற்றுங்கள். சிந்தையைத் தேற்றுங்கள். அறிவைத் தீட்டுங்கள். அதுவே வெற்றியின் ஆரம்பம்.அதுவே உற்சாகத்தின் உறைவிடம்.

உண்மையான வெற்றிகளின் பூகம்பம் அதன் பிறகே. செய்து முடிக்கப்பட்ட மாபெரும் சாதனைகள் அனைத்தும் செய்ய முடியாதவை என்று ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டவைதான்,பலரால் நிராகரிக்கப்பட்டவைதான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

"முயற்சி உடையார்
இகழ்ச்சி அடையார்"

"முயன்றால் முடியாதது
ஒன்றுமில்லை"

"அடி மேல் அடி வைத்தால்
அம்மியும் தகரும்"
"எறும்பூரக் கல்லும் தேயும்"

என்ற நம் முன்னோர்களின் முதுமொழி கள் ஆழமானவை. முயற்சியின் பலா பலன்களாக நமது ஆசைகளின் பிரதி பலனாக மாபெரும் வெற்றிகள் வரும் என்பதைக் கூறும் பொன்மொழிகளாகத் திகழ்கின்றன.

கோபத்தில் நிதானமும் குழப்பத் தில் அமைதியும் துன்பத்தில் தைரியமும் தோல்வியில் பொறுமையும் வெற்றியில் தன்னடக்கமும் வாழ்க்கையை இனிதாக்கும்.

வாழ்வை இனிக்க வைக்கும் படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை இனிப்பதற்கு நீங்கள் ஆசைப்பட்டவற்றைத் தேடுங்கள்.

ஆசையே வாழ்வின் மூலாதாரம்...
வெற்றியைத் தூண்டும்
ஆதாரம்...
ஆதலால் ஆசைப்படுங்கள்
வாழ்வில் சிறக்க ஆசைப்படுங்கள்...
ஆசை அலை போலவே வரும்
அணை போடாதீர்கள்...
அதை அணைத்து வென்றிடுங்கள்...

■

# அருந்தமிழே

புவியில் கிடைக்கும் புதையல்
இன்பத்தமிழாய்ப் பூக்குதே
விழிகள் சொக்கிச் சுகங்
காணுதே சொர்க்க மலர்க்
காட்டில் சொந்தம் கொள்ளுதே

ஆக்குகின்ற கவிதையெல்லாம்
அன்பினால் ஊட்டி
பூக்கும் காடாய்ப் பொலியுதே
கற்பனை இன்பம் பெருகுதே
தண்டமிழ் சந்தம் நற்றுணை
நல்கியே நலம் பெற்றதே

செவிகளில் ஒலிக்கும்
ரீங்காரமாய்ச் சிலிர்ப்பூட்டும்
செந்தமிழ் சிந்தைமுழுதும்
சீராக்கிச் சிந்து பாடுதே
பாயும் நதியாய் உள்ளம்
சுவையுணர்வை உண்டு
களிக்கின்றதே

தூய ஒளிச்சுடராய்
தூண்டா மணிவிளக்காய்
ஆயகலைகள் அளிக்கும்
அருந்தமிழே வாழியவே...

**ரஞ்சினி சந்திரமோகன்**
(நிலவழகன்)



# கவசம்

தீ நுண்மிகள்
நாசி வழியே
உள்நுழைந்து விடாமல்
முகக் கவசம் செய்த
விஞ்ஞானிகளே!
குணங் கெட்டவர்களின்
திமிர் பேச்சு
செவியுள் புகுந்துவிடாமலும்
தீயவர்களின் உருவம்
பார்வையில் பட்டுவிடாமலும்
இருக்க ஏதாவது
சிறப்புக் கவசம்
பண்ணுங்களேன்!
மனம் நிம்மதியடையும்...

**- பா.சக்திவேல்**

# மிரட்சி விழி

எறும்பினை மிதிக்கக்
கூடாதென்பதில்
மிகக்கவனமாய் நானும்

மிதிபடக்கூடாதென்பதில்
என்னைவிடக் கவனமாய்
எறும்பும் சில கணங்கள்
அசைவற்றிருக்கிறோம்

மிரட்சியடைந்த பூமி
இறுக்கிப்பிடித்து வைக்கிறது
நொடிக்கும் குறைவான
இக்காலத்தினை!

**ரகுநாத் வ**
மதுரை

# மலர் நாடிய வனம்

- மலர்விழி மணியம்

"பேம். பேம். பேம்ம்...". என்று கத்தும் பேருந்தின் சத்தம் கேட்காமல் சேரனை வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஆஷாவை, நங்கென மண்டையில் தட்டினாள் அவளுடைய தோழி ஆர்த்தி..

"ஆ!!" என்று கத்தியபடி ஆர்த்தியின் பக்கம் பார்வையைத் திருப்பினாள் ஆஷா.

"ஆபீஸ் பஸ் வந்திருச்சு வாடி போலாம்" என்று ஆஷாவை இழுத்துக் கொண்டு ஓடினாள் ஆர்த்தி.

எதிர் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்த சேரன், ஆஷா பேருந்தில் ஏறியதும் அவள் பக்கம் திரும்பினான். பேருந்து கிளம்பும் வரை நின்று விட்டு, தன் இரு சக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு தன் வீடு நோக்கிப் புறப்பட்டான்.

ஆபிஸ்ஸில் மிகவும் அமைதியாக இருந்தாள் ஆஷா. திடீரென பலூன் வெடிக்க, திடுக்கென பயந்து திருப்பினாள்.

"ஹேப்பி பர்த்டே" என்று ஆர்த்தி உட்பட அனைத்து நண்பர்களும் குரல் எழுப்ப, கேக்கை எடுத்துக் கொண்டு வந்த மகிழ், "ஹேப்பி பர்த்டே ஆஷா" என்றான்.

"தாங்க்யு மகிழ்" என்று அவன் பார்வையை சந்திக்காமல் பதில் மட்டும் கூறினாள்.

மகிழ் வருத்தமாக ஆர்த்தியைப் பார்க்க, 'அப்புறம் பேசிக்கலாம்' என்று கண்ஜாடை செய்தாள் ஆர்த்தி.

"மேக் அ விஷ்" என்று ஆர்த்தி கூற, ஒரு கணம் கண் மூடிய ஆஷாவின் விழி முன் சேரன் வந்து போக, சிறு புன்னகையுடன் கண் திறந்து மெழுகுவர்த்தியை ஊதினாள்.

"மே யுவர் விஷ் கம் ட்ரூ" என்று மகிழ் கேக்கை ஊட்டினான் ஆஷாவிற்கு.

"தாங்கியு மகிழ்" என்று உற்சாகமாக அவனைப் பார்த்தாள்.

அவளின் உற்சாகத்திற்குக் காரணம் சேரன் தான் என்று உணர்ந்தவன் ஓரக் கண்ணால் ஒரு முறை முறைத்தான்.

தோழி தோழன்களுக்கு மதிய உணவு விருந்தை அளித்தாள் ஆஷா .பின்பு வேலை முடிந்து சாயங்காலம் கிளம்பும் பொழுது, "மகிழ்.. என்னய பாட்டி வீட்டுல ட்ராப் பண்றியா?"என்று கேட்டாள்.

"கண்டிப்பா... வா போகலாம்" என்று இருவரும் ஆர்த்திக்கு டாடா காட்டி விட்டுக் கிளம்பினர்.

மிகவும் அமைதியாக இருந்த பயணத்தை உடைக்க வாய் திறந்தான் மகிழ், "அப்புறம் ஆஷா, சேரன் என்ன சொல்றான். எதுவும் பாசிடிவ் சைன் காட்டுறானா?» என்று கேட்டு வம்பிழுத்தான்.

"வண்டிய அப்பிடி ஓரமா நிறுத்து மகிழ்" என்று ஆஷா கூற அவளின்

கட்டளைக்கு இணங்கி நிறுத்தினான்.

வண்டியில் இருந்து இறங்கியவள், “அவன் இவன்னு மரியாதை இல்லாமப் பேசுற வேலை வச்சுக்காத” என்று கூறிவிட்டு தன்னைத் தாண்டிச் சென்ற ஆட்டோவை நிறுத்தினாள்.

‘‘ஹே... சாரி ஆஷா.. சேரர்ர்ர், என்ன சொல்றார்ர்ர்னு மரியாதையுடன் பேசுகிறேன் இனிமே” என்று மன்னிப்புக் கேட்டான்.

கோபம் சற்றும் தணியாமல் ஆட்டோ வில் மீதி பயணத்தைத் தொடர்ந் தாள். மகிழ் ஆட்டோவைப் பின் தொடர்ந்து சென்றான். இறங்கும் இடம் வந்ததும் ஆட்டோ நிற்க, கட்டணத்தைக் கொடுத்து விட்டு பாட்டியின் வீடு நோக்கி நடக்க முற்பட்டவளை சற்று நிறுத்தினான் மகிழ்.

“என்ன வேணும் உனக்கு?” என்று கேட்டாள்.

அதற்கு அவன் கூறும் பதிலைக் காதில் வாங்காமல் பாட்டி வீட்டின் உள்ளே இருந்து சேரன் வெளியே வருவதைக் கண்டு அதிர்ச்சியானவள்,

“சரிசரி நீ போ. நாம நாளைக்கு ஆபீஸ்ல மீட் பண்ணலாம்” என்று பதட்டமாகக் கூறினாள்.

“ஏன் இப்புடி பயப்படுற?” என்று திரும்பிப் பார்த்தவன், சேரனைக் கண்டு, “அய்யோ.. சேரன் வரான்” என்றான்.

“என்ன??” என்று ஆஷா முறைக்க,

“இல்ல... இல்ல.. சேரர் வரார்னு சொன்னேன். சரி தாயீ நான் கௌம்புறேன். பாட்டி தாத்தாக்கு என்னோட அன்பு முத்தங்களைக் குடுத்திரு” என்று கூறிவிட்டு, தன் இருசக்கர வாகனத் தில் ராக்கெட்டாகப் பறந்தான்.

# கொழுத்தவெண்பா என்னளவில் கோஸ்ட்!

## அகரம் அமுதன்

ஊசிமுனைக் காதுக்குள்
  ஒட்டகம் நான்நுழைப்பேன்;
வீசியடிக் கும்காற்றின்
  மேல்நடப்பேன்; - நாசிவழி
அந்தக் கருந்துளையை
  அப்படியே உள்ளிழுப்பேன்;
இந்தவெண்பா ஹார்ஸ்கொம்(பு)
  எனக்கு!

சோற்றைநெல் லாக்கிவயல்
  தூவட்டா? ஆலுயரம்
நாற்றை வளர்த்தெடுத்து
  நான்நடட்டா? - சீற்றப்
புயல்பிடித்துக் கட்டட்டா?
  போடா!போ! வெண்பா
முயல்பிடிக்க முட்டுதுஎன்
  மூச்சு!

நேராம்; நிரையாம்;
  நிரைபுவாம்; நேர்பாம்;வெண்
சீராம்; தளையாம்;கை
  சிக்காதாம்; - ஹே!ராம்!
வழுக்கைத் தலையில்
  மயிர்வளர்ப்பேன்; இந்தக்
கொழுத்தவெண்பா என்னளவில்
  கோஸ்ட்!

தளையைப்பார்ப் பேனா?
  தனிச்சொல்பார்ப் பேனா?
விளைச்சல் எதுகையிடு
  வேனா? - முளைத்தெழும்
மோனை அறிவேனா?
  மோவாய் சொறிவேனா?
ஆனைக்கே வைக்கிறதே
  ஆப்பு!

சக்தி தருமாம்;
  தடந்தோள் வளர்க்குமாம்;
யுக்தி வருமாம்
  யுவர்ஹானர்! - முக்தி
எலிபிடிக்க என்றும்
  இசைவேனா? வெண்பாப்
புலிபிடிக்க நான்குடிப்பேன்
  பூஸ்ட்!

இதைப் பார்த்து முறைத்துக் கொண்டே வந்த சேரனின் பார்வையை சந்திக்காமல் தலை கவிழ்ந்தவாறே பாட்டியின் வீட்டை நோக்கி நடை போட்டாள். சற்று இருவரும் தாண்டிய பின் ஒருவரையொருவர் பார்க்காத பொழுது திரும்பிப் பார்த்து பின் புறத்தை மட்டும் கண்டுவிட்டுச் சென்றனர் எதிர்வழியில்.

“பாட்டீ... தாத்தாாாாா...!!!” என்று இருவரையும் இறுகக் கட்டிக் கொண்டாள் ஆஷா.

“ஏய் வாலு.. இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்” என்று தலையை வருடினார் தாத்தா.

“ஹேப்பி பர்த்து டே” என்று பாட்டி வாழ்த்து கூறி தன் முந்தானையில் முடிந்திருந்த ஒற்றை ரூபாய் காசில் ஐந்து எடுத்துக் கொடுத்தார்.

«அவ என்ன இன்னும் சின்னக் குழந்தையா அஞ்சு ரூபா குடுக்குற?.இந்தா ஆஷாக் குட்டி” என்று ஐநூறு ரூபாயைக் கொடுத்தார் தாத்தா.

# உரிமை இல்லாத உணர்வு

பார்த்த நொடியே
நேசத்தை ஊற்றிய
உன் கண்களில்
கண்டேன் என்னை

இருண்ட விளக்கில்
தீபத்தை ஏற்றிய
உன் பார்வையில்
பார்த்தேன் அன்னை

யாரென்று அறியாமல்
என்னுயிரில் கலந்தாயே!
என்னுள்ளம் அறிந்து
உன்னுயிரை தந்தாயே!

சில காலம் பழகியதில்
பலகாலம் கடந்துவிட்டேன்
எழிலான உன் நினைவை
உயிருக்குள் தைத்துவிட்டேன்

உன் கைகள் பற்றியதும்
என்னுள்ளம் நான் அறிந்தேனே
உன்னுள்ளம் பற்றியதும்
உளமாற என்னை மறந்தேனே

பட்டமரத்தினிலே
பறவைகள் வந்தமரக் கண்டேனே
தரிசு நிலத்தினிலே
தாமரைப்பூ சிரிக்கக் கண்டேனே

நீ தான் எனக்கென்று
இறைவன் எழுதவில்லை
நான் தான் உனக்கென்று சொல்ல
உரிமையில்லை

உரிமையில்லா நம் உணர்வு
கானல் நீரோட்டமே!
உயிரில்லா நம் பிரிவு
காதல் மனப்போராட்டமே!

தனித்தனியாய் நாம் வசித்து
தனிமையைப் புசித்தோம்
தள்ளாத முதுமையிலும்
தீரா நேசத்தை ருசித்தோம்

மணவறைக்குச் செல்லாத
நம் காதல் நேசம்
கல்லறையில் சேர்ந்திடுமோ?
நம் காதல் சுவாசம்

காலனிடம் விண்ணப்பம்
சேர்ந்து கொடுப்போம்
மறக்காமல் நம்மை நாம் இணைத்துக்
கொள்வோம்...

- சரவிபி ரோசிசந்திரா

மகிழ்ச்சியோடு இருவர் கொடுத்த காசையும் வாங்கிக் கொண்டாள்.

“இரு உனக்குப் பிடிச்சப் பருப்புப் பாயாசம் செஞ்சு வச்சிருக்கேன். கொண்டு வரேன்” என்று பாட்டி உள்ளே சென்றார்.

«இப்போ தான் சேரன் வந்திட்டுப் போறான்” என்றார் தாத்தா.

“ம்…”ஐ இறக்கி வைத்தாள்.

அந்த ஒற்றை மெய் எழுத்து மிகவும் கனமாக இருந்தது தாத்தாவிற்கு.

“இந்தா கண்ணு, குடிச்சிட்டு சொல்லு எப்புடி இருக்குன்னு” என்று பாயா சத்தைக் கொடுத்தார் பாட்டி.

“நீங்க செய்து அது நல்லா இல்லாமப் போயிடுமா பாட்டி?” என்று பாயாசத்தை ரசித்து ருசித்துக் குடித்தாள்.

பாட்டியும் தாத்தாவும் ஏதோ கண்களிலேயே பேசிக் கொண்டனர். அதைக் கண்டும் காணாதது போல பாயசத்தைக் குடித்துவிட்டு, “ம்.. பாயசம் சூப்பர். குடிச்சு முடிச்சுட்டேன் . இப்போ சொல்லுங்க ரெண்டு பேரும், என்ன விஷயம்னு “ என்று கேட்டாள்.

“சரியான புத்திசாலி” என்று காதை செல்லமாகக் கிள்ளினார் தாத்தா.

“பின்ன என் பையன் கிட்ட இருந்து வந்திருக்கும் அவ அறிவு» என்று கூறி சிரித்தார் பாட்டி.

“ம்.. அப்பாவ விட்டுக் குடுக்க மாட்டீங்களே!” என்றாள் ஆஷா.

“ஹ.. ஹ.. ஹ.. “என்று பாட்டி சிரித்தார்.

“ஆஷர….” என்று தாத்தா அழைத்து, “இந்தா.. இது சேரன் உன்கிட்டக் கொடுக்கச் சொல்லி சொன்னான்” என்று கொடுத்தார்.

“என்ன இது?” என்று புரியாமல் வியப்பாக தாத்தா கொடுத்தப் பையை திறந்து, அதிலிருந்து சில பேப்பர்களை எடுத்தாள்.

“என்ன பாட்டி இது?” என்று கேட்டாள்.

“பிரிச்சுப் பாரு” என்று பாட்டி கூற ஆஷா அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.. படிக்கப் படிக்க இதயத்தில் தீ எறிய, கண்களில் நீர் வழிந்து ஓடியது.

“ஆஷா…” என்று தாத்தா அவளு டைய தோளைத் தொட்டர்.

“தாத்தா… நான் அப்பாவப் பார்த் துட்டு வீட்டுக்குப் போறேன்” என்று எழுந்தாள்.

“ஆஷாக்குட்டி..” என்று பாட்டி தடுக்க முற்படும் பொழுது பாட்டியை தாத்தா தடுத்து, “அவ யோசிச்சு முடி வெடுக்கட்டும்.” என்று கூற, பாட்டியும் அமைதியானார்.

தாத்தா பாட்டியை அணைத்துக் கொண்டு முத்தங்களை வாங்கிக் கொண்டு தன் தந்தையைக் காணச் சென்றாள். அவளுக்கு முன் சேரன் தந்தையின் முன் நிற்பதைக் கண்டு ஆச்சர்யப்பட்டாள். சேரன் அருகில் ஆஷாவும் சேர்ந்து நின்று தந்தையின் கல்வெட்டின் முன் எரியும் தீபத்தை வெறித்துப் பார்த்தனர். சேரன் எப்பொழுது பேசத் துவங்குவான் என்று பொறுமையாகக் காத்திருந்தாள் ஆஷா.

பதினைந்து நிமிடம் கழித்து, “ஆஷா…” என வாய்திறந்தான்..

அவன் பார்வையை நேரிட்டு எதிர்கொள்ள அவன் முன் வந்து நின்றாள். ஆஷாவின் கையில் தாங்கியிருந்த பேப்பர்

கட்டைப் பார்த்து, “இது.... எங்கப்பா...“ என்று ஆரம்பிக்க, ஒற்றைப் புருவத்தை ஏற்றி பார்வையில் தீக்கணையை வீசியவளைக் கண்டவன், “சாரி.... நம்ம அப்பா....” என்று திருத்தி,

“உனக்குக் கொடுக்க ஆசப்பட்ட இடத்தோட பத்திரம் தான் உன் கையில இருக்கு” என்று கூறினான்.

“அப்பா எறந்து போயி பதினேழு வருஷம் ஆகுது. இவ்வளவு நாள் உன்கிட்ட சொத்து குடு, பணம் காசு குடுன்னு நான் வந்து கேட்டிருக்கேனா?” என்று கேட்டாள்.

“இல்ல....” என்று தலையாட்டி, “ஏன்...?” என்று கேட்டான்.

“ஒரேதாய்வயித்துலபொறந்திருந்தா நான் உன்கிட்ட சொத்துல சம அளவு பங்கு கேட்டிருப்பேன். நான் உன் பின்னாடி அலையுறது இந்த பத்திரத்துக்காக இல்ல அண்ணா. உன் பாசத்துக்காக.” என்று கூறி சேரன் கொடுத்த பத்திரத்தை இருவரின் தந்தையின் கல்லறை மேல் வைத்துவிட்டுக் கிளம்பினாள்.

பத்திரத்தை எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு தன் தந்தையின் கல்லறையை நோக்கி நின்று கொண்டிருந்தான். இன்னொரு நிழல் ஒன்று கல்லறையின் மேல் விழ, யார் என்று திரும்பிப் பார்த்தான். மகிழ் நின்று கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் ஏனோ ஒரு இனம் புரியாத கோபம் தோன்ற கண்கள் சிவந்தன சேரனுக்கு.

அதைக் கண்ட மகிழ், “ம்..ம்.. என்னப் பாத்ததும் உங்களுக்கு எரியுற கோபமே சொல்லுது நீங்க ஆஷா மேல வச்சிருக்குற பாசத்த. எனக்குப் பாசம் தான் பெருசுனு உங்க தங்கச்சி காட்டிட்டுப் போயிட்டா, நீங்க என்ன செய்யப் போறீங்க சேரன்?” என்று கேட்டான்.

“நீ யாருடா அதக் கேக்க?” என்று கர்ஜித்தான்.

“ம்.. சொல்றேன்.. சொல்றேன்... ஒரு குடும்பத்துல தகப்பன் எறந்துட்டா, அந்த வீட்டோட மூத்த பையன் தூக்கி சுமப்பான் தங்கச்சிய. ஆஷா உங்க மேல அவளோ பாரத்தை எல்லாம் வைக்கல. அவள தங்கையா ஏத்துகிட்டு பாசம் தானே காட்டனும்னு எதிர்பார்க்குறா.. உண்மையிலயே ஆஷாவ ஏத்துக்க “தைரியம்” வேணும். உங்களுக்கு அந்த தைரியம் இருந்தா எங்க கல்யாணத்துக்கு வந்து ஆசிர்வாதம் பண்ணுங்க” என்று கூறி கல்யாணப் பத்திரிக்கையைக் கொடுத்து விட்டு, தன் மாமனாரின் கல்லறையை வணங்கி விட்டு விடை பெற்றான்.

மகிழ் சென்றதும், பத்திரிக்கையை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தான். தந்தையின் கல்லறையில் எரியும் தீபம் இன்னும் அதிகமாக சுடர் விட்டு எரிந்தது. இப்பிறப்பை ஆஷா கேட்டு வாங்கவில்லை. நடந்த விபத்தில் அவள் பாதிக்கப்பட்டவள் என்று உணர்ந்தான். ஆஷாவின் அருகில் செல்ல பயந்து, அவளை ஏற்றுக் கொள்ள பயந்து, தூரத்தில் நின்றே அவளைக் காத்து வந்தான். மகிழ் கூறிய ஒற்றை சொல்லில் ஓராயிரம் அர்த்தங்கள் உள்ளதை உணர்ந்தான், ‘ஆம் உண்மையில் ஆஷாவை ஏற்றுக் கொள்ள” தைரியம்” தான் வேண்டுமென்று.’

ஒரு மாதம் கழிந்தது...

மங்கள வாத்தியங்கள் முழங்க, வாழை மரங்கள் வாசலில் நிற்க,சொந்த பந்தங்கள் நிறைந்து வழிய, ஐயர் மந்திரம் ஓத, மணமகன் மகிழ் காத்திருக்க, மணமகள் ஆஷாவை அழைத்து வந்தான் சேரன் மணமேடைக்கு...

மலர்ந்தது ஆஷா மகிழின் புது வாழ்க்கை!

■

# ஏனடி காதலால் கொல்கிறாய்...!

என்னவளே வறண்ட
பாலை நிலமதில்
வான்மழையென பொழிந்து
வசந்தத்தை தந்தவளே

தேவதையுன் கடைக்கண்
பார்வை பட்டதுமே
கட்டாந்தரையும் பூக்காடாய்
பூத்துக் குலுங்குதடி

நீ மொழிந்த
வார்த்தைகள் உணர்வுகளின்
ஆழம்வரை சென்று
வேர்விட்டுத் துளைத்ததடி

இதயத்தை வருடுகின்ற
மெல்லிய பூங்காற்றாய்
எனதருகில் நீயிருந்தும்
தனிமையில் நானடி

மவுனப்பூவாய் எனை
மயக்கிய பூங்குயிலே
நின்காதலில் திளைக்கின்ற
காதலனாய் அழைக்கின்றேனே

உன் பூங்குழல்
உதிரும் பூவாக
நான் மாறிடும்
வரமொன்று தருவாயா

நடமாடும் கவிதையாய்
பொய்யள்ளித் தின்பவளே
கண்மணியே ஏனடி
காதலால் கொல்கிறாய்

என் வெளிச்சப்பூவே
உன் மலர்ப்
பாதங்களில் ஆத்மார்த்த
காதலாக நிறைகின்றேன்

# நெருஞ்சியாக் குத்துதடி நித்தமும் ஒன்நெனப்பு...!

செக்கச் சிவந்தவளே
செவ்வந்தி நிறத்தவளே
மையிட்ட விழியாலே
மச்சானை மயக்குறியே...!

குத்தால மலையோரம்
குறிஞ்சியும் பூத்ததடி
அத்தானின் நெனப்புலதான்
ஆசையும் அரும்புதடி...!

வஞ்சியின் மூக்குத்தி
வசியமை ஆனதடி
கால்சலங்கை கூட
வக்கணையாப் பேசுதடி...!

திராட்சைக் கண்ணிரண்டும்
கணக்குப்பண்ணி போனதடி
முட்டக்கண்ணு மல்லிகையும்
பக்கம்வரத் தூண்டுதடி...!

குட்டிபோட்ட பூனையாட்டம்
சுத்துதடி எம்மனசு
அச்சாரம் போடத்தான்
அடிமனசும் சொல்லுதடி...!

உதட்டோரப் புன்னகையில்
உயிரள்ளித் தின்னவளே
புடம்போட்ட நெருப்பாட்டம்
புகையுதடி என்னுசுரு...!

நெஞ்சுக்குள்ள கள்ளமில்ல
நெசமாத்தான் சொல்லுறேன்டி
நெருஞ்சியாக் குத்துதடி
நித்தமும் ஒன்நெனப்பு...!



**கலைவாணி சுரேஷ்பாபு**
துபாய்

# PRICE TAG

நௌஷாத் கான் லி
அபுதாபி

இந்த வருஷம் கிடைக்கிற தீபாவளி போனஸுக்கு தன் மனைவி ஐஸ்வர்யா என்கிற ஐஷுக்கு காஸ்ட்லி யான பட்டுப்புடவை வாங்கி தர்றேன்னு வாக்கு கொடுத்திருந்தான் சந்திரன் ..

ஏனோ பணமதிப்பு வீழ்ச்சி காரணமாக அவனது கம்பெனியுள்ள ஷேர் மதிப்பு எல்லாம் சரிந்து வீழ்ச்சி அடைந்து விட்ட காரணத்தினால் சம்பளம் கூட முழுதாய் போட வில்லை, இந்த நிலைமையில் எங்கே இருந்து போனஸ் தருவார்கள் ..அந்த நிறுவனத்தில் பணிபுரிந்த பாதி பேர் இந்த பணமதிப்பு வீழ்ச்சியால் சந்தை நிலவரம் வேற தாறுமாறாய் இறங்கி உள்ளதால் தங்களின் வேலை கூட பறிபோகி விடுமோ என்ற பயத்தில் நிறுவனத்தில் பணிபுரிந்த யாருமே போனஸ் பற்றி வாய் திறக்கவே இல்லை ...

சந்திரன் கம்பெனி கொடுத்த பாதி சம்பளத்தில் இந்த தீபாவளிக்கு குழந்தை களையாவது ஏமாற்ற கூடாது என்ற நல்லெண்ணத்தில் கொடுத்த பணத்தில் தன் குழந்தைகளுக்கு சுவீட், பட்டாசு, துணி மணிகள் வாங்கி கொண்டு சென்றான்.. அவன் முகம் வாடியிருப்பதை கண்டு அன்றிரவு ஐஸு அவனிடத்தில் எதுவும் பேசவில்லை ..

மறுநாள் விடியற்காலை சந்திரன் கட்டிலிருந்து எழுந்ததும் தன் நண்பன் குமாருக்கு போன் செய்தான் ..டே மச்சான் ஷேர் மார்க்கெட் டவுன் ஆனதாலே யாருக்குமே இந்த வருஷம் போனஸ் போடலை டா , சம்பளம் கூட பாதி தாண்டா கொடுத்தானுங்க ,உன்கிட்ட இருந்தா கடனா பணம் கொடு ,உன்கிட்ட இல்லைன்னா தெரிஞ்ச யாருகிட்டயாவது வட்டிக்காவது பணம் வாங்கி கொடுடா ,அடுத்த மாசம் சம்பளம் வந்ததும் முதல் வேலையா பணத்தை தந்திடுறேன் ,இந்த வருஷம் ஐஷுக்கு இன்னும் தீபாவளி டிரஸ் கூட வாங்கலைடா என்றான்... டே மச்சான் என்கிட்ட ஐந்தாயிரம் பணம் இருக்கு, அதை உனக்கு நான் தர்றேன், அதுல தங்கச்சிக்கு டிரஸ் வாங்கிக்கோ, தேவையில்லாம வட்டிக்கு எல்லாம் யாருகிட்டயும் பணம் வாங்க வேண்டாம் என்றான் குமார்.. சரிடா நண்பா என்று சொல்லி போனை வைத்தான் சந்திரன் .தன் கணவன் பேசிய தொலைபேசி உரையாடலை ஐஷு உறங்குவது போல பாவனை செய்து முழுவதுமாய் கேட்டறிந்தாள்.

குமாரிடம் பணத்தை வாங்கி கொண்டு ,தன் மனைவி ஐஷுவை அழைத்து கொண்டு ஒரு ஜவுளி கடைக்கு சென்றான் சந்திரன் ..அவனிடம் உள்ள ஐந்தாயிரம் ரூபாய்க்கு முழுவதுமாய் தன் மனைவிக்கு டிரஸ் வாங்க முடிவு செய்தான் ..ஐந்தாயிரம் ரூபாய்க்கு ஒரு அழகான புடவையை அவளிடம் காண்பித்தான் அந்த விலைபட்டியலை பார்த்ததும் வேண்டாம் என்றாள்,ஒவ்வொரு முறையும் அவன் ஐந்தாயிரம் ரூபாய்க்கு புடவை காண்பித்தாலும் வேண்டாம் என்று சொல்லி விட்டு விலை பட்டியலை பார்த்து

ஒரு ஆயிரம் ரூபாய்க்கு புடவையை எடுத்து இது தான் வேண்டுமென்றாள்..

மனைவி அந்த புடவை தான் வேண்டுமென்று சொன்னதும் அரை மனதுடன் அதை வாங்கி கொடுத்தான் ..வீட்டிற்கு வந்ததும் உங்க கஷ்டத்தை உங்க நண்பர்கிட்ட மட்டும் தான் சொல்வீங்களா,உங்களோட காலத்துக்கும் இன்ப துன்பத்தை பகிர்ந்து கொள்ள வந்திருக்கும் உங்க பொண்டாட்டிக்கிட்ட சொல்ல மாட்டீங்களா???

இந்த வருஷ தீபாவளிக்கு பட்டுப்புடவை வாங்கி தர முடியலைன்னா அடுத்த வருஷம் நல்லா இருக்கும் போது வாங்கி கொடுங்க ,எனக்கு என் புருஷன் சந்தோசம் தான் முக்கியம் என்று சொல்லி அவன் தோள் மேல் சாய்ந்து கொஞ்சம் கண்ணீரோடு அவன் மீது முகம் புதைத்தாள் ...

சாரி-டி என்று சொல்லி அவள் கண்ணீர் வழிந்த முகத்தில் தன் ஈர உதட்டால் மாறி மாறி முத்தமிட்டான் சந்திரன் ..



# கருவறைக் காதல்

மங்கையாக மண்ணிலே பிறந்ததன் அடையாளமே
சின்னமாக இறைவனால் கொடுத்த வரமே
உயிரில் கலந்த உயிர் நாடியே
தலை நிமிர்ந்து நடக்க வைத்த
தலை சிறந்த அற்புத சக்தியே
உடலெங்கும் ஓடும் இரத்த நாளமே
உற்றார் உலகம் போற்றிட வைத்த
இதயத் துடிப்பு ஓசை ராகமே

உன்னாலே நான் காலத்தால் அழியாத
பெண்மை வெற்றி மகுடம் சூட்டப்பெற்றேனே

**ஜஸூரா ஜலீல்**
மலேசியா LR

# பாச ஊஞ்சல்

புல்லாங்குழலன்

அங்கே போகும் உருவங்கள் யார்? மெல்ல மெல்லப் பதுங்கிப் பதுங்கிச் செல்கிறார்களே என அந்த இருட்டிலும் ஆவலுடன் பார்த்தாள் நீலவேணி. அவள் வசதி படைத்த ஒரு வீட்டில் வேலை செய்யும் பணிப் பெண் தான். வயதும் 50 இருக்கலாம். அந்த வீட்டின் குடும்பத்தாருக்கு உண்மையாய் உழைப்பவள். அவளுடைய ஆர்வம் தலைக்கேற அந்த உருவங்களைப் பார்க்கத் தன்னால் முடிந்த அளவு வேகத்தில் சத்தமிடாமல் பின்னால் நடந்தாள். ஒரு திருப்பத்தில் திரும்பும்போது அந்தத் தெரு முடிந்து சாலை தொடங்கிய இடத்தில் எரிந்த விளக்கொளியில் அந்த உருவங்கள் கண்ணின் பார்வைக்குக் கிடைத்தன. ஐயோ இதென்ன தன் எஜமானியின் மகளல்லவா அது? கூட இருப்பது நான்காவது வீட்டிலிருக்கும் நம்பீசன் அவர்களின் மகனல்லவா? எங்கே செல்கிறார்கள் இவர்கள். இருவர் கைகளும் பிணைந்திருக்கின்றனவே. காதலோ? எனப் பலவாறு சிந்தித்த வண்ணம் நடை தளர்ந்து நடந்தாள் வீடு நோக்கி.

இரவு முழுவதும் அவளால் தூங்க முடியவில்லை. நேற்று தன் தோழியைப் பார்க்கப் போவதாகக் கூறிய அவள் அந்த நான்காவது வீட்டிற்குத் தான் போயிருக்கிறாள் போலும். நம்பீசனும் அவர் மனைவி மற்றும் ஒரு மகளோடு நேற்று தான் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டுப் போனதை நான் பார்த்தேனே, அப்படியென்றால் இவர்கள் தனிமையில் அந்த வீட்டிலிருந்திருக்கிறார்களா? இன்று இரவு நம்பீசன் திரும்புவதாய்த் தானே சொல்லிக் கொண்டிருந்தார். அதனால் தான் வெளியே கிளம்பி விட்டார்களோ? என்றாலும் இவ்வளவு பக்கத்தில் தைரியமாக இந்தச் செயலை செய்திருக்கிறாளே இந்தப் பெண். இந்தப் பெண்ணை நான் தன் பெண்ணாக நினைத்தேனே. அவளுடைய உண்மைப் பெயர் விந்தியாவைக்கூடக் கூப்பிடாமல் செல்லம் என்று தானே கூப்பிடுவேன். அவளும் நல்லப் பெண்ணாகத்தானே இருந்தாள். கலிகாலம். எதை நினைப்பது, எதைச் செய்வது என எனக்குப் புரியவில்லையே. இப்படியே மனதிற்குள் புலம்பியவாறிருந்தவள் விடியற்காலை 4 மணிக்கெல்லாம் தூங்கிப் போனாள்.

நீலவேணி, நீலவேணி எனக் குரல் கேட்டதும் கண் விழித்தவள் தன் எஜமானி ரங்கம்மாள்தான் தன்னைக் கூப்பிடுகிறாள் என அறிந்து வெகு வேகமாக அவளிடம் ஓடினாள். அம்மா, இரவு தூக்கம் இல்லாமல் போனதால் விடியற்காலை 4 மணிக்குத் தான் தூங்கியிருக்கிறேனம்மா. தப்பாக நினைக்காதீர்கள் எனக் குழைந்தாள்.

போடி, உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? நீ 4 மணிக்கு எழுந்திருப்பவளாயிற்றே. ஆச்சர்யமாய் இன்று 4 மணிக்குத் தான் தூங்கினேன் என்கிறாய். அது உண்மை தான் என நான் அறிவேன். சரி சட்டுபுட்டென்று வேலைகளைக் கவனி. விந்தியாவின் அப்பாவுக்கு சீக்கிரம் காபி கொண்டு வா என்றவள் அங்கிருந்து நகன்றாள்.

வேகமாக பற்களையும் முகத்தையும் சுத்தம் செய்து குளித்துவிட்டு பரபரவென சமையலறை வந்து காபி போட்டுக் கொண்டு விந்தியாவின் அப்பாவுக்குக்

கொடுத்தாள். ஒரு கோப்பையை ரங்கம்மா வுக்கும் கொடுத்தாள்.

என்ன நீலவேணி ஏன் ஒரு மாதிரி யாயிருக்கிறாய்? உடம்புக்கு ஏதாவது சுகவீ னமா? அக்கறையோடு கேட்டார் சுகவனம்.

இல்லை ஐயா. மனதில் சில குழப்பங்கள். அது தான்.

என்ன குழப்பங்கள் உனக்கு நீலவேணி என்றாள் ரங்கம்மாள்.

பிறகு பேசுகிறேன் அம்மா, இப் போது போய் டிபனுக்கான வேலைகள் செய்கிறேன். என்றவள் அங்கிருந்து வேக மாக வெளியேறி சமையலறைக்குள் சென்றாள்.

நான் பார்த்ததை இவர்களிடம் எப்படிச் சொல்வது? பாவம் மனம் உடைந்து போவார்களே. அதுவும் ரங்கம் மாவால் இதைத் தாங்கவே முடியாதே, என்ன செய்வது. சரி டிபன் வேலைகள் முடிந்த பிறகு மெதுவாக நம்பீசன் மகன் நரேந்திரனைப் பற்றி ஏதாவது தெரிகிறதா என அவன் வீட்டிற்குச் சென்று தெரிந்து கொள்ளலாம் என மனதை சமாதானம் செய்து கொண்டு வேலைகளைத் தொடர்ந்தாள்.

அப்போது காலிங் பெல் சத்தம் கேட்கவே வேகமாகச் சென்று வாயிற் கதவைத் திறந்தாள். அங்கே விந்தியாவின் பிரண்டு ரஞ்சனி நின்று கொண்டிருந்தாள்.

ஆண்டி, விந்தியாவைக் கூப்பிடுங் களேன்.

என்னம்மா, நீ முதலில் இங்கே உட்காரம்மா. நான் விந்தியாவின் அம்மா வைக் கூப்பிட்டு வருகிறேன் என்று அங்கிருந்து நகர்ந்தாள் நீலவேணி.

என்னடா இந்தப் பெண் விந்தியாவைத் தேடி வந்திருக்கிறாளே. இவள் அவளுடைய நெருங்கிய தோழியா யிற்றே. இவளுக்குக் கூடத் தெரியாமல் தான் போகிறாளா விந்தியா என மனதில் குழப்ப அலைகள் வேகவேகமாக அடித்துக் கொண்டிருந்தன.

அம்மா, விந்தியாவைக் கூப்பிட ரஞ்சனி வந்திருக்கிறாளம்மா என்று சொன்னதும் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்த ரங்கம்மாள் எழுந்து ஹாலுக்கு வந்தாள்.

என்ன ரஞ்சனி, நேற்று உங்கள் தோழி வீட்டுப் பங்ஷனுக்குப் போனீர் களே, நீ மட்டும் வந்திருக்கிறாய். எங்கே விந்தியா என்றாள் ரங்கம்மாள்.

ஆண்டி நாங்கள் நேற்று எங்கும் போகவில்லையே. விந்தியா என் வீட்டிற்கே வரவில்லையே, ஏன் இப்படிக் கேட்கி றீர்கள்.

பிறகு அப்படி ஏன் அவள் சொன்னாள்

ஏன் அவள் பொய் சொன்னாள் எனத் தெரியவில்லையே ஆண்டி.

அப்படியென்றால் அவள் எங்கே தான் போனாள். நான் போய் எங்கள் பிரண்டு வீடுகளுக்கு எங்காவது போயி ருக்கிறாளா எனப் பார்த்து வருகிறேன் எனப் புறப்பட்டாள் வேகமாக.

என்னடி நீலவேணி இது. இந்தப் பெண் இப்படிச் சொல்கிறாளே. எங்கே போனாள் விந்தியா.? உனக்கு ஏதாவது தெரியுமா?

அம்மா நேற்றிரவு என் தலைவலியே இதனால் தானம்மா

என்னடிச் சொல்கிறாய்.

ஆமாம்மா. நேற்றிரவு 10 மணி இருக்கும். இருட்டில் இரண்டு உருவங் கள் செல்வதைப் பார்த்தேன். ஒரு ஆர்வத்தில் பின்னால் சென்றேன் பார்ப்ப

தற்காக. ஆனால் என்ன சொல்ல, அது நம் விந்தியாவும் அந்த நம்பீசன் மகன் நரேந்திரனும் தானம்மா அது. இருவரும் கைகோர்த்துக் கொண்டு பதுங்கிப் பதுங்கி ரோட்டில் ஏறவும் ஒரு பஸ் வரவும் சரியாக இருந்தது. அதில் ஏறியதை நான் பார்த்தேன்.

பிறகு ஏன் என்னிடம் நீ சொல்ல வில்லை இதை.

அந்த இரவில் நீங்கள் துன்பப் படுவீர்கள் என்பது ஒரு புறமென்றால் இன்னொரு புறம் ஒருவேளை அவள் இன்று காலை இங்கு வரலாம் என்ற நப்பாசையிலும் தான் உங்களிடம் சொல்லவில்லை. அதுதான் என்னை இரவெல்லாம் துன்புறுத்தியது.

எங்கு சென்றிருப்பார்கள்.? என்ன இது

அம்மா அவர்கள் காதலிப்பார்கள் போலிருக்கிறது. இன்று காலையில் இங்கிருந்து புறப்பட்டு விந்தியா நரேந்திரன் வீட்டிற்குத் தான் சென்றிருக்கிறாள். அவர்கள் வீட்டில் நரேந்திரன் மட்டுமே இருந்திருப்பான். நம்பீசன் நேற்று முந்தைய நாள் இரவு ஊருக்குப் போனவர் நேற்று இரவு 11 மணிக்குத் தான் திரும்பியிருப்பார். இவர்கள் அதற்குள் வெளியேறிவிட்டார்கள்.

ஐயோ, நீ சொல்வதைப் பார்த்தால் அவர்கள் ஏதாவது ஏடாகூடமாய் நடந்திருப்பார்களோ-? என்ன செய்வேன் நான்

அம்மா, அப்படியெல்லாம் இருக்காது என்றே நம்புவோம். அப்படியே இருந்தாலும் அவர்கள் உறுதியானவர்கள் போல் தானிருக்கிறது. அதனால் திருமணத்தில் அது முடியக்கூடும். பொறுமையாயிருங்கள். இன்று ஏதாவது செய்தி தெரிகிறதா எனப் பார்ப்போம் என்றாள் நீலவேணி.

அப்போது அங்கே வேகமாய் ஓடி வந்த நம்பீசன், அம்மா இந்த லட்டரை எழுதி வைத்துவிட்டு அவர்கள் கிளம்பிவிட்டார்கள் அம்மா என்று கண்ணீரோடு சொன்னார்.

லட்டரை வாங்கிய நீலவேணி அதைப் படித்தாள். நாங்கள் இருவரும் சென்னையில் வேலை கிடைத்திருப்பதால் அங்கே செல்கிறோம். அங்கேயே தங்குவோம். எங்களுக்கு திருமண ஏற்பாடுகள் செய்ய நீங்கள் விந்தியாவின் வீட்டில் பேசி நல்ல முடிவு சொல்லும் வரை நாங்கள் எங்கிருக்கிறோம் என்பதைச் சொல்ல மாட்டோம். எங்கள் காதல் உறுதியானது என்றிருந்தது. லட்டரைப் படித்ததும் நம்பீசன் மௌனமாய் எழுந்து போய்விட்டார். ரங்கம்மாவும் பக்கத்திலிருந்த சுகவனமும் சற்றே கோப முகத்தோடும் அழுகையுடனும் சிலைகளாய் உட்கார்ந்து விட்டனர்.

அப்போது அங்கே வந்த ரஞ்சனி அந்தச் சூழ்நிலையைப் பார்த்தாள். மௌனமாய் அங்கிருந்து சென்று விட்டாள்.

இரண்டு நாட்கள் கழிந்தன. வீடே சோகத்தில் மூழ்கியது. எதுவும் சரியாக நடக்கவில்லை. சாப்பிடக் கொடுத்தாலும் யாரும் சாப்பிடவில்லை. நீலவேணியால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் ரங்கம்மாவிடம் சென்றாள்.

அம்மா, நானும் உங்களோடு இந்த வீட்டில் இருக்கிறேன் என்பதால் எனக்கும் வருத்தமிருக்கிறது. அவர்கள் உண்மையாய்க் காதலித்தாலும் நம்மிடம் சொன்னால் அது தடையாகுமோ என்கிற அச்சத்தில்தான் இந்த முடிவு எடுத்திருப்பார்கள். இருவரும் சம்பாதிக்கிறார்கள். நல்ல குடும்பங்கள் தான். உங்களுக்கு அவர்கள் சற்றுக் குறையலாம். மற்றபடி திருமணமானால் எல்லாம் நல்லபடியாகத்தானே முடியும்.

கண்களில் வழிந்த நீரைத் துடைத்த ரங்கம்மாள் சரி நீ அந்த ரஞ்சனிப் பெண்ணை இங்கே கூட்டி வாயேன் என்றாள்.

அவள் சொல்லும்போதே ரஞ்சனி அங்கு வந்துகொண்டிருந்தாள். அவள்

கையில் ஒரு கடிதம். ஆண்டி விந்தியா எழுதிய கடிதம் இது. அவர்கள் நலமாம். நீ அம்மாவிடம் சொல்லி என்னை மன்னிக்கச் சொல். எங்கள் திருமணத்திற்கு அவர்களை சம்மதிக்க வை என்று எழுதியிருக்கி றாளம்மா

ரஞ்சனி, அவள் இல்லாமல் என்னால் ஒரு பொழுதைக்கூட கழிக்க முடிய வில்லையே. தோட்டத்திற்குப் போனால் அவள் நினைவு, முன்னாள் வந்தால் ஊஞ்சல் ஆட்டம், தாங்க முடிய வில்லை ரஞ்சனி.

ஏனம்மா, அவளுக்கு எப்படியும் கல்யாணம் செய்தால் இந்தப் பிரிவு வரத்தானே செய்யும்.

அதுசரி. அதற்கு நான் முன்பே தயா ராவேன். இப்படித் திடுமென்று என்னைக் கலங்க வைத்துவிட்டாளே உன் தோழி. மகளே நீயும் என் மகள் போன்றவள் தான். நீயாவது இப்படி முடிவெடுக்காதே. நானே உனக்கு உதவுவேன் என்றாள்.

அதெல்லாம் எனக்குத் தெரியும் ஆண்டி. என்று அவள் சொல்லிக் கொண்டி ருக்கும்போதே கையில் ஒரு கடிதத்தோடு நம்பீசனும் அங்கே வந்தார்.

என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா. விந்தியாவின் பெற்றோர்களிடமும் என்னையும் விந்தியாவையும் மன்னிக்கச் சொல்லுங்கள் அப்பா என எழுதி யிருக்கிறான். என் மகன். தயவு செய்து அவர்களுக்கு திருமணம் செய்து விடுவோம் மறுக்காதீர்கள். எங்கள் மகனைப் பார்க் காமல் என் மனைவியும் கண்ணீர் சிந்துகி றாள் பார்க்க முடியவில்லை என்றார் சோகத்துடன்.

சரி இருவருக்கும் மெயில் அனுப்பி விடுங்கள். திருமணத்திற்கு சம்மதம் என்று என சுகவனமும் ரங்கம்மாளும் சேர்ந்து சொன்னார்கள் சற்றே புன்முறுவலோடு.. நீலவேணி, ரஞ்சனி, நம்பீசன் முகங் களிலும் புன்முறுவல்கள் தெரிந்தன. ■

# துணைக்கு

காற்றில் மிதக்கும் இலை
துணைக்கு வருகிறது
எங்கிருந்தோ வந்த இறகு.

தண்ணீரை தேடும் பறவை
ஆறுதல் அளிக்கிறது
பள்ளத்தில் தேங்கியிருக்கும் நீர்.

கண்சிமிட்டும் தருணம்
மனதில் சிறகு விரிக்கிறது
வண்ணத்துப்பூச்சியின் ஞாபகம்.

இலையுதிர் காலம்
மரத்திற்கு துணையாகிறது
தனிமையிலிருக்கும் தாய்ப்பறவை.

மலையில் ஏறும் ஆடுகள்
நிழல் தருகின்றன
வானில் நகரும் மேகங்கள்.

**ச. கோபிநாத்**





# Dr. ஃபஜிலா ஆசாத்

(International Life Coach - Mentor - Facilitator)

# நோன்பின் மாண்பு

உங்களில் ஒருவர் நோன்பு இருக்கும்போது பண்பற்ற செயல்கள், பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மற்றவர்கள் அவ்வாறு பேச முற்பட்டால் நான் நோன்பு இருக்கிறேன் என்று மட்டும் பதில் சொல்லுங்கள் - பெருமானார் முஹம்மது நபி (ஸல்)

வழக்கமான ஊன் உறக்கம் இன்றி, ஏதோ விரதம் இருப்பது போல் பசியில், வேலைப் பளுவில் உழலும் என் வருத்தத்தையும் கோபத்தையும் என்று என் சுற்றமும் நட்பும் புரிந்து கொள்ளும்?

உண்பது மகிழ்ச்சி என்றும் உண்ணாமல் இருப்பது, வருத்தம், அகிம்சை வழி போராட்டம் என்றே பெரும் பாலும் எண்ணிக் கொள்கிறோம்.

“பசி வந்தால் பத்தும் பறந்து போகும்” இந்தப் பழமொழியை அறியாதவர்கள் இல்லை. ஆனால் பசித்திருங்கள் உங்கள் ஆற்றல் அதிகரிக்கும் எனும் இன்றைய அறிவியல் ஆய்வையும் நோன்பின் மாண்பை பற்றியும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆழ்ந்த உறக்கம் அழுத்தும் நள்ளிரவில் எழுந்திருக்க வேண்டும். உண்ட பின் உறங்குவது ஒரு சுகம். இங்கு உறக்கம் விழித்து சூரியன் உதிக்கும் முன் உண்ண வேண்டும். காலையில் உறங்கி எழுந்தவுடனே ஒரு கப் காஃபி சூடாக குடித்தே பழக்கம். ஆனால் இங்கு பழக்கத்தில் ஒரு மாற்றம். ஒரு மிடறு தண்ணீர் கூட அருந்த முடியாது. காபி, தண்ணீர், உணவு விடுத்து சுறுசுறுவென எழுந்து ஈடுபடும் அன்றாட வேலைகளுக்கிடையே, சூரியன் உச்சியைத் தொட, எட்டி பார்க்கும் பசிக்கு ஒரு கவளம் சோறு உண்டால் சுகம் தான்.. ஆனால் ஒரு பானை சோறு கண் முன்னே இருந்தாலும் எதுவுமே உண்ணாமல் பசியை மறந்து சூரியன் மறைவுக்காக காத்திருக்க வேண்டும்.

விசுவாசிகளே! உங்கள் முன்னோர்கள் மீது கடமையாக்கப்பட்டது

போல் உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் சிறந்த சுய கட்டுபாடுடையோர் ஆகலாம் - அல் குரான் 2:183

நீங்கள் நோன்பு இருக்கும் போது பண்பற்ற செயல்கள், பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்வது மட்டுமன்றி அந்த மாதிரி யாராவது பேச முற்பட்டால் கூட நான் நோன்பு இருக்கிறேன் என்று ஒதுங்கி விடுங்கள் என்கிறது நபி மொழி.

தன் பசியைக் கட்டுபடுத்தக் கூடிய ஒருவனால் கட்டுப் படுத்த முடியாதது எதுவுமே இல்லை. எந்த ஒரு மாற்றமும் 21 நாட்களுக்கு மேல் தொடர்ந்து செய்யப் படும்போது அது உங்களின் இயல்பான செயலாக மாறிவிடும் என்கிறது மன இயல்.

உண்பதற்காகவும் மகிழ்ச்சியாக இருப்பதற்காகவும் தான் உழைக்கிறீர்கள். ஆனால் உழைப்பதற்காக உணவையும் மகிழ்ச்சியையும் விட்டு விட்டு கோபத் தையும் வருத்தத்தையும் தூக்கி சுமக்கிறேன் என்கிறீர்கள்.

நீங்கள் விரும்பி வேலை செய்தால் பசியை உணர மாட்டீர்கள். விரும்பி பசித்திருந்தால் கோபம் வருத்தம் என சுய கட்டுபாடில்லாத உணர்ச்சிக்கு ஆளாக மாட்டீர்கள்.

உடலுக்கும் மனதுக்கும் சக்தி வேண்டுமா... பசியறிந்து நோன்பு இருங்கள் என்கிறார் கிரேக்க தத்துவ ஞானி பிளாட்டோ. நோன்பு உடலையும் மனதையும் பரிசுத்தப் படுத்தி சக்தியையும் ஆற்றலையும் அளிக்கிறது என்கிறார் மகாத்மா காந்தி .

உலக சுகாதார நிறுவனம் (WHO), ஸ்டான்ஃபோர்ட் பல்கலைகழகத்தில் ஒரு வெற்றியாளனுக்கு என்ன திறமை தேவையாக இருக்கிறது என்பதை குறித்து ஒரு நீண்ட ஆய்வு செய்தது. பல ஆண்டுகள் நடந்த அந்த நீண்ட ஆய்வு தலைமைப் பொறுப்பு வகிக்கும் ஒரு வெற்றியாளனுக்கு 20 % தான் I.Q எனப்படும் பள்ளிக் கல்வி அவசியமாக இருக்கிறது, 80% E.Q (emotional intelligence) எனப்படும் வாழ்க்கைக் கல்வி தான் தேவையாக இருக்கிறது. இந்த வாழ்க்கை கல்வியில் முக்கியமானது (self control) தன் உணர்ச்சிகளை தன் கட்டுபாட்டில் வைத்திருப்பதும், மற்றவர்களை சரியான முறையில் கையாண்டு அவர்களுடன் இயைந்து இயங்குவதும் தான் என்கிறது.

நினைத்ததை பேசி, நினைத்த நேரம் சாப்பிட்டு, என்றில்லாமல் தன்னுடைய சிந்தனையிலிருந்து, தான் பேசக் கூடிய வார்த்தைகளிலிருந்து, தன் உணவு உறக்கம் என எதையுமே நினைத்தேன் செய்தேன் என்றில்லாமல் சுய கட்டுபாட்டில் செய்யும் போது மனதில் ஒரு தெம்பு வரும். இப்படி என்னால் இன்று மாற முடியும் போது நிச்சயம் என் முன்னேற்றத்திக்குத் தேவையான வேறு மாற்றங்களையும் என்னுள் கொண்டு வர முடியும் எனும் தன்னம்பிக்கை எழும்.

ஏதோ செய்தோம் என்னவோ செய்தோம் என்று இல்லாமல் ஏன் செய்கிறோம், என்ன செய்கிறோம் என்று உணர்ந்து ஒன்றை செய்யும்போது அதன் பலனை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் உணரவும் அடையவும் முடியும். விருப்பத்தோடு ஒரு விஷயத்தை செய்யும் போது நம்முடைய DNA விலே இருக்கும் local adaptation syndrome (LAS) அதை நம்மோடு இயைந்து போகக் கூடிய ஒன்றாக மாற்றி விடுகிறது.

உண்மையில் வெறும் பழக்க வழக்கமே உங்கள் சக்தியையும் ஆற்ற லையும் நீங்களே அறிந்து கொள்ள முடியாமல் தடுத்து கொண்டிருக்கிறது. உங்கள் மனதிற்கு இப்படித் தான் என்று எதுவும் தேவையாக இருக்கவில்லை. அது நீங்கள் என்ன சொன்னாலும் கேட்க தயாராக இருக்கிறது. எது கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் உங்கள் விருப்பத்

திற்கு இயைந்து போகத் தயாராக இருக்கிறது.

மலையேற்றத்தில் பெரும் சாதனை படைத்த ஸ்வீடன் நாட்டை சேர்ந்த கோரன் கிராப் (Goran Kropp) எந்த நேரம் வேண்டுமானாலும் தூங்கவும், எந்த நேரம் வேண்டுமானாலும் எழுந்திருக்கவும் பயிற்சி எடுக்கும் நோக்கத்தில் கண்களை மூடிக் கொண்டு கை போன போக்கில் அலாரத்தை செட் செய்வார். அதனால் சில நேரம் இரவு படுத்த உடனே அலாரம் அடிக்கும். சில நேரம் விடிகாலையில் அலாரம் அடிக்கும். அவரைப் பொருத்த வரை எந்த நேரமாக இருந்தாலும் அலாரம் அடித்த உடனே எழுந்து மலையேற்ற பயிற்சிக்கு சென்று விடுவார். இப்படி பசி, தூக்கம் போன்ற அடிப்படைத் தேவைகளைக் கூட பொருட்படுத்தாமல் மனதையும் உடம்பையும் எனது கட்டுப்பாட்டில் வைத்ததால் தான் என்னால் எவரெஸ்ட்டை தொட முடிந்தது என்கிறார் அந்த வரலாற்று சாதனையாளர்.

வெற்றிக்கான மூலம் 4 p's - Positive attitude, passion, patience, perseverance என்கிறது வாழ்வியல். நல்ல எண்ணங்களுடன், விருப்பத்துடனும், பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும், செய்யப் படும் எந்த செயலும் வெற்றி பெறுவதோடு, அது உங்களை இன்னும் பல வெற்றிக்கு தகுதியாளனாக உருவாக்கி செல்லும் என்பதை நீங்கள் புரிந்து கொண்டால், எந்த வேலையும் பளுவாகத் தெரியாது. உண்ணாமல் உறங்காமல் விரதமே இருந்தாலும் ஆற்றலோடும் சக்தியோடும் இருப்பீர்கள்.

ஒரு நாள் நோன்பு வைப்பது மூன்று வாரம் தொடர்ந்து மருந்து சாப்பிடுவதற்க்கு சமம் என்கிறார் மருத்துவத்தின் தந்தை இப்னு சீனா. என்றென்றும் இளமையோடு இருக்க விரும்புகிறீர்களா நோன்பு இருந்து பாருங்கள் என்கிறார் ஆராய்ச்சியாளர் சைல்ட்.

அமெரிக்காவில் தொடர்ந்து நடந்து வரும் ஆய்வுகள், நோன்பினால் உடலுக்கும் மனதிற்கும் பல நன்மைகள் கிடைக்கிறது என அறிக்கைகள் விடுகிறது. பலமணி நேரங்கள் எதுவும் உண்ணாமல் தொடர்ந்து பல நாட்கள் நோன்பு நோற்பதால் உடலில் சேர்ந்த நச்சுப் பொருட்கள் (toxins) வெளியேறும். உடல் உறுப்புக்களில் ஆங்காங்கே தங்கிக் கிடக்கும் தேவையற்ற கொழுப்புக்கள் கரையும். இரத்த சர்க்கரை அளவு இயற்கையாக குறையும். உடல் வீக்கம், தலைவலி, மனப் பதற்றம், படபடப்பை ஏற்படுத்தும் ஸ்ட்ரெஸ் ஹார்மோன் எனப்படும் கார்டிசால் சுரப்பது குறையும் மட்டுமல்ல, நோன்பு நோற்பதால் Brain derived neurotrophic factor (BDNF) அதிகமாக சுரந்து அதனால் புதிய செல்கள் உற்பத்தியாகும். அதனால் மூளையின் ஆற்றல் அதிகரிக்கும் என விரும்பி பசித்திருப்பதால் கிடைக்கும் பலன்களை அடுக்கிக் கொண்டே போகிறது.

இனி, ஏதாவது ஒரு காரணத்தால் உணவு தாமதமாகும் போது பசியில் உடல் சோர்ந்து போகாமல் கோபப் படவோ செய்யாமல் இந்த பசியும் தாகமும் ஒரு மாயையே, பல மணி நேரம் உணவு தண்ணீர் இல்லாமல் தாங்கக் கூடிய சக்தியும் சுய கட்டுப்பாடும் என்னிடம் இருக்கிறது, இந்த பசி எனக்கு நன்மையே செய்யும் என்று உங்களுக்கு நீங்களே நினைவூட்டி கொள்ளுங்கள். அப்படி நீங்கள் உங்கள் மனபலத்தை உணரும் போது அது உங்களுக்குள் நிதானத்தையும் உறவுகளுக்குள் அன்பையும் நிரப்பும். ■

---

## ஈதலின்பம்

இன்பம் எதுவென்றால்
ஈதலாகும் நீயதை
என்றும் மறவாதே
இல்லாதான் - துன்பத்தைப்
போக்கும் உதவி
புகழினை ஈட்டிடும்
வாக்கும் சிறந்திடும்..
மாறு

- தமிழ்நெஞ்சம் அமின்

# சென்று வா பிறையே!

பாவேந்தல் பாலமுனை பாறூக்

ஆயிரம் மடங்காய் நன்மைக ளெல்லாம்
அள்ளித் தருகிற இனிய நோன்பு
மாதம் முழுவதும் பயிற்சியைத் தருகிற
மகத்துவம் மிக்க புனித நோன்பு
தான தருமம் ஸதகா வென்று
தாராள மாக வழங்கிடச் செய்ய
ஆவலைத் தூண்டிடும் அற்புத நோன்பு
நோய்களுக் கெல்லாம் அரும ருந்தாக
நாயனே அளித்த  நற்கொடை நோன்பு

லைலத்துல் கத்ர் இரவை வழங்கி
ரைகான் சுவன பதியை வழங்க
இறைவன் அளித்த இன்னருள் நோன்பு
திருமறை தன்னை அருளிய மாதப்
பெருமையைப் பெற்ற புண்ணிய நோன்பு

அமல்களால் பள்ளிகள் நிறைகிற தாலே
அழகினைப் பொலிவைத் தருகிற நோன்பு
தறாவீஹ் தொழுகையில் துலங்கிடும் நோன்பு
தன்னிக ரில்லாப் புண்ணிய நோன்பு
வளங்களைப் பெருக்கி பரக்கத் தாக
உளமெலாம் மகிழ்ச்சியை உணர்த்திடும் நோன்பு

பிரிந்தது இன்று, பெருநாள் மலர்ந்தது
பிறையைக் கண்டு பிடித்த நோன்பினை
பிறையைக் கண்டு விட்டத னாலே
பிறந்தது பெருநாள் நோன்புப் பெருநாள்!

சென்று வா பிறையே!
அன்புடன் உன்னை அனுப்பிவைக் கின்றோம்!
சென்று வா!
பிரார்த்தனை யோடும் தொழுகை யோடும்
பிறையே உன்னை அனுப்பிவைக் கின்றோம்!

எங்கும் நாங்கள் சென்று மகிழ
எரிபொரு ளில்லை , எங்கள் நாட்டில்
பண்டங்கள் பலகா ரங்கள் செய்தே
உண்டு சுவைத்திட எரிவாயு இல்லை
பொருட்களுக் கெல்லாம்  விலையும் ஏறி
உச்சத்தில் சென்று  அமர்ந்தத னாலே
எதையும் வாங்க முடிவது மில்லை!
கியூவில் தெருவில் நாள் நாளாக
பொருட்கள் வாங்க நிற்பதி னாலே
பெருநாள் பெரிதாய் அமைந்திட வில்லை .
எனினும் -
வரும் வரும் நாட்களில்
நல்லதோர் பெருநாள்
நமக்கு அமையும் என்ற நம்பிக்கை யோடு
அனுப்பி வைக்கிறோம் சென்று வா பிறையே!

## ஹைக்கூ

கா.ந.கல்யாணசுந்தரம்

*
மாவிலைத் தோரணங்களில்
தெளிவாகத் தெரிகிறது
மாந்தோப்பின் தோற்றம்

*
சிலைகளின் வடிமைப்பில்
சிந்தையைக் கவர்கின்றன
சிற்பியின் நுண்ணறிவு

*
அடுக்குமாடி கட்டுமானத்தில்
ஆனந்தப் படுகிறான்
ஏழைத் தொழிலாளி

*
நாற்காலியில் அமர்ந்ததும்
நெஞ்சைத் தழுவுகிறது
வனத்தின் குளிர்ச்சி

*
சிங்கத்தின் கர்ஜனையோடு
சேர்ந்தே ஒலிக்கிறது
காட்டுக் குயிலின் கீதம்

*
மண்வாசத்தோடு
கிராமத்துக்குள் நுழைகிறது
கோடை மழை

*
அருவி ஆர்ப்பரிக்கையில்
அமைதியுடன் மேலெழுகின்றது
மழை மேகம்

*
தாமரை இலை நீர்த்துளி
தாவி குதித்தது
தாமரை மலருக்குள்

## தன்முனைக்கவிதைகள்

**கவிஞர் கார்கவி சேகா**

ஒவ்வொரு செயலிலும்
முயற்சி பிறக்கிறது
பிறந்த குழந்தைக்காக
எத்தனை முயற்சி

*
நிரப்பப்பட்ட பலூன்களில்
அப்பனின் மூச்சுக்காற்று
மெல்ல மெல்ல இறங்குகிறது
காலன் கையில் குண்டூசி

*
நீரும் சேறும்
கலங்கினால் பலனில்லை
மனதும் கண்களும்
கலங்கி நிற்கிறது மனிதம்

*
ஒரு பிடி சோற்றுக்கு
பல ஏக்கர் அவா
பருக்கையில் எழுதப்படுகிறது
பசியுடன் கடனும்

*
இரவுக்கு விடை கொடுத்து
கனவு பிறக்கிறது
அம்மையும் அப்பனும்
அழாத விடியல் போதும்

*
நீ அழாமல் செல்
தாயின் நம்பிக்கை
நீ விழாமல் வா
தகப்பனின் நம்பிக்கை

*
தன்னை நிமிர்ந்து பார்த்து
வியந்து கொள்பவன்
குனியும் பொழுது
தனது நிழலை மிதிக்கிறான்

*
கட்டில் ஆடியதும்
காமம் கதவோடு வெளியேறியது
கைக்கட்டி வேடிக்கை பார்க்கிறது
தோட்டத்து ஆலமரம்

*

## நிலவும் வான் மலரும்

நிலவும் வான் மலரும் துளிரும்
முகிலும் மேகமும் களிறும் பிளிறும்
கொண்டை பூக்களும் கொட்டும் தேனீக்களும்
இயற்கையின் கொடையில் வாழ்வோம்
இனிதாய் ..!

**ச. இராஜ்குமார்**
திருப்பத்தூர்

## செல்வத்தின் பயன் ஈதல்

செல்வப் பயனும்
சிறப்பும் எதுவென்றால்
இல்லானுக்கு ஈதல்;
இதையென்றும் - நல்லான்
மறவாதான்... அல்லான்
மலையளவு கொண்டும்
பிறர்க்கு உதவான்
பிடித்து

**- தென்றல்கவி**

## கண் கெட்டப்பின் சூரிய நமஸ்காரம்!

அழகில்லை யென
இரு வருடங்கள் தட்டிக்கழித்தான்!
படிப்பு குறையென்று
சில வருடங்கள் ஓடின!

கை நிறைய சம்பளம்
வாங்கவேண்டுமென
இன்னும் பல வருடங்கள்
கடத்தினான்!

இப்போதெல்லாம் யாரும்
வரன் தேடி
அவன் வீட்டுக்கு வருவதில்லை!

காமன் மட்டும்
தினம் தவறாது
வந்துவிடுகிறான்!
வெட்கங்கெட்ட காமத்துக்கு
நேரம் காலமும் தெரிவதில்லை!

வயது முப்பத்தியேழு ஆகி
தலையும் வழுக்கையாகிவிட்டது!
இப்போதைய அவன் தேவையெல்லாம்
மணம் புரிய ஒரு பெண் மட்டுமே!

**- ஜேசு ஞானராஜ்,**
ஜெர்மனி

## மே மாத மலர்களின் வாசம் !

அந்த ஆலமரத்தில் ஊஞ்சல்
யாரோ கட்டியது....
தினம் ஒருமுறையாவது அமர்ந்து
ஆடிவிட்டுச் செல்கிறேன்..!
முன்னும் பின்னும் ஆட....
கால்களை உந்தித் தள்ள...
விண்ணுக்குள் பிரவேசிக்கும்
இன்ப வெள்ளத்தில் மிதக்கிறேன் !
இனம்புரியா அமைதி நிலவ
நெஞ்சம் நன்றி சொல்கிறது !
மே மாத மலர்களின் வாசத்தில்
என்னை நானே இழக்கிறேன் !
கைகோர்க்கும் நல்லெண்ணப் பாதை
இங்கே பதியமிடப்பட்டுள்ளது !
ஆடுமேய்க்கும் சிறுவன்
சந்தைக்கு செல்லும்
நடைபாதைப் பயணிகள்
பள்ளிச் சிறுமிகள் என
பலரையும் மகிழ்விக்கும் ஊஞ்சலில் ....
தெளிவாய்த் தெரிகிறது....
யாருக்கும் தெரியாமல்
எப்போதும் ஆனந்தமாய்
அமர்ந்தபடி ஆடிக்கொண்டிருக்கிறது....
தன்னலமற்ற மனிதநேயம் !

**- கா.ந.கல்யாணசுந்தரம்**




தஞ்சை தமிழ் மன்றம் தனது 3வது ஆண்டு விழாவை கடந்த 17 ஏப்ரல் 2022 அன்று வலங்கைமான் ருக்மணி திருமண மண்டபத்தில் கொண்டாடியது. விழாவிற்குத் தஞ்சைத் தமிழ் மன்றத் தலைவர் திரு பாலு கோவிந்தராஜன் அவர்கள் தலைமை தாங்கினார். விழாவிற்கு வந்தவர்களை தஞ்சை தமிழ் மன்றத்தின் செயலாளர் இராம வேல்முருகன் வரவேற்க, துணைத் தலைவர் தேவநாதன் செல்வரத்தினம் தமிழ்த்தாய் வாழ்த்து பாடினார். ஆண்டாங் கோயில் சுந்தர்ராஜன் குழுவினரின் தமிழ் இசை பாடல்களுடன் நிகழ்வு துவங்கியது. இதனைத் தொடர்ந்து கவிஞர்கள் ஏர்வாடி ராதாகிருஷ்ணன், இளவல் ஹரிஹரன், நிறைமதி நீலமேகம், சரஸ்வதி பாஸ்கரன், செல்வ மீனாட்சி சுந்தரம், சி புண்ணியா, செம்மங்குடி துரையரசன், கவிக்கோ துரை வசந்தராசன் ஆகியோருக்குக் கவிஞர் கம்பதாசன் விருது வழங்கப்பட்டது. நிலா முற்றக் கவிக்குழும நிறுவனர் முத்துப்பேட்டை மாறன், தமிழ் பட்டறையின் நிறுவனர் சேக்கிழார் அப்பாசாமி மற்றும் பிரான்ஸ் தமிழ்நெஞ்சம் அமின் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து துரை வசந்தராசன் அவர்கள் தலைமையில் பாரதிதாசன் சிறப்பு கவியரங்கம் நடைபெற்றது கவியரங்கில் கவிஞர்கள் பாலு கோவிந்தராஜன்,செல்வ மீனாட்சிசுந்தரம், செல்வா ஆறுமுகம், இளையதீபன், வா. சண்முகம், சுப முருகானந்தம் திரைப்பட இயக்குனர் சிவப்பிரகாசம், குஞ்சித சுகுமார், செந்தில் சுலோ, மற்றும் இராம வேல்முருகன் ஆகியோர் கவிதை வாசித்தனர்.



பரணிசுபசேகரின் பள்ளியெழுச்சிக் கவிதைகள், கோ.சிவப்பிரகாசரின் வானத்தைப் போல, பொன்மணிதாசன் அவர்களின் பொன்மணிதாசன் கவிதைகள் மற்றும் என் கரைக்கு வந்த கயல்கள் ஆகிய நூல்களும் கவிஞர் செல்வா ஆறுமுகத்தின் பொன் சாய் மரங்கள், நாகூர் பிச்சையின் பிறப்பும் சிறப்பும், தென்றல் கவியின் மார்கழிக்கிறுக்கல்கள், மா.பாலசுந்தரத்தின் முத்தமிட்ட வேர்கள், கவிச்சிகரம் அமுதன் அவர்களின்

பொன்னுத்தாயி இராம வேல்முருகனின் சமகாலக்கவிஞர்கள் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

பிற்பகலில் தவிலிசைக்கச்சேரி நாட்டிய நிகழ்வுக்குப் பிறகு நிறைமதி நீலமேகம் அவர்கள் தலைமையில் மகளிர் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் மாலதி திரு, ராணிலட்சுமி, மு இரா ஜெயந்தி, ரசியா பேகம், பாண்டிச்செல்வி, விஜி கல்யாணி ,மற்றும் தென்றல்கவி ஆகியோர் கவிதை வாசித்தனர்.

விழாவில் திருச்சி தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் திரு கா பொ ராசேந்திரன் மதுரை தியாகராசா கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் காந்திதுரை ஆகியோர் சிறப்புரை யாற்றினர். தமிழ்ப்பணிச் செம்மல் விருது, சேவைச்செம்மல் விருது சமூகக்காவலர் விருது என 70 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. விழாவில் பெருங்கவிஞர் அன்பு வல்லி தங்கவேலர், முனைவர் பெ செயச்சந்திரன், இளையதீபன், தென்பரை சுப்ரமணியன், வா சண்முகம் தென்பரை பாஸ்கர், திருபுவனேசுவரன் உள்ளிட்ட கவிஞர்கள் கலந்து கொண்டனர். வலங்கை நகரத்தலைவர் திரு சிவநேசன் அரசு வழக்கறிஞர் ராஜராஜசோழன்,














ரோட்டரி சங்கத் தலைவர் சிவக்குமார் வீராச்சாமி, மருத்துவர்கள் கவிநிலா மோகன்,வெங்கடேசன்சம்பத்,சிநாகராஜன் கோவிந்தராஜ், முனைவர் ஜெய இளங்கோ, தஞ்சைத் தரணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தஞ்சை மற்றும் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனை வலங்கை ரோட்டரி சங்கம் இணைந்து மருத்துவ முகாம் மற்றும் ரத்ததானமுகாம் நடத்தின. லோட்டே இந்தியா நிறுவனம் வந்திருந்த அனைவருக்கும் சாக்கோ பை எனும் இனிப்பு வழங்கினர். கவிச்சிகரம் முத்து விஜயன் நிகழ்வைத் தொகுத்து வழங்க தேவநாதன் நன்றியுரை நல்க விழா இனிதே நிறைவுற்றது.

வெண்பாப் பயணம் 6




# அவையடக்கம்

வானெழுதுங் காற்றின் வளமழையால் மண்பூக்கும்
தேனெடுக்குந் தும்பி திகட்டத் திளைத்துவிடும்
நானெழுதுங் கோல்கிறுக்கும் நாரண னேயன்றோ
ஊனெழுது முள்ள முணர்ந்து.

~ கண்ணன் கோபாலன்

.

ஆல மரம்போல ஆன்ற பெரியோர்கள்
சீல முடைத்துச் சிறப்புற்றுக் - கோலமதில்
வானளாவ ஓங்கியோர் வையத்தில் சூழ்ந்திருக்க
நாணலிடம் தந்திட்டார் நம்பு .

~ கவிஞர் அ முத்துசாமி தாரமங்கலம்

.

சித்தெறும்பிங் கொண்ணு செழிப்பான பூமியிதச்
சுத்திவரப் பாத்ததுபோல் சுந்தரனும் - முத்தமிழில்
முந்திக் கதசொல்ல முன்வந்தே னாசையிலே!
மந்தபுத்தி கேட்டேன் மனிப்பு!

~ சுந்தர ராசன்

கானலை நீரென்று கைமுக்கும் பேருண்டோ?
வானலை முட்ட வருகிறது! - தேனடை
சிந்தாத் துளிர்க்கும் தென்றலெனாத் தூறுமென்
சிந்தைத் துளிதவிர்ப்பீர் தேர்ந்து!

~ சுரேஜமீ

நற்றமிழ் நன்றோங்கும் நல்லறிவர் வாழ்வோங்கும்
பொற்றமிழ் வாழினப் பூமலரும் - முற்றினிய
நுட்ப வழிகோலும் நோக்கரிய நூல்நுவலும்
திட்ப அறமுரைக்கும் தேர்ந்து.

~ படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி

.
கற்றதும் பெற்றதும் கண்ணாகக் காத்திடவே
வற்றாதத் தீந்தமிழை வாழ்த்தியே - பற்றிடவே
சூழும் அவலமே சூழா தெழுதியே
வாழும் தழிழே உயர்வு

~ திலகவதி பாஸ்கர்

.
முந்தையவர் தந்துவிட்ட  முத்தமிழின்  சாரத்தை
சிந்தையுடன் சீர்தூக்கிச் செப்பிடவே - எந்தையுள்ளும்
உந்துகின்ற எண்ணமதை உன்னதமாய் கோக்கின்றேன்
சந்தமுள்ள எந்தமிழைச் சார்ந்து

~ கவிதா சீனிவாசன்

புலவர் கடலில்  பொருந்தாப் பனிநான்;
நலமும் கவிஞர்   நாடும் ~ பலவும்
பயிலாச் சிறுகிள்ளை;  பாவியற்றி வந்தேன்
குயிலாகக் கூவிக் குழைந்து...!

~ ஜ.க.நாகப்பன்

.
காவியத்தால் செம்மொழியைக் காத்திடவே நன்முறையில்
மேவிய வார்த்தைகளால் மேற்கொண்டேன் - நாவினில்
வந்து நடமாடும் வாணியவள் தன்னருளால்
சிந்தும் தமிழின் சிறப்பு.

~ க. இராணி இலக்குமி

தமிழ்ப்பா(ற்)க் கடலிலே தத்தளிக்கும் மீன்குஞ்(சு)
அமிழ்தம் கடையவே ஆவல் - இமியும்
தகுதியின்றி  வந்தேன் தகரக் குடுவை
மிகுதி அருந்தவே மொண்டு

~ பாவலர் ஞால ரவிச்சந்திரன்

.
பேரியக்க மண்டலத்தைப்  பேசவந்த தூசியைப்போல்
பாரியக்கம் அத்தனையும் பண்ணவந்த - தூரிகைபோல்
ஏரியினைத் தூர்க்கயெண்ணி ஏங்கிவந்த ஒட்டகம்போல்
பாரியினைப்* பாடவந்தேன் பார்த்து!

~ செ. இராசா

.
நாணலொன்று காற்றில் நதிமேல் சரிந்தெழுந்து
ஆணவத்தான் முற்றறிவாய்  ஆர்ப்பதன்ன – நாணமின்றிக்
காப்பிய ஆற்றொழுக்கைக்  கண்டுணர்வாய் நின்றுரைத்தேன்
மூப்பில்லா இப்புல்லோன் முன்பு

~ விசு. இம்மானுவேல், பெங்களூரு

## வெண்பாப் பயணம் 6

தமிழ்வளர் காவியத்தைத் தண்டமிழால் செய்யின்
அமிழ்தாகும் என்றிட்டார் ஆணை -- நிமிடத்தில்
வானளக்க எண்ணுகின்ற வால்குருவி செய்கைபோல்
நானதைச் செய்வேனோ நன்று.

~ சு.வி.லட்சுமி

.

பாவியமாம் பாற்கடலில்  பாங்காய் அமுதெடுத்து
ஓவியமாய் உள்ளத்தில் ஒற்றியே - மேவிடும்
சொல்லெடுத்து மேதினியைச் சென்றடைய வேண்டுகிறேன்
நல்லோரின் முன்னர் நெகிழ்ந்து.

~ வானதி சந்திரசேகரன்

.

நெல்லின் பதரன்ன நேர்த்தியிலா னென்றனையும்
சொல்லின் புதினம் செயச்சொன்னால் - கல்லின்நார்
காண்பதற்கு ஒப்பாகுங் கண்டீர் களத்தோடு
மாண்பறியா நான்களி மண்

~ க.சங்கரபாண்டியன், வடுகபட்டி

.

குயில்போலக்  காக்கைதாம்  கூவமுய  லல்போல்
பயிலாநான்  காப்பியத்தைப்  பாடல் – மயில்போல
ஆடுதற்கே  வான்கோழி  ஆசை  படல்போன்று
பாடுதற்கே  வந்துள்ளேன்  பார் !

~ பாவலர் கருமலைத்தமிழாழன்

.

நாடு பலதாண்டும் நாவாய்கள் மத்தியிலே
ஓடமொன்று கட்டியே ஓட்டுதலாய்ப் - பாடவந்தேன்
முந்து தமிழ்க்கடலில் மூழ்கியோர் தாள்பற்றத்
தந்து பயின்றதைத் தான்!

~ இரா.அழகர்சாமி

.

கருத்தாய்ப் பலர்பாடக் கைவந் தபடி
சிறுத்தே எழுதுகின்ற என்னைப் - பொறுத்தே
குருத்தாய் முளைத்த  புதுப்புலவ னென்று
விரித்தேற்க வேண்டும் மனம்.

~ கு.லோகநாதன், மதுரை.

.

எடுத்த பொருளதனை ஏற்ற முறையில்
தொடுக்க முனைந்து தொழுதேன் - அடுத்தே
அடுக்கடுக்காய்ச் சொற்கள் அழகாய் வழியக்
கொடுத்தனன் காவியக் கூட்டு.

~ கு. கமலசரஸ்வதி

.



# வெண்பா போட்டி (பயணம்) 7

போட்டியின் கால அளவு - ஏப்ரல் 25 முதல் மே 9 வரை

முழுமையாகப் படிக்கவும்

## தலைப்பு : ஞாபக மறதி

வணக்கம் புலவர்களே.....

ஞாபக மறதி என்பது எல்லோருக்கும் இயல்பானது. அவ்வப்போது வீட்டில் ஏதேனும் ஒரு பொருளைத் தொலைத்து விட்டு தேடுவது வழக்கம் தான். அவ்வாறு தேடும்போது எப்படி புலம்பிக் கொண்டே தேடுவீர்கள் என்பதை வெண்பாவாகச் சொல்லவேண்டும் என்பதே போட்டியின் விதியாகும்... எந்தப் பொருளைத் தொலைத்தீர்கள் என்பது தங்களின் கற்பனைக்கு ஏற்றபடி அமைத்துக் கொள்ளலாம்....

இதோ எ-கா வெண்பா....

எண்ணி திருக்குறளை
யான்படிக்கும் நேரத்தில்
நண்பர் அழைத்தமையால்
நானவரைக் - கண்டுவந்தேன்
ஈரே நிமிடத்தில்
எங்கோ மறந்துவைத்தேன்
யாரேனும் பார்த்தீரா
இங்கு....?




அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்.....

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழை யின்றி எழுதினாலே சிறப்பு.

.

என்றும் தமிழுடன்....

தமிழ்நெஞ்சம் அமின் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

# கார்கால வானம்!

கவித்திலகம்
வெற்றிப்பேரொளி

●

இப்படிக்
கறுப்படித்துக் கிடக்கிறதே
அப்படியென்ன துக்கம்
வானத்திற்கு?

●

அவ்வளவ பெரிய சோகமா?
இவ்வளவு பெரிய
கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது
கொட்டும் மழையாய்... !

●

வானம்
மின்னியும் இடித்தும் நடத்தும்
வாணவேடிக்கை
யாரின் இறுதி ஊர்லத்திற்காக?

●

எந்தப் பிணம் போனது... ?
வானவீதியில் சிதறிக்கிடக்கின்றன
உதிரி உதிரியாக
நட்சத்திரப் பூக்கள்!

●

நிலா....
புதைந்து கிடக்கிறது
மேக மேடுகளில்!



# சிறுவர்கள் பூங்கா

# அன்பின் சங்கமம்

53 - 61

1.
கோள வடிவ பந்து
அனைவரும் விளையாடும் பந்து
வண்ண வண்ண பந்து
பெரிய சிறிய பந்து

2.
குறும்புச் செய்யும் குட்டிமலர்
மழலை பேசும் அழகுமலர்
எங்கள் வீட்டு செல்லமலர்
அது நீதானே எங்கள் பாப்பா

3.
எங்கள் வீட்டு தோட்டத்தில்
செடிகள் பல வளருது
பூக்கள் பல பூக்குது
காயும் பழமும் கொடுக்குது

**பா.நித்யா**
சென்னை



# அமுதும் தேனும்



துர்காவும் கண்ணனும் பாசம் உள்ள அக்கா தம்பி. இரண்டு பேரும் ரொம்ப ஆனந்தமா அவங்க தோட்டத்தில அடிக்கடி விளையாடுவாங்க. ஒரு நாள் தோட்டத்தில விளையாடும்போது துர்கா கண்ணன் கிட்ட சொன்னா,

“தம்பி அங்க பாருடா ஒரு பட்டாம்பூச்சியும் தேனீயும் ஒரு பூ மேலே உக்காந்து இருக்கு வா போய் பார்க்கலாம்” “சரி அக்கா” னு சொல்லி ரெண்டு பேரும் போனாங்க, அங்க ஒரு ஆச்சரியமான விஷயம் பார்த்தாங்க, ஒரு பட்டாம்பூச்சியும் தேனீயும் ஒரு மலர் கிட்ட பேசிட்டு இருந்தாங்க.

“யார்டா செல்லம் நீ!இதுவரைக்கும் நாங்க உன்னை பார்த்ததே இல்லையே ரொம்ப குட்டியா அழகா இருக்கேன்னு“ பட்டாம்பூச்சியும் மலரும் அந்த தேனிய பார்த்து கேட்டுச்சு.

“வணக்கம்!என்பேருதேனு.கொஞ்ச நாளைக்கு முன்னாடி தான் முட்டையை விட்டு வெளியில வந்தேன் சிறகுகள் முளைத்து உடனே வெளியுலகத்தை பார்க்கணும்னு ஆசைப்பட்டு எங்க ராணி கிட்ட கேட்டு, மற்ற தேனீ நண்பர்களோட நான் வெளியில வந்தேன். அங்க பாருங்க மற்ற தேனீக்கள் எல்லாம் மகரந்தத்தையும் அமிர்தத்தையும் சேகரிக்கிறாங்கனு’’ சொன்னது தேனு.

ஓ!! அப்படியா விஷயம் அப்படினு மலரும் பட்டாம்பூச்சியும் கேட்டுச்சு.

தேனு சொன்னது, “வெளி உலகம் ரொம்ப ஆபத்தானதுனு எங்க ராணி சொன்னாங்க உண்மையா மலர் அக்கா?” “ஆமாண்டா செல்லம் வெளி உலகம் ரொம்ப ஆபத்தானது. எங்கள மாதிரி பூக்களோடு இனமே அழிஞ்சிட்டு போகுது. எங்களை மாதிரி பூக்களும் செடிகளும் உருவாக்குவதற்கு யார் காரணம் தெரியுமா? உங்கள மாதிரி தேனீக்களும் பட்டாம்பூச்சிகளும் தான்’’.

பட்டாம்பூச்சி கேட்டது “என்ன சொல்றீங்க மலர் அக்கா நாங்க தான் காரணமா?’’

"ஆமா ஆமா பட்டு அக்கா நானும் இதே தான் கேள்விப்பட்டேன் .நம்மள மாதிரி தேனீக்களும் பட்டாம்பூச்சிகளும் மலர்களிலிருந்து அமிர்தத்தை உணவா எடுக்கிறோம், மகரந்தத்தை அந்த பக்கம் இந்த பக்கம் பரவச் செய்கிறோம். புதுப்புது செடிகளும் பல மரங்களும் வளர்வது அதனால தான் தெரியுமா? மனுஷங்களுக்கு இத்தனை உணவுகள் இருந்தாலும் நாம்ப செய்யற இந்த தேனை தான் ரொம்ப விரும்பறாங்க ஏன் தெரியுமா? தேனை சாப்பிட்டால் அவங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும், தோலுல பூசிக்கொண்டால் தோல் ஜொலிக்கும்" சொன்னது தேனு.

பட்டாம்பூச்சி சொன்னது "அமுதே தேனே தேனேன்னு என்ன சும்மாவா பாட்டு பாடுறாங்க".

"தேனை சேகரிக்க தேனீ வளர்ப் பவர்கள் தேன் கூட்டை கொண்டுபோய் புகை எல்லாம் அடிச்சு தேனீக்களை மயக்க வைத்து தேனை எல்லாம் சுரண்டி வித்துடுறாங்க, மயங்கின சில தேனீக்கள் செத்தும் போகுது. ஏற்கனவே இயற்கை பேரழிவுகளால அழிஞ்சு போயிட்டு இருக்கோம் இதுல இப்படி பண்ணினா எப்படி. எங்க ராணி அதனால ரொம்ப கவலை படுறாங்க சொன்னது" தேனு.

"ஆமாம் உணவு சங்கிலிக்கு தேனீக்களும்பட்டாம்பூச்சிகளும்எவ்வளவு முக்கியமானது, என மனுஷங்களுக்கு



கதை மற்றும் ஓவியம்

**ஸ்ரீ. ஸ்ரேஷ்டா ஸ்ரீ**

வகுப்பு : 3ஆம் வகுப்பு வயது: 8
பள்ளி : கேந்திரிய வித்யாலயா
ஊர் : கோயம்புத்தூர்

புரியவே மாட்டேங்குது .இத பத்தி பேசி என்ன பிரயோஜனம் என்று சொன்னது மலர்.

அக்கா .

"இவங்க என்னென்னமோ பேசிக்கி றாங்க நம்மளுக்கு இந்த விஷயம் எல்லாம் தெரியவே தெரியாது; நம்மளால முடிஞ்ச உதவியை நாம் அவங்களுக்கு செய்யனும்" னு கண்ணன் சொன்னான்.



“சரி கண்ணா;;; வா போய் பேசலாம்னு, துர்கா, தேனு கிட்டயும் பட்டாம்பூச்சி கிட்டயும் பேச ஆரம்பிச்சா “வணக்கம் ! நான் தான் துர்கா, இவன் என் தம்பி கண்ணன். நீங்க பேசினது எல்லாம் நாங்கள் கேட்டோம். நாங்க உங்களுக்கு உதவி பண்ணலாம்னு இருக்கோம். நாங்க சொல்ற மாதிரி கேட்டா இப்ப நீங்க படுற கஷ்டங்களுக்கு ஒரு வழி கிடைக்கும்.”

“அமுதும் மகரந்தத்தையும் மலர் களிலிருந்து நீங்க சேகரிக்கும் போது அமுத மட்டும் நீங்க உங்க உணவா எடுத்துட்டு போங்க’’.

‘‘மகரந்தத்தை எடுத்து பரப்ப வேண்டாம் அப்பதான் புதுப்புது செடி களும் பழங்களும் வளராது. அதனால ஆராய்ச்சியாளர்கள் அதற்கான கார ணத்தை கண்டு பிடிப்பாங்க’’.

“நாங்களும் எங்களால முடிஞ்ச விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம். நீங்க உங்க ராணி மற்றும் எல்லா நண்பர் களுக்கும் சொல்லுங்க»’’ முயற்சி செய்கி றோம்னு பட்டாம்பூச்சியும் தேனீயும் சொன்னது.

துர்காவும் கண்ணனும் “‘அமுதே தேணேனு’ ஒரு யூடியூப் சேனல் ஆரம்பிச்சாங்க அதுல தேனீக்களும் பட்டாம்பூச்சிகளும் பல பூச்சிகளும் படும் கஷ்டங்களை பாடல்களாகவும் கதை களாகவும் போட்டாங்க அது மட்டுமில்லாமல் இந்த மகரந்தத்தை சேகரிக்கிறது பத்தியும் நிறைய விஷயங்கள் போட்டாங்க” .



புதுப்புது செடிகளும் மரங்களும் வர எண்ணிக்கை குறைந்தது. அதனால ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்து இந்த யூடியூப் சேனலை பார்த்துட்டு துர்காவையும் கண்ணனையும் பார்க்க வந்தாங்க.

“நீங்கதான் அமுதே தேணே சேனல் நடத்துறீங்களானு கேட்டு, யூடியூப் ல எப்படி இப்ப நடக்கிற விஷயங்களெல்லாம் முன்கூட்டியே தெரிஞ்ச மாதிரியே கதைகளாகவும் பாடல்களாகவும் போட்டு இருக்கீங்க, ரொம்ப ஆச்சரியமா இருக்கு ?’’ என்று ஆராய்ச்சியாளர்கள் கேட்டார்கள்.

“ஆமாம் சில நாட்களுக்கு முன்னாடி ஒரு தேனியும் பட்டாம்பூச்சியும் பேசறத கேட்டோம் . அவங்க படற கஷ்டங்களையும் கேட்டோம் ,அவங் களுக்கு உதவி செய்யதான் நாங்க மகரந்தத்தை பரப்ப வேண்டாம்னு சொல்லி செடிகளை வளர்க்க விடாமல் பண்ணினோம்.அப்பதான் நீங்க ஆராய்ச்சி செய்வீங்க “

“அவங்களை காப்பாற்றுவதற்கு ஏதாவது வழி செய்வீங்க அதனாலதான் இப்படி செஞ்சோம்’’னு துர்காவும் கண்ணனும் பதில் சொன்னாங்க.

ஆராய்ச்சியாளர்கள் சொன்னாங்க “சரி இனிமேல் தேனீக்கள் இல்லாத தேன் கூட்டில் இருந்து தான் தேன் எடுப்பாங்க அரசு நிச்சயமா ஆணையிட போறாங்க. சந்தோஷமா! இப்போ நீங்க எங்களுக்கு ஒரு உதவி செய்யணும் அந்த தேனி கிட்டயும் பட்டாம்பூச்சி கிட்டயும் மகரந்தத்தை பரப்ப வேண்டாம் சொன்னீங்க இல்லையா, அவங்ககிட்ட திரும்பி மகரந்தத்தை பரப்ப சொல்றீங்களா?”

“சரி நாங்க சொல்றோம், ரொம்ப நன்றி’’னு. துர்காவும் கண்ணனும் ரொம்ப சந்தோஷப் பட்டாங்க. வழக்கம்போல தேனீக்களும் பட்டாம்பூச்சிகளும் அவங்க வேலையை பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. ■



## தண்ணீர் துளிகள்

வானில் குளிர்ந்தத் தண்ணீர் துளிகள்
மேகங்களாய் மாறின
கூடிய கருமேகங்கள் ஒன்று சேர்ந்து
மழையைப் பொழிந்தன

மண்ணில் விழுந்த மழைத் துளிகள்
தெருவில் ஓடின
தெருவில் ஓடிய வாய்க்கால் எல்லாம்
ஆறுகளாய் இணைந்தன

வளைந்து நெளிந்து ஓடிய ஆறுகள்
கடலுடன் கலந்தன
பிறந்த இடத்தில் இணைந்த மகிழ்வில்
அலைகளாய் விளையாடின

பகல் வேளையில் கடலின் மேலே
சூரியன் வந்தது
சூரியனைப் பார்த்தத் தண்ணீர்
துளிகள்
நீராவியாக மாறின.

காற்றில் மெல்ல உயர்ந்த நீராவிகள்
வானத்தைத் தொட்டன
வானில் குளிர்ந்தத் தண்ணீர் துளிகள்
மேகங்களாய் மாறின

**அன்புச்செல்வி சுப்புராஜூ**



மின்னும் மின்மினி

மின்மினியே மின்மினியே
அழகான மின்மினியே
அருமையான மின்மினியே
வெளிச்சம் கொடுக்கும் மின்மினியே..

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
இரவில் உன்னை பார்த்தேனே
உந்தன் அழகை கண்டுநானும்
மிகவும் மகிழ்ச்சி கொண்டேனே..

சன்னல் வழியே எப்பொழுதும்
உன்னைக் கண்டு ரசிப்பேனே
உன்னுடைய வருகைக்காக
காத்து நானும் இருப்பேனே..

**சி. கவுதம் பாலாஜி,**
வயது : 8
மூன்றாம் வகுப்பு,
திருப்பூர்..





# தப்பு பண்ணிய மணல்கள்

ஒரு கடற்கரையில் நிறைய மணல் இருந்தது. அவங்கல்லாம் ஒரு நாள் பேசிக்கிட்டாங்க.

சின்னக் குழந்தைகள் எல்லாம் கோட்டை கட்டுகிறதால நமக்கு ரொம்ப வலிக்குது, அது மட்டும் இல்ல, இந்த கடல் அலை வேற வந்து நம்ம மேல வலிக்கிற மாதிரி விழுந்து நம்மை இழுத்துட்டு போயிடுது. இதுக்கு ஒரே வழி இந்த கடலில் சாக்கடையை கலக்க வச்சிட்டோம்னா குழந்தைகள் வந்து விளையாட மாட்டாங்க அப்படினு திட்டம் போட்டாங்க.

இதை கேட்ட கடல், நண்பர்களே! நீங்க பேசுவதை கேட்டேன். நான் சாக்கடையாக மாறினா உயிரினங்கள் எல்லாம் எப்படி வாழும். அதுமட்டும் இல்லாம நீயும் அழுக்காயிடுவன்னு சொல்லுச்சி.

அப்பதான் மணலும் தன் தப்பை உணர்த்துச்சி, அவங்க திட்டத்தை கைவிட்டுடாங்க.

மு..க.ஏஞ்சல்



1.
காற்று வீசும் கடற்கரை
பவுர்ணமி நிலவு
குட்டி நண்டுகள்
பிடித்து விளையாடினேன்

2.
தொட்டி மீன்களைகாட்டி
சமைத்த மீன்களை
குழந்தைக்கு
ஊட்டிவிடும் தாய்

3.
கண்ணெதிரே
கதை பேசிய அப்பா
அலைபேசியில்
காணொளியாக

4.
தாவி ஓடும்
குரங்குகள்
குதூகலத்துடன்
குழந்தைகள்

5.
மகாராஜாவாய் அப்பா
மகாராணியாய் அம்மா
இளவரசிகளாய் நாங்கள்
அன்பான குடும்பம்

**தா.உ.பூர்வி**
ஐந்தாம் வகுப்பு
பூம்புகார்
மயிலாடுதுறை மாவட்டம்





1.
காற்று வீசும் கடற்கரை
ஓசோன் காற்றை சுவாசிப்போம்
உடற்பயிற்சி செய்தால்
நோயின்றி வாழலாம்

2.
காற்று வீசும் கடற்கரையில்
கால் நனைப்போம்
கிளிஞ்சல்கள் சேகரித்து
மகிழ்வுடன் திரும்புவோம்

3.
காற்று வீசும் கடற்கரை
புகைப்படம் எடுத்தோம்
புகைப்படம் எடுத்து
சமூக ஊடகங்களில் பதிவேற்றம்

4.
புத்தகப்பையை
தூக்க முடியாமல்
தூக்கி சுமக்கிறோம்
படிப்பறிவை பெற்றிட

5.
முகக்கவசங்களால்
முகங்களை மறைக்கிறோம்
பாதுகாப்பாய் இருக்கிறோம்
என்ற நம்பிக்கையில்

**தா.உ.ஜான்வீ**
எட்டாம் வகுப்பு
பூம்புகார்
மயிலாடுதுறை மாவட்டம்

# பேனா



பேனா...எண்ணங்களை எழுத வைக்கும் திறவுகோல்
கரங்களுக்கு கண்ணியமளிக்கும் பேனா
பேனா..நீ எண்ணங்களை அழகாக்குகிறாய்
பேனா.. உன்னுடைய அடி- சாதனைகளின் படி
பேனாவின் முனை-சாதனை கணை
மைத்துளி-சாதனை வானத்தின் மழைத்துளி
திறனை வெளிக்காட்ட உதவும் உயிரில்லா உத்தமன்
மூளையிலிருந்து வரப்படும் சொற்களை சீர்ப்படுத்தி
சொற்களுக்கு பெருமை சேர்க்கும் பேனா

# காகம்



கரைந்து அழைக்கும் காகம்
அதன் உழைப்பான புத்தகத்தின் அற்புத பாகம்
இதன் பகிர்ந்து கொள்ளும்
குணத்தின் மீது நமக்கு மோகம்
பேதம் பாரா காகம்
ஒரேயொரு குரலை கொடுத்தது காகம்
அதன் உறவுகள் வந்தது வேகம்
இதுதான் காக்கைக்கான பலம்

காகம் காகம்
கரைந்து அழைக்கும் காகம்



**ம.குசன்**
நான்காம் வகுப்பு
சென்னை



வெளிநாட்டிற்கு சென்றேன்
எனப் பெருமை படாதே !
தமிழ்நாட்டில் பிறந்தேன்
எனப் பெருமை படு!

தேன் போல்
இனிக்கும் தமிழ்
அந்த நறுந்தேன்
இவ்வுலகத்திற்கு மேல்!

*உணவே மருந்தாம்
அஞ்சறைப் பெட்டி
ஆரோக்கியம் காக்கும்
மாண்புடை பெட்டி!

*வானத்திற்கு வனப்பு
பறக்கும் பறவைகள்
வனத்திற்கு வனப்பு
நிறைய மரங்கள்!

**பி. பர்வதவர்மன்**
ஓசூர்





# கவிதை

இதில் நடனமாடும் கவிஞனின் வார்த்தைகள்
உலகத்தைச் சுற்றிக்காட்டுவான் ஒரு கவிதையில்
அடுத்து படிக்கலாமா? என்ற
சிந்தனையை தூண்டும் கவிதை
முத்தமிழை முத்தமிடுவதற்கான உதடாக கவிதை
எனது முதல் கவிதையே – “கவிதை”
முதலும் நீ... முடிவும் நீ...

# பெண்

பெண்கள் -ஆண்களின் கண்கள்
நாட்டின் தூண்கள்
இவர்கள் இல்லையென்றால் நாம் வெறும் தூள்கள்
நமக்காக மறைப்பார்கள் ஆயிரம் கவலைகள்
அன்னையின் முத்தங்கள்-கொடுக்கும்
எனக்கு கோடி நம்பிக்கைகள்
என்னுடைய அழுகைகள்-
அதை பார்த்தவுடன் அன்னைக்கு இல்லை சிரிப்புகள்

**ம.லவன்**

நான்காம் வகுப்பு
சென்னை

# இடம்பெயர்ந்த இன்னல்

## - பெருமாள்குமரன்

நெருக்க கட்டுற மல்லிகை பூவுக்கு மவுசு கொஞ்சம் அதிகம்தான். அவைகள் மொட்டவிழ்ந்து மலர்கின்ற நேரம் கொஞ்சம் மவுசு குறைவுதான். அந்த மணப்பாறை பேருந்து நிலையத்தின் வெளியில் இருக்கும் பூக்கடையில் இருந்து மலர்ந்த தருவாயில் இருக்கும் மல்லிகைப்பூக்கள்பேருந்து நிலை யத்துக்குள் இருக்கும் அடைக்கம்மாள் சில்வர்த்தட்டுக்கு இடம் மாறும்.

இப்படி ஒவ்வொரு நாள் மாலை மாறும் பூக்களை மறுநாள் காலை வரை வைத்து விற்பனை செய்வதே அடைக்கம்மாளின் நிரந்தர வேலை.அந்த மல்லிகை பூக்கள் பேருந்து நிலையத் திற்குள் வரும்வரை மொலம் நூறுக்கும் அம்பதுக்கும் விற்பனையாகும்.பேருந்து நிலையத்திற்குள் வந்ததும் மொலம் முப்பதுக்கும் இருவதுக்கும் அடைக் கம்மாள் விற்பனை செய்வாள். அவள் குரலுக்கு, வேண்டாம் என்பவர்கள் கூட வேண்டும் என்று பெற்றுக் கொள்வார்கள்.

''கண்ணு பூ வாங்கிக்கே சாமி, அம்மா பூ வாங்கிக்கங்க அம்மா'' என்று கூறி கையில் அளக்கும் மொலம் கத்தரிக்கையில் கூடுதலாக விட்டு நறுக்கும் குணம்.

சரியாக சொல்லமுடியாவிட்டாலும் அடைக்கம்மாளின் வயது யெம்பது இருக்கும், என்பது எனது எண்ணம். கொடுமையிலும் கொடுமை முதுமையில் தனிமை என்ற வரிகளை உடைத்தெறிய வந்தவளாய். அடைக்கம்மாள் இருந்தாள்.

யாதும் உறவே என்பது அவளின் தாரக மந்திரம். அப்படி தான் அங்கு வரபோக இருக்கும் மனிதர்களிடம் பேசுவாள் பழகுவாள். இன்று நான் அடைக்கம் மாளின் மகனாகவோ, மருமகனாகவோ உறவானேன்.

“ஏம்மா நீங்க எந்த ஊரு?”

“ஏன் தம்பி இந்த ஊரு தான்”

இல்ல இந்த வயசுலயும் சின்னப் புள்ள மாதிரி ஓடி ஓடி யேவாரம் பாக்கிறீங்க. எல்லாருக்கிட்டயும் அன்ப பேசுறீங்க. அதான் எங்க இருந்து வாரீங்க எந்த ஊருனு தெரிஞ்சுக்கலாமுனு கேட்டேன்.

“அப்படியா!” என்று சொல்லி சிரித்த முகம். சற்றும் தாமதிக்காமல்

“என்னப்பா வயது ஆயிருச்சு. நா எப்பவும் சின்னப்புள்ளதான் மனசு அப்படி தான் சொல்லுதுனு” கோவப் பட்டாள்.

“சரி சரி கோவபடாதிங்க, இந்தாங்க மூனு மொலம் கொடுங்க. இலுப்பூர் பஸ் எப்ப வரும்?”

''இன்ன கொஞ்ச நேரத்துல

வந்துரும் தம்பி''. சொல்லிவிட்டு நகர்ந்து சென்றாள் அடைக்கம்மாள்.

பாக்கெட்டில் எடுத்த சிகரெட்டை பத்த வைத்தேன். முதல் புகை என் மூக்கில் முந்திக் கொண்டுவந்தது.இந்த அம்மாவை பற்றி வேறு யாரிடமாவது கேட்போம் என்று எண்ணியபோது

''முறுக்கு வேணுமா ணே முறுக்கு'' என்று என் முதுகுக்கு பின் இருந்து வந்த தம்பியிடம் விசாரிக்கத் தொடங்கினேன்.

''ஏந்தம்பி அந்த அம்மா இங்க எத்தன வருஷமா ஏவாரம்பாக்குறாங்க?''

''என்னாது வருஷமா? வருஷம்லாம் கிடையாது இப்பதான் ஆறெழு மாசமிருக்கும்.''

''ஓஓ! அதுக்கு முன்ன?''

''இங்க தான் பிச்சை எடுத்துக் கிருந்துச்சு''.

''என்ன தம்பி சொல்ற?''

''ஆமாணே பிச்சைதான் எடுத்துச்சு. ஒரு திருப்பு யாரோ ஒருத்தரு. அம்மா உங்கள பாக்க எங்க அம்மா மாதிரி இருக்கிங்க இனிமே பிச்சை எடுக்காதிங்க இந்தாங்க இதுல ஐநூறு ரூபா இருக்கு. அவங்கள மாதிரி வெள்ளரி பலம் கொய்ய பலம் இல்லைனா வேர்கடலைனு எதை யாவது வாங்கி ஏவாரம் பாருங்க என்று சொல்லிட்டு போனாரு! அதுல இருந்து தான் அந்தம்மா பூ விக்கிது''.

கம்பத்துக்கு போர பஸ் கன்னு முன்னு தெரியாம நிலையத்திற்குள் வருகிறது. ஒட்டுமொத்த முறுக்கு வியாபாரி களும் மற்ற வியாபாரிகளும் தேனீக்கள் போல மொய்த்துவிடுகிறார்கள். பஸ்சுக்கு வெளியவோ உள்ளவோ அடைக்கம் மாளும் அந்த தேனீக்கூட்டத்தில் இருக்கலாம். ■



# மனிதமே நீ மறவாதே!

பசித்த வயிற்றில் உதைக்க வேண்டாம்
உதவிக்கரத்தில் உதாசீனம் வேண்டாம்
ஏழை உயிரில் ஏளனம் வேண்டாம்
மகிமை காக்கும் மனிதமே

மனம் சாகும் நிந்தனை வேண்டாம்
பட்டம் பதவி பாகுபாடு வேண்டாம்
ஏற்றத்தாழ்வை பகிர்ந்திட வேண்டாம்
உத்தமம் காக்கும் மனிதமே

கற்பை காவும் கயவர் வேண்டாம்
மமதை தீண்டும் போதை வேண்டாம்
புரிந்துணர்வின்றிய பிரிவும் வேண்டாம்
மானம் காக்கும் மனிதமே

அதிகார மோகம் வேண்டாம்
செயலில் சட்டம் மீற வேண்டாம்
குருதி குதித்தோட யுத்தம் வேண்டாம்
கடமை காக்கும் மனிதமே

பணப்பித்து வாழ்வில் வேண்டாம்
போதம் மறந்த ஆணவம் வேண்டாம்
மனதை கொள்ளும் தீமை வேண்டாம்
அன்பு காக்கும் மனிதமே

மனிதமே நீ அறிய வேண்டும்
நெஞ்சை நிமிர்த்தி மார்பு தட்டிய விரலும்
மண்ணுக்குள் ஓர்நாள் மடியும்
மண்ணுக்குள் நீ மறைய முன்
மனிதம் காத்து வாழவேண்டும்

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம்
இலங்கை.

# அச்சம் தவிர்

எட்டுத்திக்கும் எள்ளளவு இல்லை
எல்லைகளே
எந்தாய்மொழியாகும்...

கற்றுக்கொடுத்தவள்
கடமையாற்றும் மட்டுமில்லை..
துளியளவும் அதிலிருந்து
அப்பால் விலகுதல் ஆகாது
என்பதனையும்.

எடுத்துரைத்தாள்
ஏட்டுக் கல்வியுடன் .
எதையும் ஏந்திவிடுதலாகாது
எவரிடமும் என்றே..

வறட்டியில்லை உண்பது..
முப்போகம் விளைந்த
முத்துச்சம்பா நெல்லரிசி...
தோண்டி தூர எறிதலாகும்..
ஊடுபயிர் பார்த்தீனிய
குறுஞ்செடியை..

நெய்த நூலில்லை
அம்மை அணிந்திருப்பது ..
ஆணிகொண்டு எழுதிய
அற்புத நூலல்லவா
பெற்றவளின் புடவையே..

தொட்டுப்பார்த்தால்
தாலாட்டும் எம்தமிழன்னை
சீண்டிப்பார்த்தால்
சம்ஹாரம் செய்திடுவாள்..

**- விஜிகல்யாணி**

# வீரமே... நீ... உடைவதா...

வீரமே நீ உடைவதா.. துயர் தொடர்வதா...
நதி தீரமாய் நீ நீண்டிடு... அலை தாங்கிடு..
மேதினி இனி வியந்திடும்.. உனைப் புகழ்ந்திடும்...
ஏதினி ஒரு எல்லையே என நீ கூவிடு....

பெண்மணி நீ தினமுமே பூத்திடும் பூக்காடு..
கண்ணியம் அதைப் பேணிட
தேவைதான் ஒரு முக்காடு...
கண்களால் உனைப் பருகிட நீயில்லை
ஒரு பலியாடு...
மண்ணகம் இனி விழித்திட நீ போராடு...

மாதிவள் மனம் மென்மைதான்..
பால் வெண்மைதான்...
சூதுகள் நடந்திடப் பெறும் வன்மைதான்...
இது உண்மைதான்...
தீதுகள் பொறுத்திடாப் பெண்மைதான் ...
என்றும் மேன்மைதான்...
சோதியாய் ஒளிர் தன்மைதான்.....
தரும் நன்மைதான்...

பலகாலமாய்ப் புரையோடியப் பல
மடமைகள் ஒழிய வேண்டும்...
நிலாக்காலமாய்ப் புதுமைப் பெண்ணவள்
இங்கு பிறக்க வேண்டும்...
உலகமேடையில் பெண் பாத்திரம்
பெயர் நிலைக்க வேண்டும்...
விழாக்கோலமே மனம் மகிழ்ந்திட
தினம் நிகழ வேண்டும்...

உனைத் தடுப்பதால் தினம்
வதைப்பதால் நீ ஓயாதே...
வினை விதைப்பதால் சிலர்
குரைப்பதால் நீ தயங்காதே...
மனை ஆள்பவள்
புகழோங்கிடும் நீ கலங்காதே....
கணையாழியும் இனி கலங்கரை
விளக்காகிடும் மறவாதே.....

**- மக்கொனையூராள்**

# அவளைக் கொஞ்சம் உறங்க விடுங்கள்!

சிவகாமசுந்தரி நாகமணி

வீடு,வேலை என இரட்டைச்சவாரி செய்யும்
அவள் போன்ற பெண்களுக்கு
பகலுறக்கம் என்பது குதிரைக் கொம்பு!
அவளுறக்கம்
எப்போது வேண்டுமானாலும் கலையலாம்!
அவளைக் கடன்காரியாகவே
ஆக்குவேன் என்று கங்கணம்
கட்டிக்கொண்டுள்ள
ஏதோ ஒரு தனியார் வங்கி,
பல இலட்சம்
கடன் தருவதாக ஆசை காட்ட
அவளை அலைபேசியில் அழைக்கலாம்.
அவளைக் கொஞ்சம் உறங்க விடுங்கள்!

அவளை முழுவதும் மறந்து விட்ட
உறவுகள் திடீரென்று
அவள்மேல் பாசமுற்று
அலைபேசியில் அழைத்து
நலம் விசாரிக்கலாம்!
அவளைக் கொஞ்சம் உறங்கவிடுங்கள்!

பணியிடத் தலைமையோ,
உடன் பணிபுரிவோரோ
அவளை அழைக்கலாம்!
அவளைக் கொஞ்சம் உறங்கவிடுங்கள்!
இன்று விடுப்பிலிருக்கும் கணவர்
குழந்தைகள் பயிற்சி வகுப்புக்குச்
சென்றுள்ளதால் கிடைத்த தனிமையில்
தன் தேவையை நிறைவேற்ற
அவளை எழுப்பலாம்!
அவளைக் கொஞ்சம் உறங்க விடுங்கள்!
இந்தக் குறுகிய உறக்கம் முடிந்ததும்
அவளை வரவேற்கக் காத்திருக்கின்றன
குளியலறையில் அழுக்குத் துணிகளும்
சமையலறையில்
துலக்கப்படாத பாத்திரங்களும்!
அவளைக் கொஞ்சம் உறங்க விடுங்கள்!

"உனக்கு அழகுக் கண்ணுடி"
என்று அவளது இறந்து போன
அம்மாவாலும் பிறராலும்
புகழப்பட்ட விழிகள்
இன்று மன அழுத்தத்தாலும்
உறக்கமின்மையாலும்
கருவளையம் சூழ்ந்து
காட்சியளிக்கின்றன!
கோடையில் கிடைக்கும்
இந்த 25 நாட்கள் மட்டுமே
அவளுக்கு ஓய்வு

பிறகு....
பாடக்குறிப்பு எழுதியும்,
விடைத்தாள்கள் திருத்தியும்
சோர்ந்து  போன விரல்கள்
அலைபேசி தொடுதிரையைக் கூட
அலுப்போடுதான் தொடும்!
இன்று
சின்னக்குயில் சித்ரா பாடும் பாட்டை
விடுமுறையில்
உற்சாகமாகப் பாடும் தொண்டை
பள்ளி திறந்ததும்
தொடர் வகுப்பெடுத்து நீரிழக்கும்!
தொடர்ந்து நின்று வகுப்பெடுப்பதால்
கால்கள் துவண்டு அமரும்படி கெஞ்சும்!
அதனால்தான்....
அவளைக் கொஞ்சம் உறங்கவிடுங்கள்!



# பெரியார் தனது வளர்ப்பு மகளை ஏன் மணந்தார்?

ராஜமருதவேல் கொடிக்கமுண்டார்
quora

ஈ.வே.ராமசாமி ஒரு அறக் கட்டளை வைத்திருந்தார். அதன் மூலம் ஏராளமான சொத்துக்கள் சேர்ந்து இருந்தது. தன்னுடன் இருந்த எவரையும் நம்பாமல் அந்த சொத்துக்கள் அவர்களுக்கு செல்வது விரும்பாமல் , தனக்கு ஒருவரை சொந்தமாக்கி அவருக்கு அந்த அறக்கட்டளையை தர நினைத்தார். அன்று ஈவேராவின் உடன் இருந்தவர்கள் அண்ணாதுரை, சம்பத், அன்பழகன், கருணநிதி தான். ஈவேராவிற்கு பின் அந்த பொறுப்பு அண்ணாவிற்கு தான் சென்றிருக்க வேண்டும் . அதை ஈவேரா விரும்பவில்லை.

### ஈவேரா மணியம்மையை திருமணம்



பெரியார் திரைப்படத்தில் நடிகர் சத்யராஜ் நடிகை குஷ்பு பெரியார் மற்றும் மணியம்மையாக.

செய்ய விரும்பியதை பலரும் எதிர்த்தனர். ஆயினும்அவர்முடிவில்பின்வாங்கவில்லை . 72 வயதில் இரண்டாவது திருமணத்தை செய்தார். அது அவரது விருப்பம். அவர் இந்தியாவின் எந்த கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் விரும்பவில்லை .

ஈவேராவின் திருமணத்தால் பிறந்தது தான் திமுக. அண்ணா, அன்பழகன், கருணாநிதி எல்லாம் ஈவேராவின் மீது கோவப்பட்டு திகவிலிருந்து வெளியேறி திமுகவை தொடங்கினார்கள். தொடங்கியது மட்டுமின்றி தினசரி ஈவேராவை விமர்சித்து எழுதினர். தொடர்ச்சியாக ஈவேராவை எதிர்த்ததால் திமுக அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டே இருந்தது. ஈவேரா அண்ணாவை குள்ள உருவம் என்று உருவக்கேலி செய்தி எழுதினார். திமுகவினரோ சரி வேண்டாம் விடுங்கள் . ஈவேராவை எதிர்த்து கட்சி ஆரம்பித்துவிட்டுஇன்றுஈவேராவைவைத்து தமிழ் வரலாற்றை மறைத்து திராவிடர்களை ஆட்சி செய்ய வைக்கின்றனர்.

இது தான் தாத்தா காலத்து திமுக . இப்படி தான் அக்காலத்தில் இருந்தார்கள். இன்று திராவிட இனப்பாசத்தில் இணைந்து கொண்டனர்.

ஆயினும் எனக்கு எழும் சில கேள்விகள்.

1. ஈவேரா முதிய வயதில் சொத்துக்களை காப்பாற்ற திருமணம் செய்ய அவசியமில்லை . தத்து எடுத்து கூட சொத்துக்களை வழங்கலாம். பிரிட்டிஷ் காலத்தில் கூட செட்டியார்கள் அவ்விதமே தத்து பிள்ளைக்கு சொத்தை கொடுத்தனர்.

2. இதில் ராஜாஜியிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்.பிராமணஎதிர்ப்பாளரே பிராமணரிடம் ஆலோசனை கேட்டு தான் முடிவு செய்துள்ளார்!. ஒரு வேளை பிரமாணரிடம் நல்ல நாள், நல்ல நேரம் கேட்டிருப்பாரோ? இந்த பகுத்தறிவு பகலவன். பிரசாந்த் கிஷோரின் முன்னோடி தான் ராஜாஜி.

3. பெண் விடுதலை பேசியவர் என்கிறார்களே! மறுமணத்தை ஆதரித்தவர் என்கிறார்களே! ஈவேரா முதிய வயதில் இருக்கும் போது மணியம்மையை மறுமணம் செய்து கொள்ள ஏன் வற்புறுத்தவில்லை? ஏன் அவரே அந்திமக்காலத்தில் மறுமணம் செய்து வைத்திருக்கலாமே? ஏன் செய்யவில்லை. எல்லாம் சீமானை போல் மேடைப் பேச்சு தான் போல.

4. மணியம்மையை ஏதேனும் கல்லூரியில் படிக்க வைத்திருக்கலாம், ஏனோ செய்யவில்லை. அவர் தான் பெண்களுக்கு கல்வியை கொடுத்தாராம்? மீதியுள்ள 27 மாநிலத்திலும் பெண் கல்வி அதிகமாக இருப்பதற்கு யார் காரணமோ?

தன் சொத்துக்கள் மீது இவ்வளவு பற்றுக்கள்ஒருமனிதருக்குதேவையில்லை. இன்று யாரோ வீரமணி பெரியார் டிரஸ்ட் சொத்துக்களை அனுபவிக்கிறார். கடல் போல் வீடு, சொகுசு கார்கள் வைத்துள்ளார்.

ஈவேராவை விட பெரும் சொத்துக்களைக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அனைத்து சொத்துக்களையும் ஏழை எளிய மக்களுக்கு பகிர்ந்து கொடுத்தார். முத்துராமலிங்க தேவரை விட பெரும் கோடீஸ்வரர்களான புதுக்கோட்டைஅரசர்மொத்தநாட்டையும், கருவூலத்தையும், டன் கணக்கில் நகைகளையும் அரசிற்கு அளித்துள்ளார். இவர்கள் மட்டுமல்ல தமிழகத்தின் ஏராளமான ஜமீந்தார்கள் , திருவனந்தபுரம் மன்னர், மைசூர் மஹாராஜா உள்ளிட்ட பெரும்பாலான்வர்கள் சொத்துக்களை தானம் அளித்தவர்கள் தான். அவர்களின் சொத்துக்களின் இன்றைய மதிப்பில் அதானி , எலான மாஸ்கை விட அதிகமாக இருக்கும் .

■

# என்தமிழ் என்னுயிர்



**கவிஞர் தியாரு**

அலைதவழும் நளினமதில்
அழகு தமிழைக் கண்டேனே!
புலர்கின்றப் புதுவானில்
பழகு தமிழைக் கண்டேனே!
சிலைகளிலும் கலைகளிலும்
சங்கத் தமிழைக் கண்டேனே!
இலைமூடும் கனிகளிலே
இளமைத் தமிழைக் கண்டேனே!

கொடிதழுவும் தென்றலிலே
காதல் தமிழைக் கண்டேனே!
கொடிமுல்லை வாசத்தில்
கன்னித் தமிழைக் கண்டேனே!
பிடித்திழுக்கும் விழிகளிலே
பருவத் தமிழைக் கண்டேனே!
படிக்கின்ற பூவாயில்
பிள்ளைத் தமிழைக் கண்டேனே!

கொடுக்கின்ற கைகளிலே
கருணைத் தமிழைக் கண்டேனே!
படுக்கின்ற பஞ்சணையில்
பாட்டுத் தமிழைக் கண்டேனே!
தொடுக்கின்ற கேள்விகளில்
ஞானத் தமிழைக் கண்டேனே!
நடுக்கமிலா நெஞ்சினிலே
நெல்லைத் தமிழைக் கண்டேனே!

அணைக்கின்ற நேசத்தில்
அன்னைத் தமிழைக் கண்டேனே!
இணைபிரியா பந்தத்தில்
இன்பத் தமிழைக் கண்டேனே!
துணைநிற்கும் கவிதைகளில்
தந்தைத் தமிழைக் கண்டேனே!
வனைந்தெடுத்த என்வாழ்வில்
உயிராய்த் தமிழைக் கண்டேனே!

# பெண்ணே சாதனை படைத்திடு



மண்ணும் பெண்ணும் குணத்தால் ஒன்று
தன்னை மதித்தால் பசுமையே என்று

விண்ணும் மண்ணும் சேர்ந்து நின்று
பெண்ணின் பெருமை சொல்லும் நன்று

பெண்ணுக்கு என்றும் பொறுமை கருப்பொருள்
அவளுக்கு அதுவே வெற்றியின் மறைபொருள்

மனதில் துணிவு பெண்ணுக்கு துணையே
வாழ்வில் பணிவு அவளுக்கு சிறப்பே

நாணம் பெண்ணுக்கு அழகிய மொழியே
மானம் அவளுக்கு உயிரின் வாழ்வே

பிறக்கும் போது அவள் பொக்கிசமே
அவள் வளரும் பருவம் பொற்காலமே

பெண்ணே கவலைகள் கண்டு கலங்காதே
கவலையை செயலால் உடைக்க மறவாதே

சாதனைப் பெண்கள் உலகினில் ஆயிரம்
தடைகளை உடைத்திடு உன்னால் முடிந்திடும்

பெண்ணே நீயே சாதனை படைத்திட
வாழ்கையில் நீயே சிகரம் தொட்டிட

அணையாத நெருப்பை மனதினில் ஏற்றிடு
அழகான செயலால் உலகை மாற்றிடு

**சா.நாகூர் பிச்சை**
(வாழ்வியல் கவி)
திண்டுக்கல்



# வேதாளம் பதில்கள்

முகநூல் கவிஞர்களெலாம் கவிஞர்களே இல்லை என்று ஒரு முதுபெருங்கவிஞர் சொல்கிறாராமே! அப்படியா?

இளம்பரிதி, தஞ்சை

அவரும் முகநூலால்தான் பிரபலமானவ ராமே தெரியுமா?

■ ■ ■

கண்ணும் கண்ணும் சந்தித்தால் காதல் வருமா?

சந்திரா, சென்னிமலை

அப்படியானால் கண்மருத்துவர் நிலை என்னாவது ?

■ ■ ■

கும்பகோணம் பில்டர் காபி கோவில்பட்டி கடலைமிட்டாய் வேதாளத்திற்கு எது பிடிக்கும்?

பிலால், வடகரை

நிரவி புலாவ், திருவையாறு அசோகா அல்வா இவையும் பிடிக்கும்

■ ■ ■

முகநூல் குழும நிர்வாகிகளை அடிக்கடி மாற்றுவது ஏன்?

பிச்சமுத்து, இளையாளூர்

வசூலில் பங்கு கேட்காமல் இருக்கத்தான்!

■ ■ ■

எரிபொருள் விலை ஏகத்திற்கு அதிகமாகி விட்டதே!

கங்காதரன், சீர்காழி

அதனால் என்ன என்பதுபோல் பெட் ரோல் பங்குகளில் கூட்டம் குறைய வில்லை! இருந்தாலும் மீண்டும் மிதி வண்டிகள் ஊர்வலம் வர வாய்ப்புள்ளது

■ ■ ■

திடீரென தமிழ் உணர்வு அதிகமாகுகிறதே?

கவிவாணன், செர்ஜி

திடீரென இந்தியைத் திணிக்க எண்ணு கின்றனரே!

■ ■ ■

விலைவாசி கடுமையாக உயர்கிறதே?

கலையரசன், காரைக்குடி

எரிபொருள் விலை ரஷ்ய - உக்ரைன் போர் இவையே விலைவாசி உயர்வுக்குக் காரணம் .பாதிக்கப்படுவது என்னவோ அடித்தட்டு மக்களும் நடுத்தர வர்க்க முந்தான்.

■ ■ ■

பாரதி இப்போதிருந்தால் என்ன செய்வார்?

காஞ்சனா, சென்னை

முகநூல் குழுமம் ஒன்று தொடங்கி யிருப்பார்

■ ■ ■

ஒரு அமைப்பு கவிஞர்கள் பங்கேற்புக் கட்டணமே 1000 ரூபாய் என்கிறதே?

அருள்மொழி, கன்னியக்குமரி

போட்டியாளர்களைக் குறைக்க எண்ணி யிருக்கலாம்

■ ■ ■

கம்பனின் வரிகளில் தங்களைக் கவர்ந்தது எது?

கருணாகரன், மயிலாடுதுறை

கண்டேன் கற்பினுக்கணியை...

**வேதாளம் பதில்கள்**

**தொடரும்.**
**கேள்விகளை கேட்கலாம்.**

# நூல் மதிப்புரை

நானும் புத்தன் தான்
( ஹைக்கூ கவிதைத்தொகுப்பு )

நூலாசிரியர் :
கவிஞர் ராஜிலா ரிஜ்வான்

பக்கங்கள் : 33 + xxii
விலை : 280 இலங்கை
அவநி வெளியீடு

D.P.Parameswari
**து.பா.பரமேஸ்வரி**
சென்னை.




இலக்கியங்கள் பல தளங்களைக் கோர்த்து மாலையாகச் சூடியுள்ளன. அதில் அழகியலின் அணிகலனாக கவிதைக் கலனைப் போற்றலாம். குவிந்துக் கிடக்கும் சொற்களை ஒருசேர கோர்த்து நேர்த்தியாக வடிவமைக்கும் மாண்பு கவிதைக்குரியது. அதிலும் குறைவான சொற்களின் பயன்பாட்டில் ஆழமான கருத்துக்களை எளிமையான மொழி வடிவில் தீர்க்கமான சுண்டும் சிந்தனைக் கொண்டு வடிவமைக்கப்படும் கவிதை வடிவமே ஹைக்கூ வடிவம்.

ஹைகூ கவிதை வடிவம் ஜப்பானி லிருந்து ஆகப்பெரும் கவிஞர்களால் தமிழ் இலக்கியத்திற்குக் கொள்முதல் செய்யப்பட்டு வந்தாலும் அதன் எளிமை சொற்களின் பயன்பாடு குறுகிய வடிவம் என்பது நம் தமிழிலக்கியம் சங்ககாலம் தொட்டு தமக்குள் கொண்டுள்ளது. ஒன்றரை அடியில் உலகத்தின் மாண்பை ஒளித்து நின்ற உலகப்பொதுமறை போதாதா...

ஹைக்கூவின் வடிவமும் நம் தமிழிலக்கியத்திற்கு புதிதல்ல தமிழருக்கும் பெரிதல்ல.. பல்லாயிரம் கால சங்க இலக்கியத்தில் பல செய்யுட்களும் பாக்களும் இப்படியான குறைந்த அடிகள் கொண்ட செறிவு மிகுந்த கருத்துக்களையும் சிந்தனைகளையும் உள்ளொடுக்கி புனையப் பட்டுள்ளன என்பது அனைவரும் அறிந்ததே.

ஆதலால் ஹைக்கூ கவிதைகளின் வடிவமும் பண்பும் எளிமையாக நம் கவிதைப் படைப்பாளிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்றும் அழகியலாக அறிவியலாக கவிதையியலாக கருத்திய லாக சமூகவியலாக நெறியிய லாக நம் தமிழ்க்கவிஞர்களால் முறைப்படுத்தப் பட்டுள்ளது.

ஜப்பானைக் காட்டிலும் தமிழில் ஹைக்கூ கவிதை நடை கூடுதல் சிறப்பு. தமிழிலேயே அதிகப்படியான ஹைக்கூ கவிதைகளும் நம் தமிழ்கவி மக்களால் படைக்கப்பட்டுள்ளன. புத்துணர்ச்சியும் மறு மலர்ச்சியும், கூடுதல் வடிவாக மீட்டுரு வாக்கமும் ஆகச்சிறந்த நம் கவிஞர் களால் தமது படைப்புகளின் வழியே வழங்கப்படுகின்றன என்பதே மிகச் சிறப்பு.

ஓவியர் மற்றும் கவிஞர் அமுதபாரதி, கவிஞர் மு.முருகேஷ், கவிஞர் கம்பம் ரவி என ஹைக்கூ ராஜாங்கத்தின் வரிசையில் இன்று மற்றுமொரு இளவரசியாக கவிஞர் தோழர் ராஜிலா ரிஸ்வான் தமது அடர்த்தியான தடத்தைப் பதித்துள்ளார்.

“விரலிடுக்கில் வெளிச்சம்” ஹைக்கூ தொகுப்பைத் தொடர்ந்து ‘‘நானும் புத்தன்தான்” என்கிற இந்தத் தொகுப்பு மற்றுமொரு தன்னிகரில்லா படைப்பு.

ஒவ்வொரு ஹைக்கூவும் கவிஞரின் நுட்பப் பார்வையை வாழ்வியலோடு பிணைந்தப் பொருளைச் சுமந்து நிற்கிறது. தொகுப்பின் முழுமைக்கும் மனித வாழ் வின் அனைத்து உணர்வுகளையும் வரிவடிவமாகக் கடத்துகிறது. தம்மை பாதித்த, தான் கடந்து வந்த அனைத்து அசைவுகளையும் அன்றாடம் எதிர் கொள்ளும் ஒவ்வொரு பாதிப்புகளையும் கருவாக உள்வாங்கி உருவாக உருவம் ஏற்றப்பட்டுள்ளன கவிஞரால். அழகியல், சமூகவியல், பெண்ணியம், தாய்மை, உவகை, அரசியல், இயற்கை யியல், சாதியப் பாகுபாடு, சமகால சமூகப் பிரச்சனை, தாம்பத்தியம், உறவுகளின் உன்னதம் என கண்டவை கடந்தவை தொட்டவை என எது இல்லை தொகுப்பில்.

மனித மனத்தில் அடைந்துக் கிடக்கும் அனைத்து உணர்வுகளையும் மனித வாழ்வின் அனைத்துத் தளங்களை யும் ஹைக்கூக்களாக நம்மைப் பயணிக்க செய்துள்ளார் கவிஞர்.

மேற்கோளிட்டுக் காட்டி தொகுப்பைச் சிறப்பிக்க ஹைக்கூக்கள் ஏராளம் உள்ளன தொகுப்பு முழுவதிலும் . இருப்பினும் ஒரு பானை சோற்றுக்கு சில பருக்கைகள் பதம் பார்க்கலாம் போல.. ஒரு சில ஹைக்கூக்களை அடிக்கோடிட்டு சொன்னால் தொகுப்பின் முழு சாரமும் வாசகப் பரப்பில் விரிவடையும் என்பது என் ஆழ்ந்த நம்பிக்கை.

என்னை வெகுவாக ஈர்த்தவை என்றும் கூட சொல்லலாம். வியனுலகப் பயணத்தைத் தொட எத்தனித்தது வாசிப்பிற்கு பின்பான என் சிந்தனை.

குழந்தையின் குழந்தைமையின் சிறு அசைவும் அனுமானத்திற்கும்,நம் சேகரித்த அறிவிற்கும் அப்பாற்பட்டவை என்பதற்கான சான்றுகள்.

இடியின் சத்தம் கேட்டதும்
காதுகளை மூடுகிறாள்
பொம்மைக்கு மகள்.

பள்ளி நேரம்
துணையின்றித் தனிமையில்
மகளின் பொம்மை.

ஹைக்கூக்களுடன் தம்மைப் பிணைத்திருக்கும் கவிஞரின் தனிமை கூட ஹைக்கூ உடனான இனிமையே..

அறை முழுவதும் தனிமை
பேசிக் கொண்டிருக்கிறோம்
நானும் ஹைக்கூவும்.

பறை இசையும் பறைசாற்றும் பண்டைய நம் தமிழரின் பண்பாட்டை..

குழலினிது யாழினிது
உற்றுக் கேள்
பறையும் இனிது.

குரு வணக்கம் போல கவிஞரின் ஹைக்கூ வணக்கங்கள் ஆஸ்தான கவிஞருக்கு..

சிதறும் ஒளிக்கதிர்
பனித்துளிக்குள்
தலைகீழாய் வானம்

தாய் மனம் எப்போதும் தவிக்கும் தம் பிள்ளையைத் தகப்பன் கூட கரம் ஓங்க உயர்த்தும் கணங்களில் .

அப்பாவின் கை
ஓங்கியதும் இறங்கி விடுகிறது
அம்மாவின் குரல்.

குழந்தைப் பேறு என்பது ஒவ்வொரு பெண்மையின் நிறைமை. அதில் ஏற்படும் தொய்வு ஒரு பெண்ணை எத்துணை கலங்கச் செய்யும் என்பதற்கு இந்த வரிகள் போதாதா உணர்த்த. நெகழ்ச்சியின் உச்சம்.

ஒவ்வொரு மாத விலக்கிலும்
கலங்கிப் போகிறாள்
குழந்தையில்லாதவள்.

நிலத்தின் கதறல் வரிகளில் ளிெப்படுகிறது..

மலட்டு நிலம்
வயிற்றுக்குள் புழுக்களாய்
நெகிழிக் கழிவுகள்.

எனக்கும் இந்த அனுபவம் உண்டு. பெரும்பாலான பிள்ளைகள் பள்ளிப்பருவத்தில் இந்த மறுத்தலைக் கடந்திராமல் இருந்திருக்க முடியாது. பள்ளிப்பருவ நினைவைத் தூண்டிய ஹைக்கூ.

அப்பா மறுக்க
அம்மாவிடம் எளிதில் கிடைத்தது
தர அட்டையில் கையொப்பம்.

பாட்டாளியின் குருதிநீர் வியர்வை யாய் பகலில்..இரவில் மது கோப்பையில் குளிரும் என்பதற்கு இந்த வரிகளே அப்பட்டமாக..

உழைத்த பணம்
வீடு வந்து சேர்கிறது
தள்ளாடியபடி.

விதைத்த வினை வீடு திரும்பும் என்பார்கள். இவனோ வினையே அறுக்கிறான். விளைவு... மரம் அழிக்கிறான் இறுதியில் மரம் அவனை ஆக்சிஜன் சிலிண்டரில் இணைக்கிறது. கொரோனா தொற்று உணர்த்திய பாடம்.

மரம் வெட்டிய காசு
வாங்கி வைக்கிறான்
ஆக்சிஜன் சிலிண்டர்.

என்னை பெரிதும் அசைத்த ஹைக்கூக்களை அடிக்கோலிட்டு குறிப்பிட்டு விட்டேன். இனி தொகுப்பை வாசிக்கும் வாசகர்களின் வாசிப்பின் கரங்களில் வழங்கி விட்டேன் எனது மிச்ச சொச்ச கருத்துக்களை.

தொகுப்பின் ஹைக்கூக்கள் அனைத்துமே கொட்டிக் கிடக்கும் இரத்தின பரல்களின் சேகரிப்பு. எது அழகு எது உசத்தி எது சிறப்பு என்றுச் சுட்டுவது மிகப்பெரிய பலப்பரீட்சை, சவாலும் கூட. அத்துணையும் கொள்ளை அழகு. எனக்கான புரிதலை மட்டுமே இங்கு முன் வைத்துள்ளேன். மீதத்தை வாசகரின் பன்முக புரிதலுக்கு விரலிடுக்கில் வெளிச்சமாக விட்டுவைக்க வேண்டும் அப்போதே தொகுப்பின் சிறப்பு ஒளிரும் மேன்மேலும் மிளிரும்
.

இலக்கியத்தைப் பொறுத்தவரையில் படைப்பாளிகளின் அங்கீகாரமும் சில வார்த்தைக் கருத்தியலும் என்பது அவனுக்கான மிகப்பெரிய உந்துதல். படைப்புகளின் நீட்சிக்கான தடம். ஆனால் இப்போதெல்லாம் படைப்பாளிகளை அங்கீகரிப்பதில் பெரும் இடை முறிவு ஏற்பட்டு தொய்வு ஏற்படுகிறது. வாசகனின்ஒவ்வொருகருத்தும்படைப்பிற்கான ஊட்டம் என்பதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு வாசகனும் நூலின் வாசிப்பிற்குப் பின்பான தமது பார்வையைப் பதிவிடுவது என்பது இலக்கியத்திற்கும் வாசிப்பிற்கும் வழங்கும் நேர்த்திக்கடன் என்று கூறுவதே சரி.

இது போன்ற படைப்புகள் பல படைத்து கவிஞர் ராஜிலா அவர்கள் கவியுலகை கோலோச்சம் செய்திட வேண்டும் என்கிற வாழ்த்துதலுடன் என் விமர்சனத்தை முடிக்கிறேன். ■

# மனிதம் போற்றுவோம்

## முனைவர் ப. கற்பகராமன் M.A.,M.A.,M.A.,M.Phil.,Ph.D.,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சேலம் - 636003

*"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அறிது*
*மானிடராய் பிறந்த காலையின்*
*கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறத்தல் அறிது*
*கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறந்த காலையின்*
*ஞானமும் கல்வியும் நயத்தலறிது*
*ஞானமும் கல்வியும் நயந்த காலையும்*
*தானமும் தவமும் தான் செய்தலரிது*
*தானமும் தவமும் தான் செய்தாயினும்*
*வானவர் நாடி வழி பிறந்திடுமே"* - *ஔவையார்*

*என்று ஔவையார் மனித பிறவியின் மகத்துவத்தினைக் குறிப்பிடுகின்றார். எந்தவொரு குறையுமின்றி இறைவனால் கிடைக்கப்பட்ட இந்த மனிதப் பிறவியை மீண்டும் இறைவனிடமே உள்ளபடி வழங்கவேண்டுமாயின் கற்க வேண்டிய கல்வியை முறையாகக் கற்று, தானமும் - தவமும் செய்தல் வேண்டும் என்கிறார்.*

*வடகடலில் சிறு துளையோடு ஒரு மூங்கில் மிதந்து வருகின்றது. அதைப்போலவே தென் கடலில் சிறு துளையோடு ஒரு மூங்கில் மிதந்து வருகிறது. இந்த இரண்டும் ஒன்றையொன்று சந்தித்துக் கொள்வது என்பது மிக மிக அரிது. அப்படியே சந்தித்துக் கொண்டாலும் அவ்விரண்டு துளைகளிலும் ஒரு கோல் நுழைவது மிக அரிது. இந்த இரண்டு மூங்கிலும் ஒன்றையொன்று சந்தித்து> அதன் துளைகளில் ஒரு கோலும் நுழைந்துவிட்டால் அது எவ்வளவு பெரிய அதிசயமோ அவ்வளவு பெரிய அதிசயம், நமக்கு மானுடப் பிறவி கிடைத்திருப்பது என்று நம்முடைய மனிதப் பிறவியின் சிறப்பினைச் சீவக சிந்தாமணி>*

*"பரவை வெண்திரை வடகடல் படுநுகத் துளையில்*
*திரை செய் தென் கடல் இட்டதோர் நோன் கழி சிவணி*
*அரச அத்துளை அகவயிற் செறிந்தென அரிதால்*
*பெரிய மோனிகள் பிழைத்து இவண் மானிடம் பெறலே* *சீவகசிந்தாமணி* – 2749

*என்ற வரிகளில் படம்பிடித்துக் காட்டுகின்றது.*

*உலகில் உயிர் வாழும் உயிரினங்களை அதனுடைய பிறப்பின் அடிப்படையில் நான்கு வகையாகப் பிரித்துள்ளனர். அவையாவன>*

1. *அண்டஜம்* - *முட்டையிலிருந்துப் பிறப்பவை*
2. *ஜராயுதம்* - *கருப்பையிலிருந்துப் பிறப்பவை*
3. *உத்பிஜம்* - *வித்து> வேர்> கிழங்கு மூலம் பிறப்பவை*
4. *சுவேதஜம்* - *வேர்வையிலிருந்துப் பிறப்பவை.*

*பிறப்பின் அடிப்படையில் பகுக்கப்பட்ட இந்த நான்கு வகையான உயிரினங்களும், மனிதர் - தேவர் - விலங்கு - பறவை - ஊர்வன - நீர்வாழ்வன - தாவரம் என்ற ஏழு*

பிறவிகளாகப் பிறக்கப்படுகின்றன. இவற்றை மொத்தமாக 84 லட்சம் வகைகள் என்பர்.

மேலே குறிப்பிட்ட இந்த 84 லட்சம் வகையான உயிரினங்களில் மானுடப் பிறவி கிடைப்பது என்பது மிக மிக அரிது என்று சிவஞான சித்தியாரும் குறிப்பிடுகின்றது. அதாவது> கடலைக் கையால் நீந்திக் கடப்பது என்பது எவ்வளவு அபூர்வமோ அவ்வளவு அபூர்வமானது மானுடப் பிறவி எடுப்பது என்பதனை>

*"அண்டசஞ் சுவேதசங்கள் உற்பிச்சம் சராயுசத்தோ*
*டென்தரு லெண்பத்து நான்கு நூறாயிரந்தான்*
*உண்டுபல் யோனியெல்லாம் ஒழித்து மாநுடத்துதித்தல்*
*கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண்" - சிவஞான சித்தியார்*

என்ற வரிகளில் சுட்டுகின்றது.

84 லட்சம் உயிரினங்களுள் நம்முடை பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப எந்தப் பிறவியை வேண்டுமானாலும் இறைவன் நமக்கு வழங்குவார். நாம் செய்கின்ற வினைப்பயனுக்கு ஏற்ப பல்வேறு பிறவிகள் கிடைக்கின்றன. இவ்வாறு கிடைக்கின்ற பல்வேறு பிறவிகளை மாணிக்கவாசகர்>

*"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்*
*வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்*
*செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்*
*எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" - சிவபுராணம்*

*என்று அட்டவணையிடுகின்றார்.*

எனவே, மனிதப் பிறவி என்பது எளிதில் கிடைக்கவில்லை. பல்வேறு வினைப்பயன்களுக்கு ஏற்ப பல்வேறு பிறவிகளை எடுத்து, அதன் தொடர்ச்சியாக இப்பிறவி கிடைத்துள்ளது. இத்தகைய மனிதப் பிறவியைப் போற்ற கற்றுக்கொள்ள வேண்டும். மனிதப் பிறவியைப் போற்றுதல் என்பது, அப்பிறவியைக்கொண்டு செய்யத் தகுந்தனவற்றைச் செவ்வனே செய்வதையே குறிக்கும்.

நாள்தோறும் நம்மோடு பயணிக்கும் சக உயிரினங்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து, அவற்றின் துன்பத்தைத் துடைத்து நம்மால் இயன்றவரை அவற்றிற்கு இன்பத்தினை வழங்க முயற்சிப்பது மனிதம் போற்றும் மகத்தான செயலாகும்.

குழந்தைகள், வயதானோர், நோய்வாய்ப்பட்டோர், ஆதரவற்றோர் ஆகியோர் எதிரி நிலையில் இருப்பினும் அவர்களிடம் நம்முடைய வீரத்தினைக் காட்டுவதற்குப் பதில் அன்பால் அவர்களை ஆளும் கலையைக் கற்றுக்கொள்வோம்.

பெண்களை அன்னையாக, தங்கையாக, மகளாக, அம்பாளாக வணங்கும் வாழ்வியலை வகுத்துக்கொள்வோம். கட்டிய மனைவிக்குக் காலம் முழுக்க பாதியைக் கொடுத்து கூடவே வைத்துக் கொள்வோம்.

நம்மோடு பயணிக்கும் அனைத்தும் நமக்கானவை என்ற உண்மையை உணர்ந்து, ஓரறிவு முதல் ஐந்தறிவு வரையிலுள்ள அனைத்தின் அறிவையும் மீண்டும் நினைவு கூர்ந்து, அவற்றோடு ஆனந்தமாய்க் கூத்தாடுவோம்.

கட்டாயத்தின் அடிப்படையில் மீண்டும் கூறுகிறேன். 84 லட்சம் உயிரினங்களில், மனிதப் பிறவி என்பது எளிதில் கிடைப்பதல்ல. கிடைத்ததைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் தெய்வமாவோம்.

# பண்புடைமை

1. நற்பண்பென அறிவது யாதெனின் அறம்வழுவா;
   நெறியுடை மாண்பமை செயலாம்.

2. பண்பாளும் மனிதர்க்குவாய்ப்பதாம் செல்வம் என்றும்;
   உள்ளார்ந்த சிறப்பமை குணமாய்.

3. வான்தரித்த விண்மீன்திரளினிலே மிகுந்தே மின்னுவதாம்;
   தான்தரித்த பேராயுதமாய் பண்பு.

4. பண்பெனும் திண்மை உண்டாயின் பார்க்கடல்;
   அமிழ்தம் கொணர்வதாய் சிறப்புறும்.

5. அடித்தளம் நற்பண்புகளால் அமைந்திடின் வாழ்க்கை;
   படித்தளம் கொண்டே எழும்.

6. பண்பால் விளைவதுயாவும் காலத்தால் பிறர்;
   சான்றாய் பற்றி படர்வதறிவு.

7. பண்புடை தூரிகை வரைந்திட மாண்பாய்
   தரிப்பதாம் வாழ்வெனும் சித்திரம்.

8. அடாதுசெய்திடும் யாவரும் பெரிதுவக்க என்றும்;
   விடாதுசெய்திடும் இயல்பே நற்பண்பு.

9. மலைப்பதாம் இறுகிய மனம்தனை ஆட்கொண்டே;
   துளைப்பதாம் துணையென பண்பு.

10. பண்புகள் நீதிநெறியற்று தீங்காயமைய உடல்;
    என்புகள் இன்றி விழும்.

**ஆ பிரிதிவி**
புதுச்சேரி

குறளாசிரியர் ஆ. பிரிதிவி புதுச்சேரியைச் சேர்ந்தவர். தற்போது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த காரைக்கால் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறார். இவர் தமிழ்மொழியின் மீது தீராத பற்றுதல் கொண்டவர். தமிழில் மரபுக்கவிதைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டவர். அவ்வகையில் வெவ்வேறு அதிகாரங்களில் சமூக அக்கறையுடன் எழுதி வருகிறார். தாய்த்தமிழ்

# வாக்குடைமை

1. முடிகொண்டோர் கோதிறன் வாளது கூர்மை;
குடிகொண்டோர் வாக்கமையும் அரசு.

2. சொத்துடைமனிதர் இயம்புவதே சட்டமெனும் நிலைத்திரிந்து;
வாக்குடைமனிதரின் சொத்தாம் வாக்கு.

3. அரசியல்சாசன வெகுமதியாம் வாக்குரிமை பேணுதல்;
என்றும் வாக்குடைமனிதரின் கடமையே.

4. பதினெட்டில் கடுக்காயெனினும் மிடுக்காய் மிளிர்வாய்;
நற்பொருட்டாய் உயர்த்திடும் வாக்கு.

5. விரல்மையிட்டு வாக்குதனை செலுத்திடவே உரிமை;
குரலோங்கி ஒலித்திடுமாம் பேரவைதனிலே.

6. குடிநலன்காத்து சட்டதிட்டமியற்றா ஆட்சிதனை களைய;
மௌனப்புரட்சிதனை வித்திடும் வாக்கு.

7. ஆடிக்காற்றுக்கும் அசைந்திடாமல் தீங்கிழைக்கும் ஆட்சிதனை;
ஊதிபுரட்டிடும் மந்திரமாம் வாக்கு.

8. சாதிமத இனமொழி பேதமுரைக்காமல் செலுத்திட;
சிறப்பதுவே வாக்கின் மேன்மை.

9. முறம்கொண்டு புடைத்திடவே கல்குருணைஉமி நீக்கிவாக்கிட;
உரம்கொண்டு அமையுமாம் நல்லாட்சி.

10. விலைகொண்டு வீழ்த்திடவே அணியணியாய் வந்திடினும்;
பிடிகொடா திறம்புவதாம் நல்வாக்கு.

**ஆ பிரிதிவி**
புதுச்சேரி

மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு தான் ஏதாகினும் செய்திட வேண்டும் என்கிற உந்துதல் தன்னகத்தே கொண்டு பாக்கள் எழுதி வருகிறார். இவரால் இயற்றப்பட்ட பாக்கள் கருத்துச் செறிவுடன் செம்மையாக அமைந்துள்ளதுடன்., இவரது தமிழ் மொழி ஆளுமையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# உறவுடைமை

1. காக்கை கரைந்தே அழைத்திடுமாம் தம்முறவை;
   பகிர்ந்தே கூடிவாழ்வதாம் வாழ்கை.

2. பணம்கொண்டு ஈர்ப்பதால் புடைசூழ அமைவதினும்;
   குணம்கொண்டு சிறப்பதாம் நல்லுறவு.

3. கரியநிறம் தரித்ததாயினும் குயில்தம் ஓசைக்கிணங்க;
   உரியநிறமாய் இனிதுவக்குமாம் உறவு.

4. சுற்றம் தம்முறவென இடுக்கண்களையும்கால் பற்றிட;
   ஏற்றம் காண்பது அறிவு.

5. உறவுகள் சண்டையிட்டு தம்முள்மாய்ந்திட நற்பல;
   வரவுகளின்றி கேடாய் அமையும்.

6. காலத்தால் உறவுதம் வழிநோக்கி பிரிவதாயினும்;
   பாலத்தால் இணைப்பதாம் நிகழ்வு.

7. தீங்கிடுமென தன்னைத்தான் தொலைதூரம் விலக்கிடின்;
   நீங்கிடும்நல் உறவுடை அரண்.

8. வாழையென வழித்தோன்றி வாழ்வாங்கு வாழ்ந்திடுமுறவுதனை;
   கோழையென கொள்வோர் அறிவிலார்.

9. ஊக்கமாய் உறுதுணையாய் தழைத்தோங்கிய உறவென்பது;
   ஆக்கமாய் அமைந்திடும் உயிர்க்கு.

10. நஞ்சுகொண்டு உறவுதோலிட்டு வலைவிரித்திடும் வஞ்சகத்தீ;
    மஞ்சுகொண்டு விரட்டுவதால் அணையும்.

ஆ பிரிதிவி
புதுச்சேரி





# கவிப்புயல்
# பாத்திமா ஸஹீரா நிஸ்ஃபர்

## அறிமுகம்

இலங்கை மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மாத்தளை மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட நிஸ்ப(f)ர் - ரபீகா தம்பதியினருக்குப் பிறந்த கடைசி புதல்வி ஸஹ்ரா ஆவார். சிறு வயதில் தந்தையை இழந்த இவர், தாயின் பாதுகாப்பு மற்றும் குடும்ப பராமரிப்பிலும் வளர்ந்து வந்தார். இவர் தற்போது மாத்தளை ஆமினா பாடசாலையில் உயர்தரக் கல்வியினை கலைத்துறையில் கற்று வருகிறார். க.பொ.த சாதாரண தரம் வரையில் ஆங்கில மொழியிலே பாடசாலையில் கற்றுள்ளார். ESOFT மெட்ரோ பல்கலைக்கழகத்தில் ஆங்கில பாடநெறிக்கான டிப்ளோமா கல்வியையும் தொழில் நுட்ப ஊடக கற்கை நெறியினையும் பூர்த்தி செய்துள்ளார்.

ஸஹ்ரா அவர்களுக்கு கற்றலில் ஈடுபாடு இருந்தாலும் கவிதைகள் எழுத வேண்டும் என்ற ஆசையுணர்வு உயர்வாகவே காணப்பட்டது. ஆனால் ஏற்றத்தாழ்வில் சிக்கி நிராகரிக்கப்பட்டார். அவ்வலிகள் மனதில் வைராக்கியமாக மாற தானும் சாதிக்க வேண்டும், தனக்கான வாய்ப்பைத் தானே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் 2019 இல் ஊடகத்துறையில் தனது பயணத்தை ஆரம்பித்தார்.

பல தடைக்கற்கள் குடும்பம் மற்றும் உறவினர்கள் மத்தியில் வந்தாலும் மனம் தளராது சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சாதனைப் புரிய தொடங்கினார். ஆரம்பத்தில் தன்னால் முடிந்த வரை கவிதைகளை எழுத்துக்களால் பொதிக்க சில இடங்களில்

பிழைகளாகவே சித்தரிக்கப்பட, முயற்சியை கைவிடாது ஸஹ்ரா அவர்கள் தனது கவிப் பயணத்தை ஊடகத்தினூடாக தொடர்ந்தார். சில காலங்களில் எழுத்தாளராகவும் உருவாகினார்.

காதல் என்ற பெயரில் பல்வேறு பட்ட உணர்வுகளை ஆயுதமாகக் கொண்டு பல கவி வரிகளை வடிவமைத்து, அதற்கு உயிரூட்டும் வகையில் தன் குரல் ஒலியைக் கொடுத்து கவிதாயினியாகவும் வலம் வருகிறார் ஸஹ்ரா.

ஸஹ்ராவின் கவிதை வரிகளுக்கும் குரலுக்கும் அடிமையான வாசக நெஞ்சங்கள் கவிப்புயல் என்ற புனைப்பெயரினை வழங்க வையகம் எங்கும் கவிப்புயல் ஸஹ்ரா என்ற நாமத்துடன் ஒலித்துக் கொண்டிருக்கிறார்.

ஏமாற்றம், அவமானம், தோல்வி, வெற்றி, சந்தோஷம் மற்றும் கவலை போன்ற பல உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிதைகளை கவிப்புயல் ஸஹ்ரா எழுதியும் குரல் கொடுத்தும் உள்ளார். மேலும் பல உற்சாகமூட்டும் பேச்சுக்களையும் வழங்கியுள்ளார்.

ஊடகவியலாளராகவும் கவிதாயினி யாகவும் தடம்பதித்த கவிப்புயல் ஸஹ்ராவின் சாதனைகள் பல உள்ளன.

விழாவில் தமிழ் உறவுகளுடன் உரையாடுகிறார் கவிப்புயல்



உலகளாவிய ரீதியில் மூன்று தடவைகள் கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி மூன்று தடவைகளிலும் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளார் என்பது சிறப்பம்சமாகும். மேலும் கவியருவி நிறுவனத்தினூடாக இரண்டு தடவைகள் நடுவர் சான்றிதழ்களும் மற்றும் மகளிர் சான்றிதழ்களும் பெற்றுக் கொண்ட பெருமை ஸஹ்ராவுக்கு சேரும். ஜேர்மன் நாட்டு தமிழ் அருவி என்ற வானொலியின் இரவு நேர தொகுப்பாளராகவும் கடமை யாற்றுகின்றார். அதுமட்டுமல்ல சிகரங்களை நோக்கி சிறகடிப்போம் என்ற நூலின் எழுத்தாளராகவும் திகழ்கிறார். மேலும் அவரது இரண்டாவது நூலானது பெண் 'மை' எனும் தலைப்பில் சமீபத்தில் நூலொன்றும் வெளியிட்டுள்ளார். மேலும் மதுரை மற்றும் ஜேர்மன் இணைந்து வழங்கும் கவிதைப் போட்டிகளுக்கு குரல் கொடுத்து உயிர்ப்பித்துக் கொண்டும் இருக்கிறார்.

இதுமட்டுமல்ல *Blue print* ஊடகத்தின் செய்தி வாசிப்பாளராகவும் *Maxtamil* ஊடகத்தின் செய்தி மற்றும் அறிவிப்பாளராகவும் பிரான்ஸ் தாய்மன் தொலைக்காட்சி அலைவரிசையின் செய்தி வாசிப்பாளராகவும் இரு வருடகாலமாக பணிபுரிந்த அனுபவத்தை கொண்டவராக திகழ்கிறார் நம் கவிப்புயல் ஸஹ்ரா அவர்கள்.

யூடியூப் பக்கத்தில் கவிப்புயல் என்ற நாமத்தில் பல சாதனைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. அதனை உறுதிப் படுத்தவே கவிப்புயல் என்ற பெயரில் பல போட்டிகளை நடாத்தி வெற்றிப் பெற்றவர்களுக்கு பதக்கங்களையும் சான்றிதழ் களையும் வழங்கி வருகிறார். மேலும் விழியே கதை சொல் என்ற தளத்தினூடாக யூடியூப் இல் இளம் எழுத்தாளர்களுக்கான களத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்.



பெண்மை நூல் வெளியீட்டு விழவில் கௌரவிக்கப்படுகிறார்

இது மட்டுமன்றி இவரது குரலானது பிரான்ஸ், கட்டார், இந்தியா, இலங்கை மற்றும் ஜேர்மன் போன்ற 5 நாடுகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பது பெரும் சாதனையாகும். விருது பெற்ற பல விசேட நபர்களினாலும் நேர்காணல் செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

சமீப காலத்தில் கனடா விழித்தெழு அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட 100 பெண்களுக்கு சிறந்த ஆளுமை விருது வழங்கும் விழாவில் இளம் வயதில் சிறந்த ஆளுமை பெண் விருதினை பெற்றுக் கொண்டுள்ளார் கவிப்புயல் ஸஹ்ரா என்பது மாபெரும் வெற்றிச் சாதனையாகும்.

மேலும், *corona* காலத்தில் மாணவர் களின் நலன் கருதி இனைணயம் மூலம் இலங்கை முழுவதும் பயனாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட EDU *FREE ACADEMY* ஆனது இலவசமாக கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். அதில் பொது மேலாளராக *(genral manager)* பணியாற்றி வருகிறார். அதுமட்டுமல்லாமல் அண்மையில் இலங்கை யின் *ICONIC YOUTHS* சமூக சேவை அமைப்பின் பெண்கள் விவகாரங்களின் இளைஞர் அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கல்வியிலும் மற்றும் ஊடகத்துறையிலும் மாத்திரம் சிறப்புத் தேர்ச்சிப் பெற்று நிற்காமல் விளையாட்டுத் துறையிலும் பல வெற்றிகளை ஈட்டியுள்ளார் கவிப்புயல் ஸஹ்ரா. வலைப்பந்து, ஓட்டப் பந்து, அஞ்சலோட்டம் மற்றும் கரப்பந்து போன்ற பல விளையாட்டுக்களில் பாடசாலையில் பங்குபற்றி வெற்றி



# நூல் மதிப்புரை

**பெண்மை**

நூலாசிரியர் : பாத்திமா ஸஹீரா

பக்கங்கள் : 33 + xxii
விலை : 280 இலங்கை

தொடர்புகளுக்கு : 0762786034

பெண்மை எனும் தலைப்பில் ஸஹ்ரா நிஸ்ஃபர் எழுதியிருக்கும் நூல் அவரின் இரண்டாவது நூலாகும். இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் மாத்தளை ஆமினா தேசியப் பாடசாலையில் தரம் 13 இல் கற்கும் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. 12 கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவந்திருக்கும் இந்நூலில் இன்றைய நவீன உலகிலும் பெண்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளை வெளிச்சம் போட்டுக்காட்டி வேண்டுகோளும் முன்வைத்திருக்கிறார். ஏறக் குறைய வலிமிகு உணர்வுகளில் ஒன்றி வலிமையான வார்த்தைகளை உலவ விட்டுள்ளார். பெண்மை என்பது போற்றப்பட வேண்டியது. ஆயினும் இவை பல இடங்களில் வெறும் வாய் வார்த்தையாக, மாயையாக இருப்பதை தன் நூலில்

வாகை சூடியுள்ளார்.

இவரின் எதிர்கால இலட்சியமாக சர்வதேச ஊடகவியலாளராகவும் இலங்கையின் சிறந்தப் பேச்சாளராகவும் வர வேண்டும் என்பதே ஆகும்.

கவிப்புயல் ஸஹ்ரா அவர்களின் உற்சாகமூட்டும் வரிகள்......

பிற மனிதர்களோடு நம் வாழ்வை ஒப்பிட்டு பார்க்க கூடிய மனோநிலை எப்போதும் நமக்குள்ளே இருந்து கொண்டு தான் இருக்கின்றது. இதனால் தான் நம் வாழ்வில் முன்னேறும்படி நம்மை தேடி வருகின்ற வாய்ப்புக்களை இழந்து பலரால் நிராகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இந்த உலகம் இருக்கே தோற்கும் போது எப்போதும் நம் மீது சலிப்படைந்து கொண்டு தான் இருக்கும். சில தடவைகள் முயற்சித்து உங்களது திறமைகளை நிரூபித்து விட்டால் அவ்வப்போது நமக்கு ஏற்படுகின்ற தோல்விகளை பெரிதாக தனக்குள் எடுத்துக் கொள்ளாது. எனவே உங்களது முயற்சிகளினை முடிந்தவரை முன்னோக்கி கொண்டு செல்லுங்கள். தோல்வியின்றி இங்கு எவரும் வெற்றியினை ருசித்தது கிடையாது



பல இடங்களில் பிரதிபலித்திருக்கும் இவ்விளம் நூலாசிரியை, சமூகத்துக்கு விழிப்புணர்வு கொண்டு வரும் வகையில் தன் கண்ணோட்டத்தை மிகச் சிறப்பாக எடுத்தியம்பி இருக்கிறார் என்பதைச் சொல்லியாக வேண்டும்.

கணவன் மனைவி சந்தேகம் எனும் தலைப்பில்'ஒருவர் மீதான சந்தேகம். அதனை ஒருவித தேடல் என்றுதான் கூறவேண்டும். நெருக்கமானவர்களிடம் குறைகளைத் தேடப்போய் கடைசியில் அவர்கள் நடத்தை முழுவதுமே குறைகளாகப் பார்க்கச் செய்யும் மாயை அது. மயானப்பூமிகளில் பறிக்கப்படும் மாயப்பூக்கள் அவை' எனக் குறிப்பிடுகிறார். உண்மைதான். அவை இருளின் மாயவெளியில் வண்ண வானவில்லைத் தேடுவதாகவே அமையும்.

ஒரு பெண் எழுத்தாளராக தன் சமூகத்தின் பிரதிநிதியாக, தன் பெண் இனத்துக்கு இழைக்கப்படும் அநீதிகளை ஆக்ரோஷமாக சுட்டிக்காட்டும் இவரின் வரிகள், மிகுந்த வலியைச் சுமந்திருப்பதும் அவற்றிலிருந்து விடுபட அவரின் எழுதுகோல் பிரயத்தனப் படுவதும் நிதர்சனமாகத் தெரிகிறது. இந்த கொடுமைகளில் இருந்து பெண்களை எப்படியும் மீட்டெடுக்க வேண்டும் என்ற அவரின் ஆதங்கமும் புரிகிறது. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவது முதலில் தன் பிறந்த வீடுகளில் இருந்துதான்




என்ற உண்மையை பட்டவர்த்தனமாகப் போட்டுடைக்கும் இந்த இளம் எழுத்தாளரின் துணிவைப் பாராட்டுகிறேன். இவர் போன்ற துடிப்பானவர்கள்தான் நம் சமூகத்துக்கு ஆணிவேராய் திகழ்வார்கள். கோழையாய் பயந்து ஒதுங்கும் பெண்கள் இவரை நகலெடுத்து சக்தி பெற வேண்டும். சாதிக்க வேண்டும். ஸஹ்ரா நிஸ்ஃபரின் எழுச்சி மிக்க கட்டுரைகள் நல்லதோர் சமூக மாற்றத்துக்கு வித்திடும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இவரின் எழுத்துகளால் வன்முறைகளற்ற பெண்கள் சாம்ராஜ்யம் மிளிரட்டும்!இவரின் எழுதுகோல் இன்னும் பல அநீதிகளை அம்பலமாக்கி பெருமையுடன் தலை நிமிரட்டும் என வாழ்த்துகிறேன்.

தமிழ்நெஞ்சம் அமின்






# நூல் மதிப்புரை

தோழர்சிங்காரவேலர்
நூலாசிரியர் தமிழ்நெஞ்சம் அமின்

விலை : 120

வெளியீடு :

ஃபிரெஞ்சு பதிப்பகம்
7, தனலட்சுமி கார்டன், முதல் தெரு,
சோலை நகர், முத்தியால்பேட்டை
புதுச்சேரி 6 605 003

மின்னஞ்சல் : frenchpublication@gmail.com
அலைபேசி : +91 9750557987

சிந்தனைச்சிற்பி சிங்காரவேலரின் சிறப்பைப் பற்றிய பல்வேறு மேதைகளின்ருத்துப் பூமாலை ஒரு கரம்..! கவிஞர்களின் பாமாலை ஒரு கரம்..! என இரண்டு கரங்களுக்கு இடையில் வீற்றிருக்கும் பச்சிளங்குழந்தை போல நெஞ்சுக்கு நெருக்கமாகித் தவழ்கிறது "தோழர் சிங்காரவேலர்" என்னும் இந்நூல்.

பண்டிதர் சாது.அரிமாவளவன் அவர்களின் சீர்மிகு வாழ்த்துரை, பாவலர்மணி. இராமவேல்முருகன் அவர்களின் நேர்த்தியான அணிந்துரை

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி அவர்களின் சிறப்பான பதிப்புரை

இவற்றுடன்

நூலின் ஆசிரியர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் ஆதங்கம் நிறைந்த என்னுரை,

அத்தனையும் ஒரே மூச்சில் இந்நூலைப் படித்துத் தீர்த்திட வேண்டும் என்ற உத்வேகத்தை அளிக்கிறது,

ஏனென்றால் தோழர் என்றதும் சிங்காரவேலர் என்றால் யாரோ ஒரு கம்யூனிஸ்ட்காரர் போலும் என நினைத்து, இப்புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவோருக்கு புத்தகத்தைப் புரட்டப்புரட்டத் தொடர்கிறது ஏராளமான விந்தைச் செய்திகள்..!

அத்தனையும் சிங்காரவேலரை உலகுக்கு உரித்துக் காட்டும் உண்மை செய்திகள்.!

*
இவர்தான் இந்தியாவின் முதல் காம்ரேட்
*
இவர்தான் முதன்முதலில் தமிழகத்தில் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடினார்.
*
மதிய உணவு திட்டத்துக்கே முன்னோடி இவர்.

*
விடுதலை போராட்டத்தில் காந்தியின் தலைமையில் பங்குகொண்டிருந்த இவர் காந்தியடிகளின் கருத்துக்கும் அஞ்சாமல் தன் கருத்துகளை யங்இந்தியா பத்திரிக்கையில் பதிந்துள்ளார்.
*
மீன்கூடையிலும் பூக்கூடையிலும் பதுக்கிக் கம்யூனிச நூல்களை கடல்கடந்து வரவழைத்துப் படித்ததோடு நில்லாமல் தன் இல்ல நூலகத்திலேயே 20000 நூல்களை சேமித்து வைத்துள்ளார்
*
தன் அஞ்சா நெஞ்சத்தால், பொதுவுடைமை தாகத்தால், தணியாத நாட்டுப்பற்றால், நாடெங்கிலும் தொழிற்சங்கங்களை அமைத்து தொழிலாளர்களின் நலத்தைக் காப்பதில் முதலிடமும் முதன்மையிடமும் பெற்றுள்ளார் ; என்பன போன்ற அரிய செய்திகளை நேரில் பார்த்ததைப் போன்ற உணர்வெழும்படி அன்றைய சூழலில் நடந்த நிகழ்வுகளுடன் சரியாகத் தொடர்புபடுத்தி விரிகிறது இந்நூல்..!

தொடர்ந்து படிக்கப் படிக்க "இத்தனை சிறந்த சிந்தனையாளரின் செயல்பாடுகள் அத்தனை பெரிய அளவில் வெளியில் தெரியவில்லையே.." என்று என்னுரையில் ஆசிரியர் கூறியிருப்பதையே வாசகனின் மனதும் அசைபோடுகிறது.
அதற்குக் காரணம், "அவர் பிறந்த சமூகந்தானா?" என்ற வினாவையும் பரிசீலிக்கிறது.

பாவேந்தர் பாரதிதாசன் தொடங்கி, அறிஞர் அண்ணா, மற்றும் உருசிய நாட்டின் வரலாற்று பேராசிரியர் ஒருவர், தோழர்.நாகை முருகேசன், மா.பொ.சிவஞானம், ஆனைமுத்து அய்யா, தந்தை பெரியார், திராவிடர்க் கழகத் தலைவர் கி.வீரமணி பேராசிரியர் முத்துக்குணசேகரன் என்று ஏகப்பட்ட



மேதைகளின் உணர்வுப்பூர்வமான வார்த்தைப் பூக்களால் தொடுக்கப்பட்ட இந்நூலின் முதல் அத்தியாயம், 1950-60 களின் தஞ்சாவூர்க் கதம்பமாக மணக்கிறது. (அப்போதெல்லாம் கதம்பம் சாமிக்கு மட்டுமல்ல.. பெண்களும் சூடும்படி தாமரைஇதழ், மருதாணிப்பூ,துளசி, வெட்டிவேர், மரிக்கொழுந்து, மல்லிகை, செவ்வந்தி, வாடாமல்லி, சாமந்தி ஆகிய மலர்களால் அடர்த்தியாகத் தொடுக்கப்பட்டு கனக்குமாம் தஞ்சாவூர் கதம்பம்)

சிங்காரவேலரின் ஆரம்பகாலங்கள், அவரது குடும்ப வாழ்க்கை, சாதியக்கொள்கை, பொதுவுடமை சிந்தனை, விடுதலை போராட்ட உணர்வு,மொழியறிவு, அறிவுத்திறம்,மகளிர் நலச் சிந்தனை என விரியும் இந்நூல்

*சிங்காரவேலரின் புகழ்பாடும் பாவேந்தரின் பாவில் தொடங்கி கலைமாமணி அசோகா சுப்பிரமணியன் முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி, பாவலர்மணி இராம வேல்முருகன், பாவலர் நெய்தல் நாடன், தென்றல் கவி, பாவலர் சரஸ்வதி பாஸ்கரன், பாவலர் முனைவர் சி.அ.வ இளஞ்செழியன், பாவலர் வா.சண்முகம் கவிஞர் மா.பாலசுந்தரம் வீரா பாலச்சந்திரன் கவிஞர் க.இராணி லட்சுமி கவிஞர் சிங்காரசுகுமாரன் ஆகியோரின் வரிகளோடு வாழ்த்தாக நிறைவடைகிறது இந்நூல்.*

*விலைகொடுத்து நான் வாங்கி வாசித்துவிட்டேன்.*

*விலைமதிப்பில்லா இந்நூலை நீங்களும் வாங்கி வாசிக்க, யோசிக்க வேண்டாம். வாழ்த்துகள்..!*

*நன்றி..! வாழ்த்துகளுடன்*

பொறியாளர் **எம்.ஆர்.ஜெயந்தி,**
பெரியார் சமுதாய வானொலி
பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

## தொலைந்து போகிறேன்...

அலுவலக வேலைகளில்
மூழ்கும் போதெல்லாம்
உன் அலைப்பேசி அழைப்பு
ஆறுதல் தந்து தேற்றும்!

மனச்சோர்வின் போது
உனது வார்த்தைகளோ வலுவூட்டும்
கொஞ்சிப்பேசும் உனது
காந்தக்குரலோ ஆற்றுப்படுத்தும்!

இப்போதெல்லாம்
என் அலைப்பேசியில்
என்னை அழைப்பதில்லை
உன் பெயர்!

பேசிய வார்த்தைகளை சேகரித்த
நாட்கள் போய் -இனி
நீ பேசாத நாட்களெல்லாம்
என் ஆயுள் குறைப்பு நாட்களே!

பேசாத வார்த்தைகளுக்கே
வலிமை அதிகம் என்பதால்
என்னை மரணவாசலில் நிற்கவைத்து
மௌனத்தையே பரிசளிக்கிறாய்!

வழக்கம்போல்
அலுவலக வேலைகளில்
தொலைந்துப்போகிறேன்
உன்னை தொலைத்த நான்!

**- பெ.விஜயலட்சுமி,** காஞ்சிபுரம்

## ஒருதலை காதலின் வேர்கள்

ஒரு
பூவின் மேல் அமரும்
பட்டாம்பூச்சியை போல்
என் காதல்
உனக்குள் அமர்ந்து பறந்து எழுகிறது

அந்தியில்
நீ பேசும் ஒவ்வொரு சொல்லின் சப்தமும்
மஞ்சள் வெயிலில் கலந்த
ஒலி கலவையாய் ஒளிர்ந்து ஓடுது

உன்
இதழில் பட்டெழுந்த காற்றின்
முத்தத்தின் ஈரம் - மெதுவாக
சாரல் தூவி என்னை நடுங்கச் செய்கிறது

என்
அடர்ந்த இருளில்
கவிதை நெருப்பினில் நினைவுகளை
தீ மூட்டி தனிமையில் காய்கிறேன்

மர உச்சிக் கிளையிலிருந்த
முறிந்த இலையை போல்
மேலிருந்து கீழே விழுகிறேன்
உன்
பாதம் பட்டாவது
மீண்டும் தளிரட்டும் என் ஒருதலை
காதலின் வேர்கள் ...

**- கவிஞர் பாக்கி**

# ஓடும் வரை ஓடு



ஓடும் காலம் ஓடும் வரையில்
ஓடிக் கொண்டே நானிருப்பேன்
தேடி வந்த தெய்வம் வந்தால்
திகைத்தே நானும் வானளப்பேன்
பாடும் பறவை பாடி அழைக்க
பரிசாய் இசையை நானளிப்பேன்
வாடி நின்றால் வாட்டம் அறிந்து
வண்ண பூக்கள் தேனளப்பேன்

சின்ன சின்ன செயலில் நானும்
சிறப்பாய் நடக்க எண்ணிடுவேன்
வண்ண வண்ண நிறங்கள் போல
வாழ்வில் வசந்தம் நாட்டிடுவேன்
கன்னக் கதுப்பின் சிவந்த குழந்தை
கன்னம் கிள்ளி பூத்தொடுப்பேன்
வெண்மை நிறத்தின் வானில் நானும்
வேண்டும் அழகைப் பூசிடுவேன்

இறையை வணங்கி ஈந்து மகிழ்ந்து
எந்தன் காலம் நகரட்டும்
திறைபோல் தாவி தினமும் வாழ்வில்
திளைத்துப் பாடி மலரட்டும்
கறைகள் இல்லா வாழ்வில் மனமும்
கவனம் கொண்டு விளங்கட்டும்
குறைகள் கூறா கொள்கை வைத்தே
கூடி வாழக் கற்கட்டும்

**- தமிழ்நெஞ்சம் அமின்**



பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
மே 2022

## கெண்ட மனச அள்ளிக் கொள்ள வா

கொண்டையிலே பூச்சூடி மணச்
செண்டு போல போற புள்ள

தண்டை அணியக் கால் நோகும்
தண்டு போன்ற இடை துவளும்

மொண்டு நீயும் நீர்க் குடத்த
கொண்டு போகையில் ஏம்மனச

துண்டு போட்டு துவம்சம் செய்து
கொன்று போடப் பாக்குறியே கண்ணே

நொண்டிச் சாக்குப் பல சொல்லி
சண்டை போட்டுப் போற பொண்ணே

சண்டாளி இவ சாலப் பார்வ
எண்ட மனச சாய்ச்சிப் போட்டு

கொண்டேன் ஒன்னோட நெசமாக் காதல்
வண்டாக வருவேன் பூவே ஒன்னத்தேடி

திண்டாடிப் போனேன் தேனே உன்னால
கெண்ட மனச அள்ளிக்கொள்ள வாபுள்ள

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்